Puthiya Neethi
புதிய நீதி

# புதிய நீதி

முரசம் 01
முழக்கம் 01
விலை ரூபா.30

Web: www.ndpsl.org

# விலை உயர்வை தடுத்து நிறுத்து!

## நாடு எங்கே செல்கின்றது?



நன்றி: Sunday Times

"போர் முடிவடைந்து விட்டது. பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டுள்ளது. இனிமேல் நாட்டில் அபிவிருத்திக்கான போரே நம்முன் உள்ளது. நாம் முன்னெடுக்கும் அபிவிருத்தியானது இலங்கையை ஆசியாவின் அதிசயமாக மாற்றப் போகிறது". இவ்வாறு நிறைவேற்று அதிகார சக்தி மிக்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் அவரது சகோதரர்களும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கமும் போர் முடிந்த கையோடு உரத்து முழக்கமிட்டனர். அதனை நாட்டு மக்களில் பெரும்பான்மையோர் அப்பாவித்தனமாக நம்பினர். இப்போது, மூன்று ஆண்டுகள் கழிந்த பின், நாட்டின் அபிவிருத்தி என்ன நிலையில் இருக்கிறது என்பதை உற்று நோக்க வேண்டியுள்ளது.

நாட்டின் பொருளாதாரம் நாளாந்தம் மோசமடைந்து செல்கிறது. ரூபாவின் பெறுமதி குறைந்து 13.7 சதவீதத்தால் கீழிறங்கிவிட்டது. ஒரு அமெரிக்க டொலரின் பெறுமதி 135 ரூபாவாக அதிகரித்துள்ளது. இது மேலும் உயரும் அபாயமும் காணப்படுகிறது. அதனால் இறக்குமதிப் பொருட்களின் விலைகள் அதிகரித்தபடி உள்ளன. நாட்டின் பண வீக்கம் 7 சதவீதமாக அதிகரிந்துள்ளது. அதேவேளை, ஏற்றுமதியானது 11 வீதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளது. இவற்றின் மத்தியில் வெளிநாட்டுக் கடன் 27 பில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்ந்துள்ளது. போர் முடியும் தருவாயில் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து 2.6 பில்லியன் (260 கோடி) அமெரிக்க டொலர்களை மூன்று தவணைகளில் கடனாகப் பெற ஒப்பந்தம் செய்யப்பட்டது. கடந்த மாதம் அக் கடனின் இறுதித் தொகையும் பெறப்பட்டுள்ளது. இப்பொழுது

தொடர்ச்சி 2ம் பக்கம்



## மேனனின் வருகையும் இந்தியாவின் உட்கிடக்கையும்

சிவசங்கர் மேனன் இலங்கைக்கு வந்ததன் நோக்கம் என்ன என்ற கேள்விக்கு எளிதான மறுமொழி ஒன்று இருக்கிறது. சரியான மறுமொழி இன்னொன்று இருக்கிறது. இவ்வாறான விடயங்களில் நமக்கு என்றுமே சரியான மறுமொழி சொல்லப்படுவதில்லை. அது தெரியாது என்பதால் அல்ல. அதைச் சொல்வது சங்கடமானது என்பதால் மட்டுமே. சிவசங்கர் மேனனின் வரவையிட்டுப் பல விதமான கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. அவர் இலங்கை அரசாங்கம் தேசிய இனப் பிரச்சினையைப் பற்றி ஏதாவது செய்தாக வேண்டும் என்று சொல்லத்தான் வந்தார் என்பது பொதுவாகச் சொல்லப்படுவது. அது இந்தியாவிற்கு வசதியான ஒரு பொய். அது இலங்கை அரசாங்கத்திற்கும் வசதியான பொய்.
இந்தியாவின் ஜனாதிபதியாக வரவுள்ளவர் என்று சொல்லப்படும் பிரணாப் முகர்ஜி உட்படப் பலர் இலங்கைக்கு வந்து போயிருக்கின்றார்கள். ஆனால் அவர்களில் எவருமே தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதைப் பற்றிய அக்கறையுடன் வந்து போகவில்லை. 1987ல் செய்த உடன்படிக்கையில் இந்திய நலன்களை வலியுறுத்தும் பகுதிகள் பற்றி இந்தியா கவனமாக இருந்த அளவிற்குத் தேசிய இனப் பிரச்சினையின் தீர்வு பற்றிய பகுதிகளைப் பற்றி அக்கறை காட்டியதா என நாம் சிந்திக்க வேண்டும். 1987 உடன்படிக்கையின் பின்பு இலங்கை அரசாங்கத்தைத் தனக்கு நட்பானதாகவும் இலங்கையை இந்தியாவின் அரசியல் பொருளாதார ராணுவ ஆதிக்கங்களுக்கு உட்பட்டதாகவும் வைத்திருக்கிறதில் மட்டுமே இந்திய அரசு கவனம் காட்டி வந்தது. அது இன்றும் மாறவில்லை.

ராஜபக்ச சீனாவின் பக்கம் சாய்ந்ததாலேயே இந்தியா தமிழ் மக்களின் அழிவிற்கு உதவியது என்பது செல்லாத ஒரு விளக்கமாகும். அமெரிக்காவும் இந்தியாவும் இப்போது நெருங்கி வந்தாலும் பிராந்திய மேலாதிக்க விடயத்தில் அமெரிக்கா இந்தியாவின் பூரண ஆதிக்கத்தை விரும்பவில்லை. ஒவ்வாரு தென்னாசிய நாட்டிலும் தனது அதிகாரத்தை நிலைநாட்ட அது விரும்புகிறது. எனவே இந்தியாவுடனான ஒரு போட்டியும் இருந்தே வருகிறது.

1987 இந்திய-இலங்கை உடன்படிக்கையின் படி, திருகோணமலையில் உள்ள 99 எண்ணெய்த் தாங்கிகளில் எதையுமே இந்திய அனுமதியின்றி எந்த நாட்டிற்கும் குத்தகைக்கு விட இயலாது. இந்தியா அவற்றில் 15 தாங்கிகளைத் தனக்காகப் பெற்றுள்ளது.

தொடர்ச்சி 2ம் பக்கம்

## சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகள் மீது மிலேச்சத்தனமான தாக்குதல்

### புதிய ஜனநாயக மா.லெ கட்சியின் வன்மையான கண்டனம்

"கடந்த மாதம் 29ம் திகதி வவுனியா சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகள் மீது படையினர் மோசமான தாக்குதலை மேற்கொண்டனர். படுகாயங்கள் அடைந்த அவர்களை மகர சிறைச்சாலைக்கு மாற்றிய பின்பு அங்கும் வைத்துத் தாக்கியுள்ளனர். மேற்படி தாக்குதல்களில் மோசமான படுகாயங்களுக்கு உள்ளானவர்களில் ஒருவரான கணேசன் நிமலரூபன் என்ற இளைஞன் இம் மாதம் 4ம் திகதி உயிரிழந்துள்ளார். தமிழ் அரசியல் கைதிகளின் மீதான மேற்படி கொடூரத் தாக்குதலும் படுகொலையும் மிலேச்சத்தனமானதும் பேரினவாத பாசிசத்தனம் கொண்ட தாக்குதலுமாகும். அது மட்டுமன்றி இறந்த இளைஞனின் வெற்றுடலைக் கூட பெற்றோரிடம் ஒப்படைக்க மறுத்து வரும் அக்கிரமத்தை மகிந்த சிந்தனை ஆட்சி செய்து நிற்கிறது. இதனை எமது கட்சி மிக வன்மையாகக் கண்டிக்கிறது. நீண்ட காலமாக விசாரணை இன்றி அரசியல் கைதிகளைத் தடுத்து வைத்திருந்து வருவதன் விளைவே மேற்படி கண்டனத்திற்கும் துயரத்திற்குமுரிய சம்பவமாகும் என எமது கட்சி சுட்டி காட்டுகிறது". இவ்வாறு புதிய ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் அரசியல் குழு சார்பில் அதன் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவ் அறிக்கையில், தமிழ் அரசியல் கைதிகள் ஐந்து பத்து பதினைந்து வருடங்களுக்கு மேலாக விசாரணை இன்றித் தடுத்து வைக்கப்பட்டு வந்துள்ளனர். அவர்களை விடுதலை செய்யும்படி கோரிப் பல்வேறு அழுத்தப் போராட்டங்கள் சிறைச்சாலைகளுக்கு உள்ளேயும் வெளியேயும் நடாத்தப்பட்டு வந்துள்ளன. ஆனால் பௌத்த தர்மம் பேசும் ஆட்சியினர் அவர்களுக்கான விடுதலைக் கோரிக்கைகளைச் செவிகளில் வாங்கவே இல்லை. அதற்குப் பதிலாக சிறைச்சாலைகளில் தமிழ் அரசியல் கைதிகள் மீது பேரினவாத ஒடுக்குமுறை மமதையும் தாக்குதல்களும் மேற்கொள்ளப்படுகின்றன. இத் தாக்குதல் முன்னைய சிறைச்சாலைத் தாக்குதல்களையும் படுகொலைகளையும் நினைவுபடுத்துகின்றன. 1983ல் வெலிக்கடைப் படுகொலைகளும் 2000ம் ஆண்டில் பிந்துனவெவ புனர்வாழ்வு முகாம் படுகொலைகளும், களுத்துறைச் சிறைச்சாலைத் தாக்குதல்கள், பூசாச் சித்திரவதைகள் போன்றவற்றின் தொடர்ச்சியாகவே தற்போதைய வவுனியாச் சிறைச்சாலைத் தாக்குதலையும் படுகொலையையும் காண முடிகிறது. புத்தரின் போதனைகள் பற்றியும் பௌத்த தர்மம் பற்றியும் நாளாந்தம் பரப்புரை செய்து வரும் இன்றைய ஆட்சியில் இவ்வாறான மிலேச்சத்தனமான தாக்குதலும் மிருகத்தனமான படுகொலையும் இடம்பெற்றிருப்பது ஆட்சித் தலைவர்களை வெட்கித் தலைகுனிய வைத்துள்ளது.

இக் கொடூரச் சம்பவத்திற்குப் பின்பாவது அனைத்து அரசியல் கைதிகளையும் பொதுமன்னிப்பின் கீழ் விடுவிக்க அரசாங்கம் முன்வரவேண்டும் என்பதை எமது கட்சி வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது என அவ் அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

•••

## புதிய நீதி

*பத்திரிகைப் பதிவு சிக்கல் காரணமாக புதிய பூமி தனது பெயரை புதிய நீதி என மாற்றம் செய்துள்ளது. புதிய பூமியில் வெளி வந்த கட்டுரைத் தொடர்கள் தொடர்ந்தும் புதிய நீதியில் வெளிவரும். சுந்தாதாரர்கள், விநியோகஸ்தர்கள், விற்பனையாளர்களுக்கு புதிய நீதி அனுப்பி வைக்கப்படும்*

*ஆசிரியர் குழு/ நிர்வாகம்*


- மக்களின் பிரச்சினையை திசை திருப்ப தேர்தல் தருவிழா, பக்-03
- மலையக தேசிய இனமும் அங்கீகாரமும், பக்-04
- சப்ரகமுவ தேர்தலும் தமிழர் பிரதிநிதித்துவமும், பக்-04
- தமிழ் மக்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் தெரிவுகள், பக்-05
- வடகிழக்கு நிலப்பறிப்பும் ஆக்கிரமிப்பும், பக்-07
- வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை, பக்-08
- இலங்கையின் இருபதாம் நூற்றாண்டு, பக்-10
- தலைகளை மாற்றிப் பயனேதும் விளையாது, பக்-14

# தோழர் சுகேயையும் ஏனைய அரசியல் கைதிகளையும் விடுதலை செய்

புதிய ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் முன்னிலைத் தோழர் எஸ். சுகேசனன் இன்று வரை விடுவிக்கப்படவில்லை. குடந்த 14.02.2007 அன்று அவசரகால கட்டத்தின் கீழ் கட்சியின் ஐந்து தோழர்கள் கைது செய்யப்பட்டனர். ஐந்து வருடங்களுக்கு மேலாகிய நிலையில் இதுவரை அவர் விடுதலை செய்யப்படவில்லை. தேரழர் சுகேசனன் நீண்ட நாட்களாக கடும் நோய்க்குள்ளாகியுள்ள நிலையில் அவருக்கு உரிய மருத்துவ சேவை மறுக்கப்பட்டுள்ளது.

தோழர் சுகெசனன் எவ்வித ஆதாரமும் அற்ற குற்றச்சாட்டுக்களின் கீழ் கைது செய்யப்பட்டார் என்பதுடன் அவரை அரசியல் உள்நோக்கத்துடனேயே நீண்ட காலம் அரசாங்கம் அவரை தடுத்து வைத்துள்ளது. அமெரிக்க சார்பு அரசியல் கைதிகள் அழுத்தங்களின் பேரில் விடுதலை செய்யப்படும் அதேவேலை நாட்டின் உண்மையான விடுதலைக்கு போராடும் மக்கள் சிறையில் வாடுகின்றனர். பு.ஜ.மா.லெ.க தோழர் சுகேசனனையும் ஏனைய சுகல அரசியல் கைதிகளையும் உடணடியாக விடுதலை செய்ய வலியுறுத்துவதுடன் அரசின் எதேச்சதிகாரப் போக்கினையும் புதிய நீதி கண்டிக்கின்றது.

மேனன்...1ம் பக்கத் தொடர்ச்சி

இப்போது இலங்கையில் தன்னை வலுவாக நிலைநிறுத்தத் துரிதமாகச் செயற்படும் அமெரிக்கா அத் தாங்கிகளில் சிலதைத் தனக்காகப் பெற முயலுகிறது. இவற்றுக்கான பேரங்கள் நடைபெறுகின்ற ஒரு பின்னணியிலேயே மேனனின் வருகை நிகழ்ந்துள்ளது. அண்மையில் பலாலி ராணுவ விமானத் தளத்தை விருத்தி செய்ய இந்தியா வழங்க முன்வந்த உதவியை இலங்கை மறுத்ததும் கவனிக்க வேண்டிய விடயமாகும்.

சில மாதங்களுக்கு முன்பு வந்துபோன பிரமுகரான அயல் அலுவல்கள் அமைச்சர் கிருஷ்ணாவுடன் பேசப்பட்டது இந்தியாவுடனான சுதந்திர வணிக உடன்படிக்கையின் விரிவுப்படுத்தலே ஒழியத் தமிழரின் பிரச்சினையல்ல. இம்முறை வந்துபோயிருகின்ற பிரமுகர் மேனனின் வருகை இந்தியாவின் ராணுவ மேலாதிக்கத்தை நிலை நிறுத்துவதற்காகவே ஒழியத் தமிழரின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கல்ல.

எனவே இலங்கையில் நடக்கவுள்ள அந்நிய நிழல் யுத்தம் இது வரை சொல்லப்பட்டு வந்த இந்திய-சீனப் போட்டியாக இல்லாமல் இந்திய-அமெரிக்க மேலாதிக்கப் போட்டியாக அமையும் அபாயம் வலுத்து வருகிறது. ராஜபக்ச ஆட்சி அமெரிக்காவுக்குப் பணிந்து போகத் தொடங்கிவிட்டது என்பது மெல்லமெல்ல வெளிச்சத்துக்கு வருகிறது. அது நமது மகிழ்ச்சிக்குரியதல்ல. அது இந்திய அரசின் மகிழ்ச்சிக்குரியதுமல்ல. ஆனால் மகிழ்ச்சியின்மைக்கான காரணங்கள் முற்றிலும் வேறானவை.

மேனன் வந்து போனதையிட்டும் ஜனாதிபதியிடம் தேசிய இனப்பிரச்சினைப் பற்றிச் சொன்னதாகச் சொல்லப்பட்டதையிட்டும் த.தே.கூட்டமைப்பும் தமிழ் ஊடகங்களும் ஆனந்தக் கூத்தாடுவது அறிவுடைமையாகாது.
இந்த நாட்டில் எந்த அந்நிய நாடும் ஆதிக்கம் செலுத்துவது நாட்டுக்கோ மக்களுக்கோ நல்லதல்ல என்பதை நாம் எல்லோரும் உணர்ந்து செயற்படுவது நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் நாம் செய்யவேண்டிய ஒரு கடமையாகும்.

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிர்வாகத்திற்கு எதிரான

# வவுனியா தொழிலாளர் போராட்டம்

வவுனியா நகர சபை சுகாதாரத் தொழிலாளர்கள் நான்கு நாட்கள் தொடர் பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். வவுனியா நகரசயையின் கீழ் பதின்மூன்று கிராமங்களுக்கு உட்பட்ட இடங்களில் கொட்டப்படும் திண்மக் கழிவுகளை சுத்தம் செய்யும் பொறுப்பு நகர சபை நிர்வாகத்துக்கு உண்டு. ஆதற்காக வரியும் அறவிடப்படுகிறது. அந்த வகையில் நகர சபை நிர்வாகம் சுகாதாரத் தொழிலாளர்களை அத் திண்மக் கழிவுகளை அகற்றுவதற்கு பயன்படுத்தி வருகிறது. அத் தொழிலாளர்கள் அப் பணியில் ஈடுபடும் போது தங்களைப் பாதுகாத்துக் கொள்வற்காக சுகாதார உபகரணங்களை நகரசபை நிர்வாகத்திடம் பல முறை கேட்டும் எதுவித நடவடிக்கையையும் நிர்வாகம் எடுக்கவில்லை.
இப்பின்னணியில் 20.06.2012 அன்று ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் செய்யப்பட்டது. ஆனாலும் அதன்பின் னரும் தீர்வு வழங்கப்படாத நிலையில்
02.07.2012 தொடக்கம் நகர சபை சுகாதார தொழிலாளர்கள் தொழிற்சங்க நடவடிக்கையையும் தொடர் பணிப் பகிஷ்கரிப் பையும் மேற்கொண்டனர்.

அந்தவகையில் அவர்களது கோரிக்கைகளாக
1. தற்காலிகமாக வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரியும்
2. சுகாதாரத் தொழிலாளர்கள் தமது உடல்களை சுத்தம் செய்வதற்கென குளியலறை வசதிகளைக் கோரியும் மலசலகூடம், ஓய்வறை என்பனவற்றை எற்கனவே நகரசபையால் ஒதுக்கப்பட்ட ரூபா 1,499,280. நிதியில் செய்து தரக் கோரியும்
3. நகர சபை பெண் தொழிலாளர்கள் ஒருவரிடம் பொது சுகாதார உத்தயோகத்தர்(PHI) ஒருவர் தவறாக நடக்க முயன்றமைக்கு நீதியான விசாரணை கோரியும்
4. அடிப்படைத் தொழிற்சங்க உரிமைகளை அமுலாக்கக் கோரியும்

தொடர் போரட்டத்தினை சுகாதார தொழிலாளர் தொழிற்சங்கம் முன்னெடுத்தது.

இந்த அடிப்படையில் இப்போது வவுனியா நகரசபை நிர்வாகத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே கையேற்று ஆட்சி நடாத்தி வருகின்றது. ஆனால் இதுவரையும் இப்போராட்டத்தின் நியாயத் தன்மை பற்றி நகர சபை நிர்வாகமும் சரி தமிழ்த் தேசிய கூட்டமைப்புத் தலைமையும் சரி எதுவித பதிலையும் தரவில்லை. இங்கு கவனிக்கப்பட வேண்டியது பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளவர்கள் தெற்கில் இருந்து வந்த சிங்களவர்கள் அல்ல. அத்தொழிலாளர்கள் கேட்டு நிற்பது அவர்களது தொழிற்சங்க உரிமைகளையே. அதனையே தமிழ்த் தேசியத்தின் பெயரால் ஆட்சி நடத்தும் த.தே.கூட்டமைப்பு மறுத்து நிற்கிறது. அத் தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தொழிற்சங்க தலைமையை பல முறை மிரட்டியுள்ளதோடு வவுனியா மாவட்ட நீதிமன்றில் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி நகர சபை தொழிலாளர்களுக்கான 55 வெற்றிடங்கள் இருந்தும் இது வரை அதனை நிரப்புவதற்கான எதுவித ஏற்பாடுகளையும் த.தே.கூட்டமைப்பு நிர்வாகம் சபை மூலம் செய்யவில்லை. அத்தோடு தற்காலிக தொழிலாளர்கள் ஆறு மாதத்தின் பின் நிரந்தரமாக்கப்படல் வேண்டும் என்பது இலங்கை தொழிற் சட்டமாக இருந்த போதும் ஐந்து, ஆறு வருடங்களுக்கு மேலாகியும் நிரந்தர நியமனம் வழங்காமல் இழுத்தடிப்பு செய் யப்பட்டு வருகிறது.

அது மட்டுமன்றி 2011ம் ஆண்டு நகர சபை வரவு செலவு ஒதுக்கீட்டில் சுகாதார தொழிலாளர்களது ஓய் வறை, மலசல கூடம், குளியலறை, என்பன கட்டித் தருவதற் காக ரூ 1,499,280. ஒதுக்கப்பட்டது. இந்நிதிக்கு என்ன நடந்தது என்பது இதுவரை தெரியாமலேயே உள்ளது. சுகாதார ஊழியர்களுக்கான சுகாதார பாதுகாப்புக் கவசங்கள் எதுவுமே அவர்களுக்கு வழங் கப்படாமல் உள்ளதுடன் வவுனியா நகரத்தின் அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றால் கழித்து ஒதுக்கப்பட்ட பாவனைக்கு உதவாத காலுறை, கையுறை என்பனவற்றை கொண்டுவந்து அதனை அணியுமாறு கோருவது மாநகர சபை நிர்வாகத்தின் திமிர்த்தனத்தையே எடுத்துக் காட்டுகிறது. அதனை எதிர்த்து கேள்வி கேட்கும் போது த.தே.கூட்டமைப்பு அகங்கரமாக தனது வங்குரோத்து தனத்தைக் காட்டி நிற்கிறது. அத்துடன் நகர சபை சுகாதார தொழிலாளர் தொழிற்சங்கத்தின் பெண்மணி ஒருவருடன் தகாத முறையில் பொது சுகாதார பரிசோதகர் ஒருவர் நடக்க முற்பட்டதை கண்டித்து நீதி விசாரணை கோரி சபையில் முறையிட்ட போது சபையானது நீதி விசாரணைக்குப் பதிலாகக் குறிப்பிட்டப் பெண்ணை இடமாற் றம் செய்து அனுப்பவே முன்னிற்கிறது. இதுதான் த.தே.கூ. நகரசபை நிர்வாகத்தின் இலட்சணம். தமிழ் மக்கள் இதற்காகவா த.தே.கூட்டமைப்பிற்கு வாக்களித்தார்கள். இவர்கள்தான் அடக்கப்படும் தமிழ் மக்களுக்கான விடுதலையை பெற்றுத்தரப் போகின்றார்கள். எனவே தமிழ் மக்கள் உழைக்கும் மக்கள் என்ற அடிப்படையல் ஒன்றிணைந்து தமது உரிமைகளை வென்றெடுக்க அணிதிரள வேண்டிய காலம் நெருங்கியுள்ளது.

வவுனியா நிருபர்

## வரலாறு புதியவற்றை கற்பிக்கும்

கடிகாரம்
மௌனத்துள் சப்தமிடும்
மாலைப் பொழுதுதொன்றில்
மெதுவாகப் பேசிக்கொள்கிறோம்
உன்னைப்பற்றி.

நூதனச்சாலைகளில் தொலையும்
கிரீடமும் மோதிரங்களும்
முட்டி மோதுகின்றன
உன் வீட்டு முற்றத்தில்.

எப்போதோ ஆண்ட
துட்டனொருவனின் துருப்பிடித்த
"வீரவாள்"- உன்
ஆட்சியை நீட்சி செய்ய
ஆருடத்துள் சிரிக்கிறது.

உன் மந்தைகளும், மக்களும்
உனைப்பற்றிய ஆச்சர்யங்களில்
நேற்றைப்போலவே இன்றும்...

எனினும்
உனது பயம் நியாயமானது
மக்கள் விழித்துக் கொள்வார்கள்
என்பதன் மீதும்
வரலாறு புதியவற்றை கற்பிக்கும்
என்பதன் மீதும்
உனக்கிருக்கும் பயம்
நியாயமானது.

வே. தினகரன்

கட்டுப்பாடில்லாத...1ம் பக்கத் தொடர்ச்சி

மேலும் 500 மில்லியன் (50 கோடி) அமெரிக்க டொலர்கள் கடனுக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையிலேயே மக்களது அத்தியாவசிய உணவுப் பொருட்களினதும் அன்றாடப் பாவனைப் பொருட்களினதும் விலைகள் உயர்ந்து செல்லுகின்றன. அரிசி, சீனி, கோதுமை மா, பருப்புவகைகள், மிளகாய், மல்லி, தேங்காய், மரக்கறிவகைகள் மற்றும் உணவுப் பொருட்கள் யாவும் உச்ச விலைக்குச் சென்றுள்ளன. பாணினதும் பிற உணவுப் பண்டங்களினதும் விலைகள் கூடியுள்ளன. சிறுவர் பெரியோர்கட்கான பால் மா வகைகளின் விலைகள் வாங்க முடியாத அளவுக்கு அதிகரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அன்றாட அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் உயர்ந்துள்ளமை, தமக்குத் தேவையானதும் போஷாக்குடையதுமான நிறையுணவைக் பெற முடியாத நிலைக்கு மக்களைத் தள்ளியுள்ளது. சாதாரணமாகவே சத்துணவாகக் காணப்படும் கீரைகள் இலைவகைகளே கட்டு முப்பது நாற்பது ரூபாவுக்கு விற்கப்படும் போது பிற மரக்கறி வகைகளையும் பருப்பு வகைகளையும் மக்கள் எவ்வாறு வாங்கிக் கொள்ள முடியும்? ஒரு தேங்காய் முப்பது நாற்பது ரூபாவுக்கு மேல் விற்கப்படுகிறது என்றால் மக்கள் எவ்வாறு அன்றாட உணவுப் பொருட்களை வாங்க முடியும?

ஏற்கனவே பெற்றோல் டீசல் விலை அதிகரிப்பால் போக்குவரத்துக் கட்டணங்கள் மக்கள் தாங்க முடியாத வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளன. மண்ணெண்ணை விலை அதிகரிப்பு, கிராமப்புற மக்கள், விவசாயிகள், மீனவர்கள், மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் ஆகியோரைக் கடும் பாதிப்புக்குள்ளாக்கியுள்ளது. அவற்றுடன் எரிவாயு, சீமெந்து மற்றும் கட்டிடப் பொருட்கள், உடுதுணிகள் என்பனவும் விலை உயர்வின் பிடிகளில் இருந்து தவறவில்லை. அத்துடன் மின்சார, நீர்க் கட்டனங்களும் அதிகரித்துள்ளன. மருந்து விலைகள் முன்பிருந்த விலைகளில் இருந்து பல மடங்கு உயர்ந்துள்ளன. இலவசக் கல்வி என்ற பெயர்ப் பலகையின் கீழ் மக்கள் தமது பிள்ளைகளின் கல்விக்காகச் செலவிடும்தொகை எல்லா நிலைகளிலும் அதிகரித்துள்ளது.

மேற்குறிப்பிட்ட அதிகரிப்புகள் மென்மேலும் உயர்ந்து உயர்ந்து செல்லும் அதேவேளை, சம்பள உயர்வுகள் விடாப்பிடியாக மறுக்கப்பட்டு வருகின்றன. ஆகக்குறைந்த நாட்சம்பளம் பெறும் தோட்டத் தொழிலாளர்கள் தொட்டுப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் வரையானவர்கள் கோரியுள்ள சம்பள உயர்வு மறுக்கப்படுகிறது. அவ்வாறே அரசாங்க, தனியார் துறைகளில் சம்பள உயர்வு மறுக்கப்படுகிறது. விவசாயிகளுக்கு அவர்கள் கோரும் ஒரு கிலோ நெல்லிற்கு நாற்பது ரூபா என்பது காதில் வாங்கிக் கொள்ளப்படவே இல்லை. சுனாமியால் அழிவு கண்டு வாழ்வாதாரம் இழந்த மீனவர் தொடக்கம் யுத்தத்தால் அழிவுகட்குள்ளாகி வாழ்வாதாரம் இழந்த மீனவர்கள் வரை, அவர்களது அன்றாட வாழ்வு பெரும் போராட்டமாகவே இருந்து வருகிறது. ஒட்டு மொத்தமாக நோக்கும் போது நாட்டின் ஏகப் பெரும்பான்மையான உழைக்கும் மக்களான தொழிலாளர்களதும் விவசாயிகளதும் மீணவர்களதும் தோட்டத் தொழிலாளர்களதும் வாழ்கைத் தரம் மிகத் தாழ்ந்து கொண்டு செல்கிறதையே காண முடிகிறது. தாங்கள் உழைத்துப் பெறுகிற ஊதியத்தைக் கொண்டு வாழ்கை நடத்தமுடியாது உழைக்கும் மக்கள் அல்லற்பட்டு அரைகுறை வாழ்விற்காக விலை உயர்வுகளுடன் போராடி வருகின்றார்கள். அதேவேளை, ஆட்சி அதிகாரத்தில் இருப்போரும் அமைச்சர் பெருமக்களும் அதி உயர் மட்ட அதிகாரிகளும் மேல் தட்டு வர்க்கத்தினரும் சொகுசு வாழ்கை நடத்தி வருகிறார்கள். மாதம் 1500 ரூபாயுடன் ஐந்து பேர் கொண்ட குடும்பம் கஷ்டமின்றி வாழ்க்கையை நடத்தலாம் எனக் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன அண்மையில் கூறியது மட்டுமன்றி அதனை 'நிரூபிக்கவும்' முயன்றார். அவர் அமைச்சர் என்பதால் அவருக்கு பொருட்களின் விலை உயர்வுப் பாதிப்பு ஏற்பட நியாயம் இல்லாததாலேயே இவ்விதம் கூறிக் கொண்டாரோ தெரியவில்லை.

எனவே விலைகளின் அதிகரிப்பால் பாதிக்கப்படுகிறவர்கள் சாதாரண உழைக்கும் மக்களாகவே உள்ளனர். இதில் இன, மத, மொழி, பிரதேச வேறுபாடுகள் இருக்கவில்லை. மத்தியத்தர வர்க்கத்தின் மேற் பிரிவினருக்கு இதனால் பெரும் பிரச்சினை இல்லை. அதற்குக் கீழே இருக்கும் வர்க்கப் பிரிவினருக்கே பொருட்களின் விலை உயர்வு மோசமான தாக்குதலைக் கொடுத்து வருதிறது. இந்நிலையானது, உழைக்கும் மக்களுக்குப் பல்வேறு வாழ்கை நெருக்கடிகளையும் பிரச்சினைகளையும் கொண்டு வந்துள்ளது. இல்லாமை, போதாமை, வறுமை, பசி, போஷாக்கின்மை, சுகாதார வசதியின்மை, கல்வியின்மை போன்றவற்றை நிரந்தரமாக்க வழிவகுக்கிறது. அவற்றுக்கு எதிராக ஆங்காகங்கே எதிரப்புகளும் ஆர்ப்பாட்டங்களும் இருந்து வந்த போதிலும், அவை ஒருங்கிணைக்கப்படவில்லை. அவை தேர்தல் அரசியலுக்கு பயன்படும் அளவிற்கே முன்னெடுக்கப்படுகின்றன. அதற்கும் அப்பால், மக்கள் அரசியல் பங்கெடுத்துக் கொள்ளும் வெகுஜன அரசியலுக்கான அணிதிரட்டலுக்கு அவை கொண்டு செல்லப்பட வேண்டும். அதனையே புதிய நீதி வற்புறுத்துகிறது.

# மக்களின் பிரச்சினைகளைத் திசைத்திருப்ப மாகாண சபைத் தேர்தல் திருவிழா

கிழக்கு, வடமத்திய, சபரகமுவ ஆகிய மூன்று மாகாண சபைகள் கலைக்கப்பட்டு தேர்தல்கள் நடாத்த திகதியிடப்பட்டுள்ளது. தேர்தல்கள் நடைபெறுவது ஜனநாயகத்தின் வெளிப்பாடு என்றே கூறப்பட்டு வருகிறது. அப்படியானால் இம்மூன்று மாகாண சபைகளுக்கும் இவர்கள் கூறும் ஜனநாயகத்தின்படி எதிர்வரும் ஆண்டின் நடுப்பகுதிக்குப் பின்பே தேர்தல் நடைபெற வேண்டும். அதனாலேயே கிழக்கினதும் வடமத்திய மத்திய மாகாணத்தினதும் முதலமைச்சர்கள் உரிய காலத்திற்கு முன்னர் தேர்தல் நடைபெறுவதை விரும்பவில்லை. ஆனால் அவர்களுக்கு ஏதோ கூறி வாக்குறுதி வழங்கி இணங்க வைத்தே அவர்களது ஒப்புதலுடன் இப்போது கலைக்கப்பட்ட மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தல்களும் நடாத்தப்படுகிறது. அதில் வேடிக்கையானது மூன்று சபைகளும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆட்சி அதிகாரத்தின் கீழ் இருந்த சபைகளாகும். அங்கே ஆட்சி மாறிய சம்பவங்களோ பதவி ராஜினாமாக்களோ இடம்பெறவில்லை. மூன்று சபையின் முதலமைச்சர்களும் அவர்களின் கீழான அமைச்சர்களும் மகிந்த சிந்தனைக்கு கீழ்படிந்து சொற்படி நடந்தவர்களேயாவர். அப்படி இருக்க ஜனாதிபதிக்கும் அவர்தம் சகோதரர்களுக்கும் இப்படி அவசரக் குறுக்குவழி மூளை ஏன் வேலை செய்தது என்றே பலரும் புருவம் உயர்த்தி நிற்கின்றனர். குறிப்பாக அரசாங்கத் தரப்பில் எல்லாவற்றிற்கும் தலையாட்டி கையேந்துபவர்கள் கூட இரகசியமாக ஒருவருக்கொருவர் முகபாவனையால் ஏன் என்று கேட்கிறார்கள். பாவம் அவர்கள்.

ஆனால் ஜனாதிபதிக்கும் சகோதரர்களுக்கும் அவர்களது அரசியல் ஆலோசக நிபுணர்களுக்கும் தேர்தல் திருவிழா ஒன்று நடத்த வேண்டிய கட்டாயம் ஏன் என்பது புரியும். அதாவது தற்போதைய உத்தேச மதிப்பீட்டின்படி மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தல் செலவு அறுநூறு மில்லியன் ரூபாவாகும். அதாவது ஆறு கோடி ரூபாவாகும். முக்களது சுகாதாரத்திற்கும் கல்விக்கும் பிற சமூக நலத் தேவைகளுக்கும் இந்த ஆறு கோடி ரூபாய்களைப் பயன்படுத்த முடியும். அல்லது வடக்கு கிழக்கில் மீளக் குடியமர்ந்த மக்களின் வாழ்வாதார வசதிகளை உயர்த்த பயன்படுத்தியிருக்கலாம். அவற்றையெல்லாம் கவனத்தில் கொள்ளாது காலத்திற்கு முந்திய தேர்தல் திருவிழாவிற்கு மக்களது பணம் விரயமாக்கப்படுகிறது. தேர்தல் முடிந்த பின் இந்த தேர்தலுக்கு உத்தேசிக்கப்பட்ட செலவை விட அதிகரிக்கவே செய்யும். அவை யாவும் மக்களின் தலைகளிலேயே சுமத்தப்படும்.

அரசாங்கம் மேற்படி மூன்று தேர்தல்களையும் நடாத்தி வெற்றி பெறுவதன் மூலம் மக்களை மகிந்த சிந்தனையின் கீழ் நிற்பதாகக் காட்டிக் கொள்ளவே முயற்சிக்கிறது. கிழக்கில் மூவின மக்களும் தம்முடன்தான் என்று காட்ட அரசாங்கம் முற்பட்டுள்ளது. ஆனால் இத்தேர்தலானது கிழக்கின் மூவினங்களுக்கிடையிலான முறுகலையும் மோதல்களையும் தோற்றுவித்து விடுமோ என்ற அச்சமும் நிலவவே செய்கிறது. ஏனெனில் சென்ற தடவை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு போட்டியிடுவதை நிராகரிக்கவில்லை. இம்முறை அது கட்டாயம் போட்டியிடவே போகிறது. அதற்காகவே தமிழரசுக் கட்சி மாநாட்டை நடத்தி ஒரு தோற்றங்காட்டி நிற்கிறது. அது மட்டுமன்றி கிழக்கில் ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்கயையும் கொண்டுள்ளது. பியசேன எம்.பி அரசாங்கத்துக்ககு ஆதரவாக மாறிக் கொண்டாலும் அவரது தெரிவில் தமிழத் தேசிய கூட்டமைப்பு வாக்குகள் கணிசமாக இருக்கவே செய்தன. எனவே மூவின மக்களிடையே மட்டுமன்றி தமிழ் மக்களிடையேயும் குரோதம் பிளவுகள் தூண்டப் போகும் அபாயம் இக்கிழக்கு மாகாண சபை தேர்தலில் காணப்படும் விசேசமாகும். ஏற்கனவே தமிழ் முதலமைச்சரா அல்லது முஸ்லிம் முதலமைச்சரா என்று தூண்டிவிடப்பட்டுள்ள முரண்பாடு மேலும் தீவிரமடையலாம்.



நன்றி-இணையம்

மட்டக்களப்பில் முன்பிருந்தே தமிழ் முஸ்லிம் உறவு நாசமாக்கப்பட்டு வந்திருக்கிறது. புலிகள் காலத்தில் அது உச்சத்திற்கு சென்றது. அதனை வைத்து தாராளமாக அரசியல் வியாபாரப் பிழைப்பு இரு தரப்பிலும் முன்னெடுக்கப்பட்டது. யுத்தத்திற்குப் பின்பு அந்நிலை ஓரளவிற்கு தணிவுக்கு வந்துள்ளபோதும் பேரினவாத சக்திகள் இடையிடையே அதனைத் தூண்டிக் கொண்டே வந்தார்கள். இன்றும் கூட அதற்கான அடிப்படைகள் இருந்து வரவே செய்கின்றன. சிலமாதங்களுக்கு முன்பு தமிழ் மக்களை ஆத்திரம் கொள்ள வைப்பதற்காகவே மேற்கொள்ளப்பட்ட சிலை உடைப்பு நிகழ்வுகள் இதற்கு எடுத்துக்காட்டு. அவ்வாறான சம்பவங்கள் நடைபெற்றமையானது தற்செயலானதல்ல.

எனவே கிழக்கின் மாகாண சபை தேர்தல் வைப்பதும் வடக்கில் அது தொடர்ந்து மறுக்கப்பட்டு வருவதும் பேரினவாத நிகழ்ச்சி நிரலுக்கு உட்பட்டதேயாகும். மகிந்த சிந்தனை அரசாங்கம் கிழக்கு மக்களை அரவணைத்து அவர்களுக்கு ஜனநாயகமும் இயல்பு வாழ்வும் வழங்கி அபிவிருத்திப் பாதையில் 'கிழக்கின் உதயம்' ஊடாக மூவின ஐக்கியத் தைக் கட்டியெழுப்பவே மாகாண சபைத் தேர்தலை அங்கு நடத்துகிறது என்றால் அதனை விட ஏமாற்று வேறு எதுவும் இருக்க முடியாது.

மேலும், சிங்கள மக்களில் அதிகமாகக் கொண்ட வடமத்திய மாகாணத்திலும் மலையகத் தமிழ் மக்களைக் கணிசமாக கொண்ட சப்ரகமுவ மாகாணத்திலும் தேர்தல் நடைபெற இருக்கிறது. பொருளாதார நெருக்கடியாலும் பொருட்களின் விலை அதிகரிப்பாலும் வாழ்க்கைச் செலவின் உயர்வாலும் அவதிப்படும் மக்கள் எவ்வாறு தேர்தலை எதிர் கொள்ளப் போகின்றார்கள் என்பது முக்கியமானதாகும். இம் மாகணங்களில் உழைக்கும் மக்களைத் திசை திருப்ப அரசாங்கம் எத்தகைய எமாற்று வேலைகளில் ஈடுபடப் போகிறது என்பதைச் சிறிது பொறுத்திருந்தே பார்க்க வேண்டியிருக்கிறது.

எவ்வாறாயினும் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல்கள் மூன்றும் இன்றைய சூழலில் மகிந்த சிந்தனை அரசாங்கமானது மக்களின் கவனத்தை திசை திருப்பி வெற்றி பெறுவதன் மூலம் உள்நாட்டிலும் வெளி உலகத்திற்கும் தங்களோடு மக்கள் இருந்துவருவதாகக் காட்டிக் கொள்ளவேயாகும். எனவே ஏற்கனவே அவர்களை வைத்திருக்கும் தேர்தலில் வெற்றிபெறும் பொறிமுறை மூலம் வெற்றி நோக்கிச் செல்வதி லேயே அக்கறையாக இருப்பர். அந்தப் பொறிமுறை நிச்சயம் ஜனநாயகமானதாக, சுதந்திரமானதாக இருக்கமாட்டாது என்பது மட்டும் நிச்சயம்.

## மோட்டார் சைக்கிள் டயறி



*அண்மையில் சைக்கிள் தோழர்களுக்கு மடுல்சீமை பிரதேசத்திற்கு மரணச் சடங்கொன்றிற்காகச் செல்லத் தேவை ஏற்பட்டது. மரண வீட்டிற்கு சென்று அஞ்சலி செலுத்திவிட்டு முற்றத்தில் அமர்ந்திருந்தோம். அருகில் ஒரு பெரியவர் பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்தார். அவர் திடீரென வாய்விட்டுச் சற்றுப் பலமாகச் சிரித்தார். மரண வீடென்பதால் எல்லோரும் அவரை ஏளனமாகப் பார்ப்பதாகத் தோன்றியது. அவர் அருகில் இருந்தவரிடம் "நான் ஏன் சிரித்தேன் தெரியுமா? பத்திரிகையில் ஒரு வித்தியாசமான செய்தியை வாசித்தேன், அதுதான்" என்றார். என்ன என்று பக்கத்தில் உள்ளவர் கேட்க. "இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட பிரேரணையால் இலங்கைக்கு எவ்வித பொருளாதார ரீதியான பாதிப்பும் ஏற்படாது. காரணம் நான் இன்னும் அதனைப் படிக்கவில்லை". என மத்திய வங்கியின் மேலதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி அந்த நாளிதழில் செய்தி வெளியிட்டுள்ளது. ஓர் உயர் அதிகாரி ஜெனீவா தீர்மானம் தொடர்பாகப் படிக்கவில்லை என்பதால் பாதிப்பில்லை என்று கூறுவது முட்டாள்தனமானது என்பது கூட இந்த அதிகாரிக்குத் தெரியவில்லை. இவ்வாறான அதிகாரிகள் நம் நாட்டில் இருப்பதையிட்டுச் சிரித்தேன் என்றார். சிரிப்போடு நில்லாது சிந்தித்தார் என்றும் நினைக்கிறோம்.*

...

*ரத்வத்தை மேற் பிரிவு தோட்டத்தில் மக்கள் வரிசையாகச் சென்று மேலதிகாரியிடம் தங்கள் சம்பளத்தை வாங்கிச் செல்வது சைக்கிள் தோழர்களின் கண்களில் பட்டது.*

*சம்பளத்தைப் பெற்றுக் கொண்ட தொழிலாளர்கள் முணுமுணுத்துக் கொண்டுவருவதைக் காணக்கூடியதாக இருந்தது. அவர்கள் வரும் வழியில் ஒரு கிழவன் நின்று கொண்டு சம்பளம் வாங்கிவந்தவர்களில் பெரும்பாலனவர்களிடமிருந்து பெயர்களைச் சொல்லிப் பணம் வசூலித்தான். அம் மக்களில் சிலர் கொடுத்தனர். சிலர் தலை குனிந்து சென்றனர். பலர் காரணம் சொல்லினர். அருகில் இருப்பவரிடம் பணம் வசூலிக்கும் கிழவன் யார் என்று கேட்டேன். அவர் வட்டிக்குக் காசு கொடுப்பவர். தொழிலாளர்கள் தங்கள் செலவுகளை சமாளிக்க முடியாது வட்டிக்குக் காசு வாங்குவர். சம்பள அட்வான்ஸ் நேரத்தில் வந்து அவர் வசூலிக்கிறார் என்றார் அருகில் நின்றர்.*

*ஏமது மக்கள் தங்கள் அடிப்படைத் தேவைகளைத் தாம் பெறும் குறைந்த ஊதியத்தில் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் உள்ளனர். செலவுகளைச் சமாளிக்க முடியாத நிலையில் வட்டிக்காரரிடம் பணம் வாங்கிப் பெரிய கடன்காரர்களாகிவிடுகின்றனர். பின்னர் வாழ்க்கையில் விரக்தி நிலைக்குச் சென்றுவிடுகின்றனர். இந் நிலைக்கான காரணத்தை அறியாத வரையில் தொழிலாளர்கள் விரக்தியிலும் வேதனையிலும் மட்டுமே வாழ்ந்து இறக்க முடியும். இந்நிலை மாற நியாயமான ஊதியத்திற்கான போராட்டத்தில் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் ஒன்றுபட வேண்டும்.*

...

*சைக்கிள் தோழர்களுக்கு 2012.04.06 அன்று மாணவர் குழு ஒன்றைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவர்களுடன் ஒரு கலந்துரையாடலை நடத்தினோம். கல்வி, விளையாட்டு, உலக அலுவல்கள் எனப் பல விடயங்களை மாணவர்கள் ஆர்வத்துடன் பகிர்ந்து கொண்டனர். ஒரு மாணவன் சம்பாஷனைக்கு நடுவே குறுக்கிட்டான். "ஒரு விடயத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்" என்றான். என்னவென்று வினவ "ஐயா! நாங்கள் உன்னஸ்கிரிய செங்காடு தோட்டத்தைச் சேர்ந்தவர்கள். எமது பிரதேசத்தில் தரம் 8 வரை கற்பிக்கப்படும் பாடசாலையே உள்ளது. பிறகு நாம். மாஃஎல்கடுவ த.ம.வி. என்ற பாடசாலைக்கே செல்ல வேண்டும். அங்கு செல்வதற்கு 6 கிலோமீட்டர் நடந்து 3 கிலோமிட்டர் பஸ்ஸிலும் பயணிக்க வேண்டும். குறுக்குப் பாதைவழியில் நடந்து வருவதென்றால் அது மிகவும் பாதுகாப்பற்ற பாதை. மழைக் காலங்களில் பாதை மிகவும் மோசமாக இருக்கும்" என்றார் அவர். மாணவி ஒருவர் அது பற்றிக் கூறுகையில் "இந்தப் பாதை தொடர்பாக உரிய அரச நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டும் தீர்வு கிடைக்கவில்லை. எதிர்காலத்தில் தீர்ப்பார்கள் என்ற நம்பிக்கையும் இல்லை. இப் பிரச்சினையைத் தீர்க்க நாம்தான் முன்னின்று செயற்பட வேண்டும்" என்றார். இப் பிரச்சினைக்கான தீர்வு என்ன என்பது ஆழமான தேடல் அவர்களிடம் இல்லாத போதும், சமூக அக்கறையும் தமது நியாயமான கோரிக்கைகள் நிராகரிக்கப்படுகின்றமைக்கு எதிரான கோபமும் இருப்பது நம்பிக்கை தருவதாக உள்ளது.*

# விஷப் பரீட்சைகள்

நாம் "ஸற் ஸ்கோர்" என அழைப்பது எளிமையான ஒரு தரப்படுத்தல் முறையையே. 1970-71இல் தரப்படுத்தலுக்கும் அதற்கும் அடிப்படையில் வேறுபாடில்லை. வெவ்வேறு பாடங்களில் புள்ளிகளின் சராசரியும் பரம்பலும் வேறுபட்டால், இரண்டு பாடங்களையும் சமன்படுத்தத் தரப்படுத்தலைப் பாவிக்கலாம். இரண்டினதும் சராசரிகள் 50 சதவீதமாகவும் நியம விலகல்கள் முன்பே தீர்மானித்த ஒரு தொகையாகவும் வருமாறு தரப்படுத்தலாம். அல்லது புள்ளிகள் 0.0க்கும் 4.0க்கும் இடையில் அமையும்படி, சராசரி 2.0 ஆகவும் நியம விலகல் 1.0 ஆகவும் அமையுமாறும் தரப்படுத்தலாம். இரண்டு பாடங்களிலும் ஒத்த விதமான ஆற்றலுடைய மாணவர் குழுக்கள் (அல்லது அதே மாணவர்கள்) பரீட்சை எழுதிப் புள்ளி வேறுபாடுகள் (வினாத்தாளின் தரத்தில் வேறுபாடு, திருத்துலின் தரத்தில் வேறுபாடு, பரீட்சை நடந்த சூழல் என்பன போன்று) பரீட்சைமுறையின் பயனாய் ஏற்பட்டவை எனின், இவ்வாறான தரப்படுத்தல்கள் நியாயமானவை. வேவ்வேறு பாடங்களில் மாணவர்கள் பெறும் புள்ளிகளை விட நியாயமான ஒப்பீட்டுக்கு அவை இடமளிப்பவை. (உதாரணமாக, கலைப் பாடங்களில் உயர் புள்ளிகள் பெறுவது கணிதத்திற் பெறுவதினும் கடிது).

எனினும் மேற்சொன்ன "ஸற் ஸ்கோர்" முறையோ வேறெந்த எளிமையான முறையோ ஆற்றலிற் கணிசமாக வேறுபட்ட இரு குழுவினரை நியாயமாக ஒப்பிட உதவாது. முதல் முறையாகப் பரீட்சை எழுதும் மாணவர் குழுவொன்று புதிய பாடநெறியையும் முதல் முறை பரீட்சையில் தவறி இரண்டாம் அல்லது மூன்றாம் முறையாகப் பரீட்சை எழுதும் மாணவர் குழுவொன்றையும் சமமான ஆற்றலுடையனவாகக் கொள்ளல் சரியா? பாடவிதான வேறுபாட்டால் இரண்டு வினாத்தாள்களின் தரமும் வேறுபட இடமுண்டா? விடைத்தாள் திருத்தல் முறை இரண்டு பாடவிதானங்கட்கும் ஒப்பிடத்தக்கதாய் இருந்திருக்குமா?

மேற்கூறிய வினாக்கட்குத் தெளிவான விடையில்லாமல், இரண்டு பாடநெறிகளையும் ஒன்றாகக் கருதுவதா வேறாகக் கருதுவதா என்ற கேள்விக்கு எவரிடமிருந்தும் நல்ல விடை கிடைக்காது. பொதுப்படக் கூறின், வேறாகக் கருதுவது முதல் முறையாகப் பரீட்சை எழுதுவோருக்குச் சிறிது பாதகமானது எனவும் ஒன்றாகக் கருதுவது இரண்டாம் அல்லது மூன்றாம் முறையாக எழுதுவோருக்குச் சிறிது பாதகமானது எனவும் எதிர்பார்க்கலாம். எனினும் எது நியாயமானது எனத் தீர்மானிக்க மேலும் தகவல்கள் தேவை. அவை தீர்ப்பு வழங்கிய நீதிமன்றத்திற்குக் கிடைத்திருக்கும் வாய்ப்பில்லை.

உயர் கல்வி அமைச்சும் பல்கலைக்கழக மானிய ஆணையமும் பரீட்சை நடக்க முன்பே தமது தரப்படுத்தற் கொள்கையைத் தக்க காரணங்கூறி விளக்கியிருப்பின் அண்மைய சிக்கல் ஏற்பட்டிராது. பரீடசைப் பெறுபேறுகளையும் பலரிடையே இருவிதமான "ஸற் ஸ்கோர்" விபரங்களையும் பார்த்த பின்பே எதைப் பாவிப்பது என்ற முடிவு எடுக்கப்பட்டது என்ற ஐயம் பலரிடம் நிலவுகிறதும் சிக்கலுக்கு ஒரு காரணம்.

அவற்றுக்கும் அப்பால், வினாத்தாள்களைத் திருத்தலிலும் புள்ளிகளைப் பதிவுசெய்வதிலும் தவறுகள் அதிகம் என்ற கருத்தும் நிலவுகிறது. எல்லா அலுவல்களிலும் ஊழல் நிலவும் போது இத்தகைய ஐயங்களும் எதிர்பார்க்கக்கூடியன மட்டுமன்றி நியாமானவையுமே. ஏனினும் நமது கல்வித் துறையின் முக்கிய பிரச்சனை பரீட்சைப் பெறுபேறுகளல்ல. (ஒரு மாணவருக்காகும் செலவு என்ற அடிப்படையில்) தொடர்ந்து வீழும் கல்விச் செலவும் சரிந்துவரும் கல்வித்தரமும் இலவசக் கல்வியை ஒழிக்கும் சூழ்ச்சிகளும் நாட்டின் கல்வியைச் சிதைக்கின்றன. திட்டமிட்ட தேசியப் பொருளாதாரமும் திட்டமிட்ட தேசியக் கல்வியும் ஒன்றிலிருந்து ஒன்றை பிரிக்க இயலாதவை.

"ஸற் ஸ்கோர்" தகராறு வசதி படைத்த நடுத்தர வர்க்கத் தகராறு. நமது தகராறு சீரழியும் கல்விமுறையுடனானதாக இருக்க வேண்டும்.

•••

# மலையகத் தேசிய இனமும் அங்கீகாரமும்

## அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும்

மலையகத் தமிழ் மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டு அவர்களின் மூன்றிலொரு பங்கிற்கும் மேலானவர்கள் சிரிமா-சாஸ்திரி உடன்படிக்கையின் அடிப்படையில் (பின்பு சிரிமா-இந்திரா உடன்படிக்கை என்று அறியப்பட்ட உடன்படிக்கையின் உதவியுடன்) 1970களின் நடுப்பகுதியில் நாடு கடத்தப்பட்டு, ஒரு சமூகமாக அவர்களுடைய இருப்பு பெரும் நிலைகுலைவுகளைச் சந்தித்த பின்புதான் அவர்களது குடியுரிமை அவர்கட்கு மீளவும் கிடைத்தது. ஏறத்தாழ அரை நூற்றாண்டுக்காலக் காத்திருப்பின் பின்பே இலங்கையில் எஞ்சியிருந்த அனைத்து இந்திய வம்சாவழியினருக்கும் குடியுரிமை என்பது ஏற்கப்பட்டது.

கோலனிய ஆட்சியின் கீழ்க் குடியுரிமை என்பது இருந்த போதும் மலையகத் தோட்டத் தொழிலாளர்கட்கு தாம் குடியிருந்த மண்ணின் மீது உரிமை இருக்கவில்லை. அதாவது சொந்த வீடு கட்டவோ காணி வைத்திருக்கவோ உரிமை இருக்கவில்லை அதைவிட மோசமாக அவர்களில் எவருக்கும் முகவரி என்பது இருக்கவில்லை. இவ்விதமான அடிப்படை உரிமை மறுப்பு இலங்கையின் பிற சமூகப் பிரிவுகட்குச் சாதிய பிரபுத்துவ உற்பத்தி முறை தொடர்ந்த சூழலில் இருந்து வந்தாலும், பல்வேறு சமூக மாற்றங்களும் காணிச் சட்டங்களும் அந்த நிலைமையை மிகவும் மாற்றிவிட்டன. எனினும் மலையக மக்களுக்கு வீடு, காணி, முகவரி என்பனவற்றுக்கான உரிமை இல்லாமை தொடருகிறது. அதன் விளைவாக, அவர்களுடைய இருப்பு பல வகைகளிலும் அரசின் உதவியுடனும் அது இல்லாமலும் பேரினவாதிகளதும் பிற தீய சக்திகளதும் மிரட்டலுக்கு உட்பட்டு வருகின்றது.

இச் சூழ்நிலையில் மலையக மக்களுக்கு வீட்டுரிமை, காணி உரிமை என்பனவற்றுக்கும் அவற்றோடு சேர்ந்து வரக்கூடிய சொந்த முகவரிக்கான உரிமைக்கும் முக்கியத்துவம் உள்ளது. முகவரிக்கான உரிமை இவற்றுள் எளிதில் நடைமுறைப்படுத்தக் கூடியது பெருந்தோட்டத் தொழிலாளர் குடும்பங்களிலிருந்து தோட்டங்கட்கு வெளியிலும் அயல்நாட்டிலும் குடும்ப உறுப்பினர்களும் உறவினர்களும் வாழுகிற காரணத்தாலும் கல்வி தொழில் வாய்ப்புக்களைப் பாதிக்கக் கூடியதும் என்பதால் முகவரி என்பது இன்று அவசியமானதாக இருக்கிறது.

மலையகத் தமிழர்கள் குடியுரிமை பெறத் தொடங்கிய காலத்திலிருந்தே குடியுரிமை பெற்ற அனைவருக்கும் மேற்கூறிய உரிமைகள் கிடைக்க தொடங்கியிருக்க வேண்டும். அப்படி நடக்கவில்லை. அதை வற்புறுத்திக் கேட்கும் தலைமைகளும் மலையகத் தமிழர்கட்கு வாய்க்கவில்லை. பாராளுமன்ற ஆசனங்களை வென்றவர்களுடைய அக்கறைகள் எல்லாம் தங்களுடைய சுய லாபம் பற்றியவையாகவே இருந்தன. பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாத ஆளுங்கட்சியுடன் சேர்ந்த காலங்களில் கேட்காத உரிமைகளை இப்போது அற்ப சலுகைகளுக்காக அரசாங்கத்தில் ஒட்டிக் கொண்டிருக்கும் போதா அவர்கள் கேட்கப் போகிறார்கள்?

சம்பள உயர்வு போன்ற விடயங்களிலேயே தொழிற்சங்கத் தலைமைகளும் பிரதான மலையக அரசியல் கட்சிகளும் திரும்பத் திரும்பத் தொழிலாளர்களை ஏமாற்றி வந்துள்ளன. எனவே, மலையகத் தமிழரின் தேவைகள் எவை என்பதை அவர்கள் நேர்மையாக விசாரிக்கவும் மாட்டார்கள். அவற்றைப் பற்றி அறிந்தாலும் அவற்றை வலியுறுத்திப் பேசவும் மாட்டார்கள். வேறு யாரும் அவற்றை முன்வைத்துப் போராட முயன்றால் அதற்குக் குழிபறிக்கத் தவறவும் மாட்டார்கள். எப்படியாவது ஏதாவது போராடி வெல்லப்பட்ட பின்பு தாங்கள் போராடியதானால் மட்டுமே



அது வெல்லப்பட்டது என்று சொல்லத் தவறவும் மாட்டார்கள்.

மேற்சொன்னவிதமான குறைபாடுகள் இலங்கையின் மூன்று தமிழ்ப் பேசும் தேசிய இனங்களின் தலைமைகளிடமும் காணப்படுகிறவை. அதனாலேயே பேரினவாத அரசாங்கங்கள், முக்கியமாகப் போரின் வெற்றிக்குப் பின்பான பேரினவாத அரசாங்கம், ஒவ்வொரு சிறுபான்மைத் தேசிய இனத்தினதும் அடையாளத்தை மறுக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. அதில் முக்கியமானது பிரதேச அடையாளம். மொழி, பண்பாடு என்பன சார்ந்த உரிமைகளை மறுப்பதற்குத் தேசிய இனங்களின் பாரம்பரியப் பிரதேசங்களை ஆக்கிரமிப்பது ஒரு முக்கியமான கருவியாகும்.

**இன ஒடுக்குமுறையும் சுரண்டலும் தவிர்ந்த எந்த உறவும் பகையானதல்ல. அந்த விதமான நோக்கில் மலையக மக்களிடையே உள்ள பிரதேச, சாதிய வேறுபாடுகளை வென்று அவர்களை தனித்துவமான ஒரு தேசிய இனமாக வலிமைப்படுத்துவதற்கு மலையகத்தின் புரட்சிகர முற்போக்குச் சிந்தனையாளர்கள் துணிந்து முன்வரவேண்டும்.**

பாரம்பரியப் பிரதேசங்களை ஆக்கிரமித்துத் தேசிய இன அடையாளம் ஒன்று இருப்பதை மறுப்பதன் மூலம் இலங்கையை நிரந்தரமாக ஒரு சிங்கள பௌத்த நாடாக அடையாளப்படுத்துவது தான் பேரினவாதத்தின் நோக்கமாகும். இலங்கைக்கு அந்த அடையாளத்தை வழங்குவதன் மூலம் பிற அடையாளங்களையுடைய மக்களை ஒருபுறம் பெரும்பான்மையின் நிழலில் தங்கியுள்ளவர்களாக அடையாளப்படுத்தி அவர்களுடைய முக்கியத்துவம் குறைக்கப்படும் என்பதுடன் இன்னொரு புறம் அவர்கள் மேலும் பாரபட்சத்திற்கும் புறக்கணிப்புக்கும் உட்படுத்தப்படுவர். அது எவ்வகையிலும் தேசிய ஒற்றுமையாகிவிடாது. அதன் விளைவாக சமூகம் மேலும் பிளவுபட்டுப் போகும் என்பதே உண்மை.

மேற்கூறிய காரணங்களினாலேயே, மலையக மக்கள் ஒரு தேசிய இனமாகத் தமது இருப்பை உறுதிப்படுத்துவதும் அதன் அடிப்படையில் தேசிய இன உரிமைகட்காகப் போராடுவதும் அவசியமாகிறது. மலையகத் தமிழ் மக்களுடைய வீட்டுரிமை, காணியுரிமை, முகவரிக்கான உரிமை என்பன, அவை பற்றித் தனித்து ஒவ்வொன்றாகக் கோரிக்கைகளை எழுப்பிப் போராடக் கூடியன என்ற போதிலும், அவை அவர்களுடைய மொழியுரிமை, பண்பாட்டுரிமை, பிரதேச உரிமை என்பவற்றுடன் இணைந்து அவர்களுடைய தேசிய இன உரிமையின் ஒரு பகுதியாகின்றன.

எனவே தான் மலையக மக்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்க வேண்டும் என்ற கோரிக்கை மிகவும் அடிப்படையானது. இந்த அங்கீகாரம் அத்துடன் நின்றுவிடாது, இறுதி ஆராய்வில், தமது தேசிய இன அடையாளத்தையும் உரிமைகளையும் வற்புறுத்துகிற தமிழ், முஸ்லிம் தேசிய இனங்களுக்குச் சமமான ஒரு தேசிய இனமாக மலையக மக்களை ஏற்பதாக அமைய வேண்டும்.

அந்த அங்கீகாரத்திற்கான போராட்டத்தைப் புறக்கணித்துத் தனித்தனியே வெவ்வேறு பிரச்சினைகளைப் பற்றி மட்டும் போராடுவது மலையக மக்களைப் பலவீனப்படுத்தும். மலையக மக்களின் ஒவ்வொரு உரிமைப் போராட்டத்தினதும் காரணம் உரிமை மறுப்பு, அந்த மறுப்புக்கு அடிப்படையாக அமைவது, ஒரு தேசிய இனமாக ஒரு தனித்துவமான சமூகமாக அவர்களது அடையாளம் மறுக்கப்படுவதாகும்.

அந்த அங்கீகாரத்திற்கான போராட்டம் மக்கள் போராட்டமாக மக்கள் மத்தியில் முன்னெடுக்கப்படுவது அவசியம். அப் போராட்டம், ஒரு புறம், சமத்துவ அடிப்படையில் பிற தேசிய இனங்களினதும் அரசினதும் அங்கீகாரத்திற்கானதாக அமைகிற அதேவேளை, மலையக மக்களின் தேசிய இன அடையாளத்தை வழியுறுத்துகிற விதமான செயற்பாடுகள் பல்வேறு தளங்களில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

மலையக மக்கள் நாட்டின் சில பிரதேசங்களிற் செறிவாகவும் வேறு பிரதேசங்களில் ஐதாகவும் ஒவ்வாரு பிரதேசத்திலும் ஒவ்வொரு விதமான அயற் சூழலிலும் வாழுவதால் குறிப்பான பிரச்சினைகள் என்று வரும்போது பல வேறுபாடுகள் உள்ளன. எனினும் பொதுவான பிரச்சனைகள் பல உள்ளன. அனைத்திற்கும் பொதுவான ஒரு அடிப்படை உள்ளது. அது வலியுறுத்தப்பட வேண்டும்.

சிவா

# சபரகமுவ மாகாண சபைத் தேர்தலும்

## "தமிழர் பிரதிநித்துவமும்"

தேர்தல் என்று வந்தவுடன் நமது வாக்குச் சீட்டு அரசியல் தலைவர்களுக்கு இன உணர்வு, இனப் பற்று, இன கௌரவம் என்பன எனைய எல்லாவற்றையும் முந்திக் கொண்டு வந்து நிற்கும். சபரகமுவ மாகாணசபை தேர்தலுக்கான நாள் நெருங்கி வருகிவரும் நிலையில் அங்குள்ள அரசியல் தலைவர்கள் தமிழரின் அரசியல் பிரதிநிதித்துவத்தை இம்முறை மீட்டே ஆகவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு செயற்பட்டு வருகின்றனர். அதற்காக அரசியல் கூட்டுகளை உருவாக்கும் முயற்சிகள் இடம்பெறுவதுடன் அரசியல் கலந்துரையாடல்களும் இடம்பெற்று வருகின்றன. சபரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களில் வாழும் தமிழ் மக்களிடையே, தமிழர் பிரதிநிதித்துவத்தை மீட்க வேண்டும் என்ற அடிப்படையிலான பிரசாரம் இன்று நிலவும் சிங்கள பௌத்த பேரினவாத நிலைமைகளில் வெற்றி பெறலாம். என்றாலும் சபரகமுவ மாகாணத்தை சேர்ந்த தமிழ் மக்கள் நிதானமாக ஆராய்ந்து பதிலளிக்க வேண்டிய இரண்டு கேள்விகள் உள்ளன. ஒன்று, வடக்கு-கிழக்கில் சிங்கள பேரின வாதத்திற்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட குறுகிய இன அடிப்படையிலான அரசியல் தமிழ் மக்களை இன்று ஆளாக்கியுள்ள நிலை என்ன? மற்றையது தமிழ் உணர்வாளர்களாகவும், இனப்பற்றாளர்களாவும் கூறிக்கொள்ளும் குறித்த அரசியல்வாதிகள் பேரினவாத கட்சிகளான ஐ.தே.க.வுடனும் ஸ்ரீ.ல.சு.க.வுடனும் கொண்டுள்ள உறவு என்ன?

மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் ஓரிடத்தில் செறிவில்லாது சிதறலாகச் சிங்கள கிராமங்களுக்கு மத்தியில் வாழும் சபரகமுவ மாகாணம் போன்ற பிரதேசத்தில் மட்டுமன்றி ஏனைய பகுதிகளில் வாழும் மலையக மக்களும் வேண்டுவது சிங்கள மக்களுடன் இனக் குரோதத்தை வளர்க்கும் கபட அரசியலை அல்ல. மாறாகச், சிங்கள மக்களுடன் இணைந்து சம அந்தஸ்த்துடனும் கௌரவத்துடன் வாழும் வாழ்கையையேயாகும். இதனை இலங்கையில் நிலவிவரும் பௌத்த சிங்கள பேரினவாதம் தடுத்துள்ளமை உண்மையே. என்றாலும் இதற்கான தீர்வு போலி மலையகத் தமிழ்த்



தேசிய வாதமோ அல்லது சபரகமுவ மாகாணத்திற்கான தமிழ்த் தேசியம் என்று மலையக மக்களைக் கூறுபோடும் செயற்பாடகவோ இருக்க முடியாது. இது சிங்கள பௌத்த பேரினவாதத்தின் தொடர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் வழிவகுக்க கூடியதாகும். சிங்கள மக்களையும் மலையகத் தமிழ் மக்களையும் ஒற்றுமைப்படுத்தக்கூடிய ஒரே வழி அவர்களைத் தொழிலாளர்கள்-விவசாயிகள் என்ற வர்க்க அடிப்படையில் ஒற்றுமைப்படுத்துவதாகும். இது மிகவும் கஷ்டமான பணி. இந்தக் கடினமான பணியை, சபரகமுவ மாகணத்தில் என்றால் என்ன முழு மலையகத்தில் என்றால் என்ன, வாக்குசீட்டுக்காக அரசியல் செய்யும் அரசியல்வாதிகளினால் செய்ய முடியாது. பிரச்சினைகளை நீண்டகால நோக்கில் ஆராய்ந்து தொழிலாளர் நலனில் அக்கறையும் தொழிலாளர்களின் பலம் தொடர்பாக நம்பிக்கையும் கொண்டவர்களாலேயே அது முடியும். வெறும் மாகாண சபை உறுப்பினராக அல்லது பாராளுமன்று உறுப்பினராகக் கனவுகாணும் அரசியல்வாதிகளிடம் மக்கள் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வை எதிர்பார்ப்பது முட்டாள்தனமாகும்.

சபரகமுவ மாகாண சபைக்கான தமிழ் பிரதிநித்துவத்தைப் பற்றிப்பேசும் தலைவர்கள் அனைவருமே சிங்களப் பேரினவாதக் கட்சிகளான ஐ.தே.க. அல்லது. ஸ்ரீ.ல.சு.க. துலைவர்களது அல்லது பிரதேசப் பாராளுமன்ற உறுப்பினரினது அனுசரணையுடனே தமது "தமிழ் மக்களுக்கான" அரசிலை நடத்தி வருகின்றனர். சிங்களத் தலைவர்களுடன் இணைந்து தமிழர்கள் அரசியல் செய்வதில் எமக்கு பிரச்சினை இல்லை. என்றாலும் அது எந்த நோக்கத்திற்காகச் செய்யப்படுகிறது என்பதுதான் எமக்குள்ள பிரச்சினை. தங்களின் பாராளுமன்ற நாற்காலிக்குப் பிரச்சினை எற்படாத வகையில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காகவே பிரதேச சிங்கள அரசியல் தலைவர்கள் தமிழ் அரசியல்வாதிகளை தங்களுக்கு பக்கத்தில் வைத்துக் கொள்கின்றனர். தமிழ் அரசியல் தலைவர்கள் போலித் தமிழ்ப் பற்றுப் பேசித் தமிழ் மக்களின் வாக்குகளை பெற்று பிரதேச சபையிலோ அல்லது மாகாண சபையிலோ உறுப்பினராவதே நோக்கமாகக் கொண்டுள்ளனர். இதன் போது தமிழ் அரசியல்வாதிகளுக்கு குறித்த சிங்கள தலைவர்களின் இனவாத செயற்பாடுகள் எல்லாம் மற்றவர் கண்களுக்கு தெரிந்தால் குற்றம். எனவே சபரகமுவ மாகாண தமிழ் தலைவர்கள் என்போர் தேர்தலில் வெற்றி பெற்றால் சிங்களப் பேரினவாதத் தலைவர்களின் நிகழ்ச்சி நிரல்களுக்கு உட்பட்டே செயற்படப் போகிறார்கள் என்பது உறுதி.

எனவே சபரகமுவ பிரதேச மலையக மக்கள் சிந்திக்க வேண்டியது தமிழ் அரசியல்வாதிகளினால் இன்று முன்னெடுக்கப்படும் தமிழ்ப் பிரதிநிதித்துவம் என்பது சபரகமுவ பிரதேசத்தில் வாழும் மக்களின் உயர்விற்கு வழிவகுக்காது. மாறாக இப்போலி இனவாத அரசியல் செயற்பாடானது சிங்களப் பேரினவாத அரசியல் தலைவர்களுக்குக் கீழ் சபரகமுவ மலையகத் தொழிலாளர்கள் அடிமைப்படும் நிலைக்கே வித்திடும்.

ஜீ.எஸ.எம்

# புதிய நீதி

Puthiya Neethi

முரசம் 01, ஜூலை 2012, பக்கம் 16, விலை ரூ.30. முழக்கம் 01

இல. 15/4, மகிந்தாராம வீதி, கல்கிஸ்சை
தொ.பேசி: 0716 745 642, 0779 774 427 தொ.நகல். 0112 473 757
Web: www.ndpsl.org


## புதிய நீதி நோக்கிப் பயணிப்போம்!

புதிய பூமியின் தொடர்ச்சியாகவும் அதன் நீட்சியாகவும் புதிய நீதி உங்களிடம் வருகிறது. நாட்டின் உழைக்கும் மக்களான தொழிலாளர்கள் விவசாயிகள், மீனவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், பெண்கள், அரசாங்க தனியார்துறை ஊழியர்கள், இளைஞர் யுவதிகள், மாணவர்கள் என்போர் பல்வேறு பிரச்சினைகளாலும் நெருக்கடிகளாலும் துன்ப துயரங்களை அனுபவித்தவாறே வாழ்க்கையை நடாத்தி வருகின்றனர். நாட்டின் ஏகப் பெரும்பான்மையான இம் மக்கள் நமது சமூகச் சூழலில் வர்க்கம், இனம், சாதி, பெண்கள், ஆகிய நான்கு தளங்களில் சுரண்டப்பட்டு அவர்களுக்குரிய நீதி மறுக்கப்பட்டு நியாயம் மறைக்கப்பட்டு ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். இவை வெளிப்படையாகவும் மறைக்கப்பட்டவையாகவும் முன்னெடுக்கப்படுகின்றன. இவற்றின் கவசங்களாகப் பழைமைவாதக் கருத்தியல்களும் சிந்தனை நடைமுறைகளும் பின்பற்றப்படுகின்றன. அவற்றைக் கொண்டு ஆளும் வர்க்கத் தரப்புகளும் ஆதிக்க அரசியல் தலைமைகளும் அவர்களது அடிவருடிகளும் மக்களைச் சிந்திக்க விடாது தடுத்துத் தமது பிடிகளுக்குள் வைத்து வருகின்றனர்.

இவ்வாறுதான் முன்பு ஆட்சி அதிகாரம் செலுத்தியோரும் இன்று அதிகாரத்தில் இருப்போரும் செய்து வந்தனர். வருகின்றனர். இந்நிலையில் சுரண்டல், ஏற்றத்தாழ்வு, பாகுபாடு, புறக்கணிப்பு, அடக்குமுறை போன்றவற்றால் மக்கள் நிறைவான பொருளாதாரத்தை கொண்டிருக்கமுடியவில்லை. தமது அடிப்படைத் தேவைகளான உணவு உடை இருப்பிடம் வேலைவாய்ப்பு கல்வி சுகாதாரம் போன்றவற்றையும் ஏனைய சமூக நலத் தேவைகளையும் பெற முடியாதவர்களாகவே ஏகப் பெரும்பான்மை மக்கள் இருந்து வருகின்றார்கள். இது மக்களின் ஊழ்வினையல்ல. பணம் படைத்தோரும் சொத்து சுகம் உடையோரும் அவர்களது அரசியல் பிரதிநிதிகளான ஆளும் வர்க்கத்தரப்பினரும் ஆதிக்க அரசியல் சக்திகளும் திட்டமிட்டே மக்களை ஒடுக்கிவருவதன் விளைவேயாகும்.

இவற்றில் இருந்து சிங்கள உழைக்கும் மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்கு பேரினவாத செயற்பாடுகளும் அவற்றுக்கான தீவிரப் பரப்புரைகளும் பல கோணங்களில் இருந்தும் முன்னெடுக்கப்படுகின்றன. அதனைத் தமிழ் மக்கள் மத்தியில் சரியானதும் தூர நோக்கிலானதுமான அரசியல் நிலைபாட்டில் இருந்து முன்னெடுப்பதற்குப் பதிலாக குறுகிய தமிழ்த் தேசியவாதத்தில் கால் ஊன்றி நின்றவாறே இனப்பகை அரசியல் முன்னெடுக்கப்படுகிறது. இதன் விளைவு சகல வற்றிலுமே இன உணர்வு என்ற பெயரில் இனவாதமும் இன வெறியும் இலகுவாகவே தமிழ் சிங்கள முஸ்லீம் மக்களின் மனங்களில் பதிய வைக்கப்படுகிறது. எல்லாப் புறத்திலும் உழைக்கும் மக்களை தமது வர்க்க நிலை மறந்து இன மொழி மத பிரதேசம் எனக் குறுகிய உணர்வுகளால் உந்தப்பட்டு குறுகிய தேசியவாத எல்லைக்குள் நின்றவாறு வாக்குப் பெட்டி அரசியலுக்குள் மூழ்க வைக்கின்றனர்.

இத்தகைய சூழலில் இருந்து உழைக்கும் மக்களை அவர்களுக்குரிய வர்க்க அரசியல் மூலம் மீட்டெடுப்பது நம்முன் உள்ள அரசியல் வரலாற்றுக் கடமையாகும். கடந்த காலங்களிலும் இன்றைய நடப்பு விவகாரங்களிலும் அரசியல் யதார்த்த நிலைமைகள் உண்மைகள் என்பனவற்றை மக்கள் மத்திக்கு முன்னெடுத்துச் செல்வது அவசியமாகிறது. மக்கள் மத்தியில் குறிப்பாக இளைஞர்களுக்கிடையில் அரசியல் விழிப்புணர்வையும் சமூக அக்கறைகளையும் ஏற்படுத்த வேண்டும். அதற்கான விவாதங்களும் கேள்விகளும் சமூக அரசியல் தளங்களில் எழுப்பப்பட வேண்டும். அதன் நீட்சியாக சமூக மாற்றக் கருத்துக்களை சமூக அறிவியல் பார்வைகளினூடே அவர்களுக்கு எடுத்து விளக்க வேண்டும். ஒவ்வொரு பிரச்சினைக்குமுரிய வேர்கள் எங்கே ஆழப்பதிந்துள்ளன என்பதைச் சமூக அறிவியல் ஊடாக அரசியல் வழியில் சென்று காண வேண்டும். அப்பொழுதுதான் இன்றைய ஒடுக்குமுறைகளும் அநீதிகளும் ஏற்றத்தாழ்வுகளும் கொண்ட இன்றைய சமூக அமைப்பு மாற்றியமைக்கப்பட வேண்டும் என்ற சிந்தனையும் செயல்முறைகளும் மேற்கிளம்ப முடியும். அத்தகைய புரட்சிகரமான சமூக மாற்றக் கருத்துக்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்லும் பணியினை புதிய பூமி முன்னெடுத்து வந்தது. அப்பணியின் தொடர்ச்சியை இப்போது புதிய நீதி கையேற்றுச் செல்கிறது. அதற்கான முழு ஒத்துழைப்பையும் வாசகர்களிடம் புதிய நீதி வேண்டி நிற்கிறது.

ஆசிரியர் குழு

# தமிழ் மக்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் தெரிவுகள்

வெகுஜனன்

வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களைப் பொறுத்தவரை முப்பது வருடங்களுக்கு மேலாகப் பேரினவாத யுத்தமும் தமிழீழத்திற்கான போராட்டமும் அவர்களைச் சின்னாபின்னப் படுத்தி விட்டது. இறுதி யுத்தமானது மிகக் கொடியதாக அமைந்தது. பேரினவாத ஆளும் முதலாளித்துவ ஆட்சியின ருக்கு இறுதி யுத்த வெற்றி மமதையை ஏற்படுத்தியுள்ளது. அதே யுத்த முடிவு, தமிழீழ விடுதலைப் புலிகளின் இறுதியா கிக் கொண்டதுடன் தமிழ் மக்களுக்குப் பெரும் அழிவாகவும் அவலங்களாகவும் அமைந்தது. அவை இடம்பெற்று மூன்று வருடங்கள் முடிவடைந்து விட்டன. அவற்றில் இருந்து தமிழ் மக்கள் இன்னும் மீளவில்லை.

குறிப்பாகத் தமிழ் மக்களிடையே முன்னெடுக்கப் பட்டு வந்த தமிழ்த் தேசியவாத அரசியல் நிலைப்பாடும் கொள்கையும் போராட்டங்களும் அவற்றில் பின்பற்றப்பட்ட தந்திரோபாயங்களும் வழிகாட்டல்களும் எந்தளவிற்கு நியா யமானவைகளாகவும் வெல்லப்படுவதற்கு உரியனவாகவும் இருந்து வந்தன என்பது இதுவரை மீள் பரிசீலனைக்கு எடுத் துக் கொள்ளப்படவில்லை. இதில் முரண்நகையானது யாதெனில், கடந்த காலத்தில் தவறான கொள்கைக்கும் நடைமுறைக்கும் வழிகாட்டித் தலைமைதாங்கி வந்த அதே தமிழ்த் தேசியவாத அரசியல் தலைமைகள் தான் மீண்டும் தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்க முன்னிற்கின்றன. பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் பெறுவதினூடாக அல்லது உள்ளூராட்சி மன்றங்களில் பிரதிநித்துவம் பெறுவதன் மூலம் தாங்களே தமிழ் மக்களின் தலைவிதியைத் தீர்மானிப்பவர் களாக அங்கீகாரம் பெற்று நிற்பதாகக் கூறுகிறார்கள். தேர்தலில் வாக்குப் பெறுவது மக்களின் உரிய கொள்கை க்கு கிடைக்கும் அங்கீகாரம் அல்ல. ஏதாவது ஒரு கொள் கை முன்வைக்கப்பட்டு தேர்தலில் ஒரு கட்சி தனது வேட்பா ளர்களை நிறுத்தும் போது அங்கு தனிமனிதத் தகுதிகளே பிரதான கணிப்பிற் கொள்ளப்படுகின்றன.

வேட்பாளர்களாக நிறுத்தப்படுபவோர் எவரும் நேர்மை, சேவை, கொள்கைப் பிடிப்பு. அரசியல் அர்ப்ப ணிப்புச் சார்ந்த குண நலன்களுக்காக நிறுத்தப்படுவ தில்லை. நிறுத்தப்படும் வேட்பாளரின் ஊர், சாதி, சொத்து, சமூக அந்தஸ்து, முன்னைய பட்டம் பதவிகள், செலவுசெய் யக்கூடிய பண வசதி என்பனவே அங்கு பிரதானமானவை. இவை முதன்மையான உள்ளார்ந்த கணிப்பீடுகள் என்றால் இன, மொழி, மத, பிரதேச அம்சங்கள் பொருந்தப்பெற்ற குறுந்தேசியவாத அல்லது பிரதேசவாத அரசியல் மூலம் மேற்கூறியவற்றுக்குக் கொம்பு சீவி விடப்படுகின்றது. இதே நிலைதான் தெற்கின் பேரினவாத அரசியலிலும் முன் நிற்கின்றது. இங்கே பேரினவாதத்தால் குறுந்தேசியவாதம் ஊட்டம் பெறுகின்றது. அதேபோன்று அங்கே குறுந் தேசிய வாதத்தால் பேரினவாதம் வலுப்படுத்தப்படுகிறது.

இவ்வாறான பாராளுமன்ற அரசியலூடாகவே நமது நாடும் மக்களும் பயணித்து வருகிறார்கள். இப் பயணத்தில் தமிழ் அரசியல் தலைமைகள் அவ்வப்போது தமிழ் மக்களின் பறிக்கப்பட்ட மறுக்கப்பட்ட உரிமைகளுக்காக கொள்கை வகுத்து அவற்றைக் காட்டியே அரசியல் நடத்தி வந்தார்கள். அது பயன் தராது என்று கூறியே தமிழ் இளைஞர்கள் ஆயுத நடவடிக்கைகளில் இறங்கி அதனை ஆயுதப் போராட்டமாக மாற்றிக் கொண்டனர். இறுதியில் அதன் ஒட்டு மொத்தப் போராட்டத்திற்கும் புலிகள் இயக்கமும் பிரபாகரனும் பொறுப்பேற்றுத் தம்மைத் தமிழ் மக்களின் ஏகப் பிரதி நிதிகளாக்கிக் கொண்டனர். அதன் இறுதி அத்தியாயம் எவ் வாறு முடிந்தது என்பது யாவரும் அறிந்ததே.

போர் முடிந்து மூன்று வருடங்கள் கழிந்தும், அரசி யல் தீர்வு முன்வைக்கப்படவில்லை. அதேவேளை தமிழ் மக்க ளது தரப்பில் சுய மதிப்பீடு மூலமோ சுய விமர்சன மூலமோ கடந்த காலக் கொள்கைகளும் போராட்ட நடைமுறைகளும் கேள்விகளுக்கு உட்படுத்தப்பட்டு இன்றைய சூழலுக்கு உரிய கொள்கைகள் எதுவும் வகுக்கப்படவில்லை. தமிழ் மக்களி டையே ஆதிக்க அரசியல் தலைமைகளாக நீடித்து நிலைத்து வந்த தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி, ஆயுத இயக்கங்களாகிப் பின்பு ஜனநாயக நீரோட் டம் என கூறிப் பாராளுமன்ற தேர்தல் அரசியலில் ஈடுபட்டு வந்துள்ள எல்லா இயக்கங்களுமே இன்றும் தாமே தமிழ் மக்களின் தலைமைகள் என்று கூறி நிற்கின்றனர்.

**தமிழ் மக்களிடையே முன்னெடுக்கப்பட்டு வந்த தமிழ்த் தேசியவாத அரசியல் நிலைப்பாடும் கொள்கையும் போராட்டங்களும் அவற்றில் பின்பற்றப்பட்ட தந்திரோபாயங்களும் வழிகாட்டல்களும் எந்தளவிற்கு நியாயமானவைகளாகவும் வெல்லப்படுவதற்கு உரியனவாகவும் இருந்து வந்தன என்பது இதுவரை மீள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தமிழரசுக் கட்சி உட்பட ஐந்து கட்சிகள் இணைந்து நிற்கின்றன. அதற்கப் பால், தமிழ் காங்கிரஸ் இணைந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்ற அமைப்பு இருந்து வருகிறது. முன்னையவை இணைந்த தமிழ் தேசிய கூட்டமைப்பு பதின்மூன்றாவது திருத் தம் கிடைத்தால் போதும் என்ற நிலையில் இருந்து வருகிறது. முடியுமானால் ஏதாவது போட்டுத் தந்தால் முழுமையாகத் திருப்தியடைவோம் என்றவாறு இருந்து வருகிறது. இதற்கான வாக்குறுதி அரசாங்கத் தரப்பில் இருந்து கிடைத்தால் பாராளு மன்ற தெரிவுக் குழுவிற்குச் செல்வோம் என்று கூறி நிற்கின் றார்கள். அதுவே அவர்களின் உச்சக் கோரிக்கை. அதற்கா கப் பிரதேச சபைகள் தொட்டுப் பாராளுமன்றம் வரை எங்க ளுக்கே வாக்களியுங்கள் என்றே தமிழ் மக்களிடம் கேட்டு நிற்கின்றனர். அதேவேளை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யினர் இரண்டு தேசக் கொள்கையை அதாவது ஒரே நாட்டில் சிங்கள தமிழ் தேசங்கள் இருப்பதாகவும் தமிழ்த் தேசத்திற்கு சுயநிர்ணய உரிமை வழங்க வேண்டும் என்பதாகவும் பேசிவ ருகின்றனர். அவர்களது நிலைப்பாடு, சுற்றிவளைத்து மீண் டும் தமிழீழக் கோரிக்கையின் இடத்திற்குச் செல்வதாகவே உள்ளது. அதேவேலை அவர்கள் மலையக தமிழ், முஸ்லிம் தேிசிய இனங்களின் உரிமைப் பற்றி வாய்திறப்பதில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முற்றுமுழுதாக நம்பி யும் விசுவாசித்து இருப்பதும் நிற்பது இந்தியாவையேயாகும். அதேவேளை, இந்தியாவின் பூரண ஆசிர்வாதத்துடன் அமெ ரிக்காவையும் நாடிப் பணிந்து நிற்கிறது. இன்று இந்தியாவும் அமெரிக்காவும் ஒரே நேர்கோட்டில் இருக்கிறதால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கு அதிக சிரமம் இல்லை. நாம் இந்தி யாவுடன் இருப்பது அடிப்படையானது, ஆனால் அமெரிக்க மேற்குலகு எமது நம்பிக்கையான எசமானர் நிலையில் உள் ளவர்களே என்பதே தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நிலைப்பா டாகும்.

அதேவேளை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யினர் இந்தியாவை விட அமெரிக்க மேற்குலகத்தவர் களையும் புலம் பெயர்ந்த தமிழர்களின் மேட்டுக்குடியினரை யும் நம்பியுள்ளனர். சுய நிர்ணய உரிமை என்ற பெயரில் இறுதியாக இடம்பெற்ற தென் சூடான் பிரிவினை போன்று ஒன்று ஏற்படும், அதற்காகச் செயற்படுவோம் என்பதே அவர்க ளது உள்ளார்ந்த விருப்பமும் இலக்குமாகும்.

இந்நிலையில், தமிழ் மக்களின் முன்னால் உள்ள தெரிவு என்ன என்பது மிக முக்கியமான கேள்வியாகிறது. கடந்த அறுபத்தைந்து வருடகாலமாக முன்னெடுக்கப்பட்டு தோல்வியுற்று அழிவுகளைத் தேடித்தந்த இரண்டு விடயங்கள் அனுபவங்களாகவும் பாடங்களாகவும் பட்டறிவாகவும் உள் ளன. ஒன்று பாராளுமன்ற அரசியலும் அதில் தமிழர் பழ மைவாத ஆதிக்க அரசியல் போக்கின் கெட்டியான தன்மை யாகும். இரண்டாவது, பாராளுமன்ற அரசியலில் முன்வைக் கப்பட்டுப் பின்பு ஆயுத இயக்கங்களின் கரங்களுக்குக் கைமாறி இறுதியில் யுத்த அழிவு வரை புலிகள் இயக்கத்தால் முன்னெடுக்கப்பட்ட தமிழீழக் கோரிக்கையாகும். இவை இரண்டையும் இதுவரை தமிழ் மக்களில் பெரும்பகுதியினர் தமது அரசியல் தெரிவாக கொண்டிருந்தனர் என்பது மறைப் பதற்குரியதல்ல.

ஆனால் இப்போது தமிழ் மக்கள் பழையபடியான அதேவகையான அல்லது அடிப்படையில் மாற்றம் எதனையும் கொண்டிராது முன்னெடுக்கப்படும் மேற்கூறிய தெரிவுகளுக்கு எவ்வாறு பதில் அளிக்கப் போகின்றார்கள்? பேரினவாத ஒடுக் குமுறையை எதிர்ப்பதற்குத், தமிழ்க் குறுந்தேசியவாத நிலை ப்பாடுகள் கொண்ட அரசியல் தெரிவுகள் போதுமான வையுமல்ல பொருத்தமானவையுமல்ல.

எனவே நாட்டின் பேரினவாத ஒடுக்குமுறையினை எதிர்கொள்ளக்கூடிய இன்றைய யதார்த்தத்ததிற்குப் பொருந் தக் கூடிய சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான சுயாட்சிக் கோரிக்கையை முன்னிறுத்தி அதன் கீழ் தமிழ் மக்களை அணித்திரளச் செய்வதும் வெகுஜனப் போராட்டப் பாதையில் வழிநடக்க வைப்பதும் இன்றைய தேவையாகும். இதற்கு, ஊறிப்போன பழைமைவாதத் தமிழ்த் தேசிய வாதப்பாதை யின்று வேறுபட்டதாகி ஆகக் குறைந்தது முற்போக்கான தமிழ்த் தேசிய வாதப்பாதையிலாவது பயணிப்பதற்கு முன்வ ருவது முக்கிய தெரிவாகும். இது ஒரு சவாலுக்குரிய அரசி யல் விவாதமாகும். சுயநிர்ணயம், ஜனநாயகம், சமத்துவம், ஐக்கியம் என்பனவற்றை முதன்மைப்படுத்தும் தேசியம் ஒன்று தமிழ் மக்கள் மத்தியில் தோற்றுவிக்கப்பட வேண்டும். அத்த கைய முற்போக்குத் தமிழ் தேசியம் வேண்டிநிற்கும் அரசியல் நிலைப்பாட்டுடன் உழைக்கும் வர்க்க ஜனநாயக முற்போக்கு இடதுசாரி சக்திகளுடன் நல்லுறவையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்தி முன்செல்வதே தமிழ் மக்களுக்கு முன்னால் உள்ள சரியான தெரிவாக இருக்க முடியும்.

•••••

காவத்தை, எந்தானை தோட்டத்தை சேர்ந்த வள்ளியம்மாவுக்கு எழுத வாசிக்கத் தெரியாது. தன் மகள் தேவிகாவையும் மற்றப் பிள்ளைகளையும் நன்றாகப் படிக்க வைக்க வேண்டும் என்ற அக்கறை அவளுக்கு எப்போதும் உண்டு. பல கஷ்டங்களுக்கு மத்தியில் தேவிகாவை சாதாரண தரம் வரை படிக்கவைத்து விட்டாள். ஆரம்பத்தில் தேவிகா தோட்டத்தில் வேலை செய்யாமல் இருக்கும் அளவிற்குப் படித்தாலே போதும் என்றே வள்ளியம்மா நினைத்திருந்தாள். ஆனால் தன் மகள் நன்றாகப் படிப்பதாக ஆசிரியர்கள் கூறியிருந்ததால் மகள் விரும்புகிற மாதிரிப் படிக்கட்டும், அதற்கு உதவது என்ற முடிவை வள்ளியம்மா எடுத்துவிட்டாள். தேவிகாவுக்கு உயர்தரத்தில் உயிரியல் விஞ்ஞானத் துறையில் படிக்க ஆசை. சில நாட்களுக்கு முன் வந்த சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளில் தேவிகா தனது பாடசாலையின் முதல் மாணவியாக சித்தி பெற்றாள். வள்ளியம்மாவுக்கு அளவில்லாத சந்தோஷம். தமது பிரதேசத்தில் விஞ்ஞானத் துறைப் பாடசாலை இல்லாததால் மேற்கொண்டு படிக்க ஹட்டனுக்குப் போக வேண்டும் என தேவிகா வள்ளியம்மாவுக்கு சொன்னாள். அதற்கு மாதம் எவ்வளவு செலவாகும் எனக் கேட்டாள். 7000 வரை ஆகும் என்றாள் தேவிகா. தனது வருமானத்தில் மற்ற இரு பிள்ளைகளின் கல்வி மற்றும் குடும்ப செலவு எப்படியும் ஈடுசெய்ய முடியாது என்று தெரிந்தும் அதனை எப்படி சமாளிப்பது என்ற தீவிர சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறாள்.

•••



# மலையகத்தில் கல்வி: அம்மாவும் மகளும்

## முப்பரிமாணம்

கொட்டகல ரொஸிட்டவைச் சேர்ந்த சுகுணா ஒரு ஆசிரியை. தனது மகள் வித்தியாவை வைத்தியராக்கிப் பாரப்பதே அவளது கனவு. கணித விஞ்ஞான பாடங்களுக்கு இரண்டு தனியார் வகுப்புகளுக்கு அனுப்பிச் சாதாரண தரப் பரீட்சைக்குத் தயார்படுத்தி வந்தாள் சுகுணா. எதிர்பார்த்தது போலவே வித்தியா சிறந்த பெறுபேறுகளைப் பெற்றாள். வித்தியாவை ஹட்டனில் உள்ள பிரபல பாடசாலையில் சேர்த்துவிட்டால் தனது கனவை இலகுவாக அடைய முடியும் என்ற நம்பிக்கையுடன் சுகுணா மகளை அப் பாடசாலையில் சேர்க்க விண்ணப்பித்துவிட்டாள். அந்த பாடசாலைக்கு அதிக டொனேஷன் வாங்குவார்கள் என்று சுகுணாவிற்கு தெரியும். எனவே, ஆசிரிய சேவைக்கு வந்த தனது 18 வருட காலத்தில், தனது 4வது லோனுக்கும் விண்ணப்பித்துவிட்டு காத்திருக்கிறாள்.

•••

கண்டி அனிவத்தையில் வசிக்கும் ரேகாவின் மகள் அஸ்வினி தனது அம்மாவின் எதிர்பார்ப்பிற்கு பங்கம் விளைவிக்காது சிறந்த பெறுபேற்றைப் பெற்றுள்ளாள். ரேகா தான் வைத்தியராக வேண்டும் என்று கற்ற போதும் அது கைகூடவில்லை. கண்டியின் முன்னணி வியாபாரியின் மனைவியான ரேகா தற்போது இல்லத்தரசியாகவே இருக்கிறாள். தனது மகள் அஸ்வினியை தனியார் வகுப்புகளுக்கு அப்பால் 4 பாடங்களுக்கு பிரத்தியேக வகுப்புகளுக்கு ஏற்பாடு செய்து கொடுத்திருந்தாள். அஸ்வினி தற்போது கண்டியில் முதன்மை மகளிர் கல்லூரியிலே கற்று வருவதனால் புதிய பாடசாலை பற்றிய பிரச்சினை எதுவும் இல்லை. சாதாரண தரப் பரீட்சையிலும் சிறந்த பெறுபேறைப் பெற்றுவிட்டாள். தன் மகள் மருத்துவத்துறையில் பல்கலைக்கழகம் செல்ல முடியாமல் போனால் என்ன செய்வது என்பது தொடர்பாக சிந்திக்க ஆரம்பித்துவிட்டாள். அப்படி நடந்தால் அஸ்வினியை உள்நாட்டில் ஏற்படுத்தியுள்ள தனியார் மருத்துக் கல்லூரிக்கு அனுப்புவதா அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகம் ஒன்றிற்கு அனுப்புவதா என்பது பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கிறாள்.

•••

மூன்று தாய்மார்களின் எதிர்பார்ப்புகளும் ஒரேமாதிரியானவையாக இருக்கலாம். என்றாலும் அவரவர் பொருளாதார இயலுமை அதனை அடையும் வழிகளை தீர்மானிக்கின்றது.

# சாதாரண உழைக்கும் மக்கள் இனவாதிகள் அல்லர் நேர்மையான பௌத்த பிக்குகளும் இருக்கின்றார்கள்

இலங்கையில் இன்று பௌத்த பேரினவாதமும் பௌத்த மத அடிப்படைவாதமும் தலைவிரித்து நிற்கின்றன என்பது காணக்கூடியதாகும். இதற்கு ஆளும் வர்க்க அரசியல் தலைவர்கள் உருவேற்றி வைத்திருப்பதுடன் தமக்கு தேவையான பொழுது பயன்படுத்தியும் கொள்வர். அதேவேளை அரசாங்க நிறுவனங்களில் இந்த பௌத்த சிங்களப் பேரின வாதம் தமது நாளாந்த வேலையை செய்த வண்ணமே உள் ளன. அரசாங்கம் அரச நிறுவனங்களில் இருந்து வரும் பேரின வாதத்தை மதத்தின் பேரிலான அமைப்புகளும் அவற்றின் தலைவர்களும் செய்து வருகின்றன. இதில் பாராளுமன்றத்தில் உள்ள பௌத்த பிக்குமாரும் வெளியே உள்ளவர்களும் முன் னிலை வகித்து வருகின்றனர்.

அதேவேளை இத்தகைய பேரினவாத வரைமுறைக ளுக்கு அப்பால் ஏனைய இன மக்களை மதிக்கின்ற பிக்குமார் களும் அவர்களின் நிறுவனங்களும் இருந்து வருகின்றன. அவ ற்றிலிருந்து இடதுசாரிக் கொள்கைகளைப் பேசி நடைமுறைப் படுத்தி வந்த பிக்குகள் இருந்தனர். இன்றும் இருக்கின்றனர். அத்தகையோரை முப்பது வருட யுத்தமும் புலிகளின் அராஜக நடவடிக்கைகளும் தமிழ் மக்களது உரிமைக்காக வாய்த் திறக்க முடியாத அளவுக்கு மௌனமாக்கிவிட்டன. தெற்கே பேரினவாதம் என்றால் வடக்கே தமிழீழக் குறுந்தேசியவாதம். ஒன்றினால் மற்றொன்று வளர்ந்தது ஒரு நீண்ட கதைதான்.

இப்பொழுதும் பௌத்ததை நன்னெறி மார்க்கமாக கொண்டு எல்லா இன மக்களையும் மதித்து நடந்துவரும் பிக்கு மார்கள் இருக்கவே செய்கின்றார்கள். அண்மையில் வடக்குக் கிழக்கு பிரதேசங்களில் பௌத்த விகாரைகள் புத்தர் சிலைகள் நிறுவுவது அவற்றுக்கான நிலங்களை அபகரிப்பது பற்றி தமிழ் நாளிதழ் ஒன்று தேசிய பிக்குகள் முன்னணி என்ற பிக்குகளின் அமைப்பிடம் கருத்துக் கேட்டிருந்தது. அந்த முன் னணியின் பிரதித் தலைவர் கல்யாண ரன்சிறீ தேரர் அது பற்றி கருத்துக் கூறும் போது யுத்தம் முடிவடைந்ததையடுத்து, தமிழ் மக்களுக்கு அவர்களின் நிலங்களை அரசு மீளப் பெற்றுக் கொடுத்திருக்க வேண்டும்; வயல் நிலங்களைக் கையளித்திரு க்க வேண்டும். ஆனால் அரசு அவ்வாறு செய்ய முயலவில்லை. யுத்தம் முடிவடைந்த பேதிலும் தமிழ் மக்கள் இருண்ட காலத் தில் இருந்து மீளவில்லை. அவர்களை மீட்க அரசு எவ்வித நடவடிக்கையும் செய்யவில்லை.

யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில் அரசாங்கம் புது விதமான பிரச்சினைகளை உருவாக்க முயற்சிக்கின்றது. பௌத் தர்கள் அல்லாத தமிழர்கள் செறிந்து வாழும் வடக்கு பிரதேசத் தில் விகாரைகளை அமைப்பதானது நாட்டில் இனவாதத்தையும் மதவாதத்தையும் தூண்டும் செயலாகும். தெற்கிலே நிறையவே விகாரைகள் உள்ளன. பிக்குகள் இல்லாமையினால் அவை பரா மரிக்கப்படுவதில்லை. எனவே இருப்பனவற்றை கூட அரசுக்கு பாதுகாக்கத் தெரியவில்லை மாறாக வடக்கு கிழக்கில் புதிதாக விகாரைகளை அமைப்பதோ புத்தர் சிலைகளை நிர்மாணிப் பதோ மதப் பற்று அல்ல. இவ்வாறு தேசிய பிக்குகள் முன்னணி யின் பிரதித் தலைவர் ரண்சிறீ தேரர் குறிப்பிட்டார்.

எனவேதான் சிங்கள மக்கள் எல்லோரும் அல்லது பௌத்த பிக்குகள் எல்லோரும் பேரினவாதிகள் அல்லர். ஆவர்க ளின் மத்தியில் உண்மையான பௌத்த மத மார்க்கத்தைப் பின் பற்றுவோரும் ஏனைய இன மத மொழி மக்களை நேசிக்கும் பௌத்த பிக்குமாரும் இருக்கவே செய்கின்றார்கள். எனவே இரு தரப்பிலும் இருந்தும் உயர்த்திப் பிடிக்கப்படும் பேரினவாதத் திற்கும் குறுந்தேசியவாதத்திற்கும் அப்பால் உழைக்கும் மக்களை வர்க்க அடிப்படையில் அணிதிரட்டுவதன் மூலம் மட் டுமே பிரச்சினைகளின் உண்மைத்தன்மைகளையும் அவற்றின் வேர்களையும் கண்டுகொள்ள முடியும்.

இலங்கையன்

# அபிவிருத்தியடைவோர் யார்?

இலங்கை அபிவிருத்திப் பாதையில் வீறுநடை போடுவதாக வும் அதன் மூலம் ஆசியாவின் அதிசயமாக மாறப் போகிறது என்றும் மகிந்த சிந்தனையின் ஆதரவாளர்கள் மக்களுக்குப் பொய் கூறி வருகின்றார்கள். ஆனால் உண்மை என்னவெ னில் அபிவிருத்தியின் பெயரால் பணக்காரர்கள் மேலும் பண க்காரர்களாகிக் கொண்டே போகின்றார்கள். அதேவேளை வசியதியற்றோர்கள் மென்மேலும் வசதியற்றவர்களாகிக் கொண்டே போகிறார்கள். இதற்குப் பல உதாரங்களைக் காட் டமுடியும்.

தலைநகர் மற்றும் முக்கிய நகரங்களில் உள்ள இரவு விடுதிகளில், ஐந்து நட்சத்திர, நான்கு நட்சத்திர, மூன்று நட்சத்திர ஹேட்டல்களில் மாலைப் பொழுதுகளில் இர வுகளில் கூடிக் குலாவித் தின்று குடித்து கும்மாளமிடும் வர்க் கத்தைக் காணலாம். மக்களிடம் பல வழிகளிலிலும் சுரண்டல் மூலம் கொள்ளையடிக்கும் இப்பணக்காரக் கும்பல்கள் தான் இந்நாட்டில் ஆளும் வர்க்கத்தினர். ஆட்சியைத் தீர்மானி ப்போர், அதற்கு முண்டு கொடுப்போர், நாட்டைப் 'பாதுகா ப்போர்', மக்களை வழிநடத்துவோர், தொழில் அதிபர்கள் என்ற முகங்களில் இவர்கள் அனைவருமே சுரண்டல் ஊழல் முறைகள் மூலம் பெரும் பணம் குவிப்போர்.

இத்தகைய பேர்வழிகளே சுவிஸ் வங்கியில் இரகசி யமாக பணம் போட்டு முதலீடு செய்து வைத்திருக்கின்றனர். சுவிஸ் வங்கி தன்னிடம் கணக்கு வைத்திருப்போரை இலகு வில் வெளியே கூறாது இரகசியம் பாதுகாக்கும் வங்கியாகும். குறிப்பிட்ட ஆகக்கூடியப் பணத்தொகை இருந்தால் மட்டுமே அவ்வங்கியில் பணம் இடமுடியும். இலங்கையர் தொடர்பில் கசிந்துள்ள புதிய தகவல்கள் ஊடகங்களில் வெளி வந்துள் ளன. இலங்கையர்கள் அந்த வங்கியில் 85 மில்லியன் சுவிஸ் பிரேங் (ஒரு சுவிஸ் பிரேங்-1.048 அமெரிக்க டொலர்) பண த்தை வங்கியில் இட்டு வைத்திருக்கின்றார்கள் என்பதாகும். இவ்வாறு அங்கு இரகசியமாக பணம் போட்டு வைத்திருப் பவர்களில் பெரும் அரசியல்வாதிகள், கருப்பு பணம் சேர்த் தோர், குறுக்கு வழிச் சம்பாத்தியம் செய்வோர், பாதாள உல கத்தோர், ஆட்சி தலைவர்கள், உயர் அதிகாரிகள் என்று இப்பட்டியல் நீண்டு கொண்டே போகின்றது. சுவிஸ் வங்கியில் பணம் இடுவதில் இன மத மொழி நாடு நிற பேத கட்டுப்பாடு ஏதம் கிடையாது. ஒரே ஒரு தேவைப்பாடு சுரண்டும் வர்க்க மாக இருத்தல் மட்டுமேயாகும்.

அண்மையில் கொழும்பில் ஸ்ரீ லங்கன் விமான சேவையின் தலைவர் நிசாந்த விக்கிரமசிங்க வீட்டில் கொள்ளை இடம்பெற்றது. இவர் ஜனாதிபதியின் நெருங்கிய உறவினர் என்பது குறிப்பிடத்தக்கது. கொள்ளைபோன பொரு ட்களில் நாலு மில்லியன் அமெரிக்கடொலர் நோட்டுகள், ஐம் பது இலட்சம் ரூபா பெறுமதியான வைரம் பதிக்கப்பட்ட தங்கக் கடிகாரம் ஆகியன அடங்கும். இவைதான் இந்நாட்டு பணக்காரர்களின் வீட்டுப் பாவணைப் பொருட்களில் சில என் பது கவனத்திற்குரியது. இது போன்ற பல விடயங்களை நாட் டில் நாளாந்தம் பணக்கார்கள் மத்தியில் காண முடியும். இவை செய்திப் புதினங்கள் அல்ல. மக்களின் சிந்தனைக்கும் அரசியல் விழிப்புணர்வுக்கும் உரியவையாகும்.

# தமிழகத்தின் சட்டசபை கோடிஸ்வரர்கள்

தமிழ் நாட்டின் சட்டசபையில் மொத்தம் 234 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களிடையே 120 பேர் கோடீஸ்வர்கள். நம்பமுடியுமா. நம்பிதான் தீரவேண்டும். அவர்களது வேட்பு மனுக்களில் அவர்களே வெளிப்படுத்திய சொத்து விபரத்தின் அடிப்படையிலேயே இக்கோடீஸ்வரர்கள் கணக்கிடப்பட்டுள்ளனர். இத்தொகை 2006ம் சட்ட சபைத் தேர்தலின் போது 57 பேர் கோடீஸ்வர்களாக இருந்தனர். இப்போது அது இரு மடங்காகியுள்ளது. இந்த 120 கோடீஸ்வரர்களில் அதிகமானோர் அ.இ.அ.தி.மு.க, தி.மு.க, கங்கிரஸ் உறுப்பினர்களாவர். இவர்கள் எல்லோருமே தமிழர்கள். தமிழர்களைத் தமிழர்களே ஆண்டுவரும் தமிழகத்தில் இவ்வாறு இருப்பதில் ஆச்சரியம் எதுவும் இல்லை. எல்லா இடங்களிலும் இனம் மொழி மதம் என்னும் பெயரில் அதிகாரமும் பதவிகளும் பணம் படைத்தோரின் கைகளிலேயே இருந்து வருகிறது. இதற்கு ஒரு உதாரணமே தமிழக சட்ட சபையாகும்.

# வடக்குக் கிழக்கில் நிலப்பறிப்பும் ஆக்கிரமிப்பும்

## மக்கள் எழுச்சியும் போராட்டமும் அவசியம்

வடக்கு கிழக்கில் போருக்குப் பின்னான காலத்தில் நிலப்பறிப்பு நில ஆக்கிரமிப்பு என்பன புதுப்புது வடிவங்களில் வேகம் பெற்றுள்ளன. ஏற்கனவே திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலம் கிழக்கின் வளமான நிலங்கள் அபிவிருத்தி என்ற பெயரில் திட்டமிட்ட குடியேற்றங்களாக்கப்பட்டன. அவற்றில் தூரப் பிரதேசங்களில் இருந்த சிங்கள மக்கள் வற்புறுத்திக் கொண்டுவரப்பட்டு குடியேற்றம் செய்யப்பட்டனர். அவர்களுக்கான விவசாய முயற்சிகளுக்கும் ஏனைய உட்கட்டமைப்புக்களுக்கும் அரசாங்கமே முன்னின்று வசதிகளும் சலுகைகளும் வழங்கிக் கொண்டது. தமிழ் முஸ்லிம் மக்களின் பாரம்பரிய பிரதேசமான கிழக்கு மாகாணம் இன்று மூவின மக்களது மாகாணம் என்பதாக மாற்றப்பட்டுள்ளது. இதே நிலையினை வடக்கில் கொண்டுவருவதே பேரினவாத அரசாங்கத்தின் இன்றைய முயற்சியாகும். ஜனாதிபதி பாதுகாப்புச் செயலாளர் மற்றும் பேரினவாதக் கட்சிகள், பௌத்த அமைப்புக்களின் வெளிப்படையான தர்க்கம் யாதெனில் எந்தவொரு சமூகம் அல்லது இனத்திற்கும் பாரம்பரிய தனித்த பிரதேசம் என்ற ஒன்று இருக்கக்கூடாது என்பதாகும். அப்படி இருந்து வந்தததாலேயே தாயகக் கோட்பாடும் தனிநாட்டுக் கோரிக்கையும் தோன்றியது என்பது அவர்களது நியாயமாகும். அதேவேளை முழு நாடும் பௌத்த சிங்கள மக்களது பாரம்பரிய பூமி அதாவது எங்களது நாடு(அப்பே ரட்ட) என்பதும் அவர்களது தர்க்கமாகும். தமக்கொரு நீதி மற்றையோருக்கு வேறொரு நீதி. மேற்கூறிய அடிப்படையில் வடக்கை மூவின மக்களது பிரதேசமாக்குவது என்ற மூச்சிலேயே தற்போதைய நிலப்பறிப்பும் நில ஆக்கிரமிப்பும் இடம்பெற்றுவருகிறது. இதில் அரசாங்கப் பணிமனைகள் காணிச் சுவீகரிப்பு என்பதன் பேரிலும் அபிவிருத்தியின் ஊடாகவும் தனியார் காணிகளும் பொதுக் காணிகளும் சுவீகரிக்கப்படுகின்றன.

இவை ஒருபுறம் என்றால் மறுபுறத்தில் படைமுகாம்கள் உள்ள பகுதிகளிலும் அவற்றுக்கு அப்பாலும் நிலங்கள் காணிகள் கையகப்படுத்தும் முயற்சிகள் நடைபெறுகின்றன. படையினரின் தேவைக்கும் பொது விடயங்களுக்கும் என்று கூறியே இந்நில அபகரிப்பும் ஆக்கிரமிப்பும் செய்யப்படுகிறது. இதில் தனியார் காணிகளும் கோவில் காணிகளும் உள்ளடங்குகின்றன. அரசாங்க நிலங்களைக் கூட எந்த அடிப்படையில் படையினர் எடுத்துக்கொள்ள முடியும்? சட்ட ஆட்சி தனிநபர் சுதந்திரம் அவற்றின் அடிப்படையிலான மக்களது வாழும் உரிமை, சொத்துக்களை வைத்திருக்கும் உரிமை என்பன பற்றி எவ்வகையிலும் கவனத்தில் கொள்ளாத நிலையிலேயே இவ்வாறான நிலப்பறிப்பும் நில ஆக்கிரமிப்பும் நடைபெருகிறது.

எனவே முற்றிலும் பேரினவாத நோக்கிலும் போக்கிலும் தான் இவை நடைபெறுகின்றன. கிழக்கில் தொடங்கப்பட்டு வடக்கின் எல்லையோரங்களை அண்டிய நிலங்களில் திட்டமிட்ட குடியேற்றங்களைக் கொண்டு வந்து இன்று அவற்றை விஸ்தரிக்கும் போக்கு அதிகரிக்கப்பட்டு வருகிறது. இதற்கு ஏதுவாகவே பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. வடக்கில் தாங்கள் தீர்மானிக்கும் இடங்களில் எல்லாம் பௌத்த விகாரைகளும் புத்தர் சிலைகளும் உருவாக்கப்படுகின்றன. இவை மத நல்லெண்ணத்தோடு செய்யப்படுவன அல்ல. முழுக்க முழுக்க இன மோதலைத் தூண்டக்கூடிய வகையில் செய்யப்படுவதாகும்.

இது பற்றி அண்மையில் தேசிய பிக்குகள் முன்னணி சார்பில் ஒரு அறிக்கை வெளியிடப்பட்டதைக் காண முடிந்தது. அதில் பௌத்தர்கள் வாழும் பிரதேசங்களில் பௌத்த விகாரைகளையும் புத்தர் சிலைகளையும் பாதுகாத்துக் கொள்ளாத அரசு ஏன் பௌத்தர்கள் இல்லாத வடக்கில் வலிந்து விகாரைகளையும் புத்தர் சிலைகளையும் வைக்க வேண்டும் எனக் கேட்டிருந்தது.



இவ்வாறான நிலப்பறிப்பு வடக்கு கிழக்கில் மட்டுமன்றி மலையகத்திலும் காலாதிகாலமாக நடைபெற்று வரும் ஒன்றாகும். மலையகத் தோட்டங்களில் இன்றும் கூட ஒரு துண்டு நிலம் மலையக மக்களுக்கு வழங்கப்படவில்லை. ஆனால் மேற்படி தோட்டங்களில் உள்ள தரிசு நிலங்களைச் சுவீகரித்து சிங்கள மக்களுக்கான கொலனிகளை அரசாங்கம் உருவாக்கிக் கொடுத்துள்ளது. இது சிங்கள தமிழ் உறவை பகைமையுடையதாக நீடிப்பதற்கும் தமிழ்த் தொழிலாளர்களை நிலமற்ற கூலித் தொழிலாளர்களாக வைத்திருப்பதற்குமான ஒன்றேயாகும். இதுபற்றி அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருந்து வரும் மலையகத் தலைவர்கள் என்போருக்கு அக்கறை கிடையாது.

எனவே தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் செய்து வந்த நிலப் பறிப்பும் நில ஆக்கிரமிப்பும் வடக்கு கிழக்கிலும் மலையகத்திலும் இப்போது தொடர்கின்றது. அவை வடக்கு கிழக்கிலும் அதிக முனைப்புடன் முன்கொண்டு செல்லப்படுகிறது. வடக்கில் படையினர் முன்னின்று இதனை செய்ய கிழக்கில் அரசாங்கமும் அமைச்சர்களும் நிலங்களைச் சுவீகரித்து உள்ளனர். அந்நிய கம்பனிகளுக்கும் கொடுத்து வருகின்றனர். வளமான நிலங்களும் அழகான கடற்கரைகளும் உல்லாச விடுதிகளுக்கும் ஏனைய ஆடம்பரத் தேவைகளுக்கும் வழங்கப்படுகின்றன.

வடக்கில் மக்களது காணிகள் உயர் பாதுக்காப்பு வலயம், படை முகாம்கள், பயிற்சி நிலையங்கள் என்பனவற்றுக்காக அபகரிக்கப்படுகின்றன. உதாரணமாக பலாலி படை முகாமைச் சுற்றிய பல கிராமங்கள் இன்னமும் மக்கள் மீளச் செல்வதற்கு அனுமதியளிக்கப்படவில்லை. அப்பகுதியில் மக்களது அடிப்படை உரிமைகள் நசுக்கப்பட்டே வருகின்றது. நீதிமன்றத் தீர்ப்பில் கூறியவாறு கூட மக்களது இடங்கள் முழுமையாக அவர்களிடம் கொடுக்கப்படவில்லை. 1990ம் ஆண்டுகளில் இருந்து வலி வடக்கின் மக்கள் அகதிகளாக அலைந்து வாழும் வாழ்வையே வாழ்ந்து வருகிறார்கள்.

மகிந்த சிந்தனை அரசாங்கத்தின் கீழான நிலப்பறிப்பு நில ஆக்கிரமிப்பு திட்டமிடப்பட்ட குடியேற்றங்களைப் பார்க்கும் போது அவை பலஸ்தீனத்தில் இடம்பெற்றுவரும் சியோனிசக் குடியேற்றங்களுக்கு ஒப்பானவையாகவே காணப்படுகின்றன. இத்தகைய சியோனிசக் கொள்கையை எதிர்ப்பதாகக் கூறிப் பலஸ்தீனத்தை ஆதரித்தும் வருபவர் மஹிந்த ராஜபக்ச. அவர் நீண்டகாலமாக பலஸ்தீன ஆதரவு முகம் காட்டுபவர் மட்டுமன்றி இலங்கை பலஸ்தீன நட்புறவுக் கழகத்தின் தலைவராகவும் இருப்பவர். அத்தகையவரது ஆட்சியிலேயேதான் இப்போது வடக்கு கிழக்கில் நிலப்பறிப்பும் நில ஆக்கிரமிப்பும் இடம்பெற்று வருகின்றன.

இவற்றுக்கு எதிராகத் தமிழ் கட்சிகள் எதிர்ப்பும் கண்டனமும் தெரிவித்து வருகின்றன. அவற்றை வெறுமனே தேர்தல் அரசியலுக்குள் முடக்காது பரந்துபட்ட மக்களை அணிதிரட்டிய வெகுஜன எழுச்சியாக முன்னெடுப்பது அவசியம். அதற்கான ஜனநாயக முற்போக்கு இடதுசாரி சக்திகளது அணித்திரள்வும் அவசியமாகும்.

# யாழ். போதனா வைத்தியசாலை மக்களுக்குரியதாகும்

## ஊழல் மோசடி அதிகார துஸ்பிரயோகம் எதிர்க்கப்பட வேண்டும்

வடக்கோன்

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற வரும் சம்பவங்களை சமூக அக்கறையாளர்கள் அனைவரையும் அதிர்ச்சிக்கும் சினத்திற்கும் உள்ளாக்கியிருக்கிறது. வடபுலத்திற்கு சேவையாற்றி வரும் ஒரேயொரு போதனா வைத்தியசாலை யாழ். போதனா வைத்தியசாலையாகும். சாதாரண சிகிச்சைத் தொட்டு அதியுயர் சிகிச்சை வரை அங்கு இருந்து வருகிறது. அதனால் யாழ். மாவட்டத்தில் மட்டுமற்றி ஏனைய நான்கு மாவட்டங்களில் இருந்தும் கடும் நோய்களுக்கான சிகிச்சைகளுக்காக இவ்வைத்தியசாலையை நம்பியே மக்கள் வருகின்றார்கள்.

அத்தகைய மக்களுக்கு நம்பிக்கையோடும் சேவை மனப்பான்மையோடும் நிர்வகிக்கப்பட வேண்டியது யாழ். போதனா வைத்தியசாலையாகும். ஆனால் அங்கு நிர்வாக மட்டத்திலும் வைத்தியர்கள் மத்தியிலும் இடம்பெற்று வரும் ஊழல் மோசடி அதிகார துஸ்பிரயோகம் போன்றன மட்டுமன்றி நியமனம் கேட்டு ஒரு வைத்தியரை ஆள் விட்டு தாக்க முயற்சிகள் இடம்பெற்றிருக்கின்றது. அண்மைய நாட்களில் மேற்படி வைத்தியசாலையில் நடந்தேறி வருபனவற்றைப் பார்க்கும் போது 'தமிழர்கள் திருந்தவே மாட்டர்கள்' என்று கூறப்படும் கூற்றில் உண்மை இருப்பதாகவே நம்ப வேண்டியுள்ளது. நோயளிக்கும் அவர்தம் உறவினர்களும் கடவுளுக்கு அடுத்ததாக நம்புவது வைத்தியர்களையேயாகும். அந்த அளவிற்கு வைத்தியர்கள் மீது நம்பிக்கையும் மதிப்பும் கொண்டே மக்கள் அவர்களை நம்பிச் செல்கிறார்கள். யாழ். போதனா வைத்தியசாலையை மக்கள் நாடிச் செல்கிறார்கள். அத்தகைய மக்கள் சாதாரண மக்களாகவே உள்ளனர். தனியார் வைத்தியசாலைகளுக்கு பெருந்தொகை பணத்தை செலுத்தி சிகிச்சை பெறமுடியாத மக்களே அங்கு வருகின்றார்கள். யுத்த காலத்தில் யாழ் போதனா வைத்திய சாலை வழங்கிய மிக பெரிய பங்களிப்பாகும். அங்கு கடமைபுரிந்த வைத்தியர்கள் தாதியர்கள் உள்ளிட்ட ஊழியர்களின் சேவை பாராட்டப்பட வேண்டியவையாகும்.

அத்தகைய வைத்தியசாலை போருக்கு பின்னரான காலத்தில் மென்மேலும் அதனது சேவையை விரிவாக்க வேண்டிய தேவையும் கடமையும் உண்டு. அதற்கான பலபக்க முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டும் வந்துள்ளன. இன்றும் தொடர்கின்றன. இவற்றின் மத்தியிவேயே சில ஊழல் முறைகேடுகள் பற்றிய குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் முக்கியமானது தற்போதைய பணிப்பாளரான பெண்மணியையும் அவரோடு இணைந்து நிற்கும் சில நிர்வாகப் பதவிகளுகளில் இருப்போரையும் நோக்கியே விரல்கள் நீட்டப்பட்டன. தற்போது வைத்திய வளாகத்தில் புதிய கட்டிடம் நிர்மானிக்கப்பட்டு வருகிறது. அதேபோன்று புதிய சிகிச்சைக்கான உபகரணங்கள் சிகிச்சைத் தளபாடங்கள் தருவிக்கப்பட்டுள்ளன. இவற்றின் மத்தியிலேயே அங்கு ஊழல் மோசடிகள் என்ற குற்றச்சாட்டுகள் பணிப்பாளரையும் அவரது துணையாளர்களையும் நோக்கி முன்வைக்கப்பட்டுள்ளன. அதனை முன்வைத்தோர் மீது பணிப்பாளரும் நிர்வாகிகள் சிலரும் கடுப்பாகிக் கொண்டனர் என்றே கூறவேண்டும். மேற்படி குற்றச்சாட்டை முன்வைத்தவர்களில் ஒருவரான வைத்தியக் கலாநிதியும் புற்று நோய் நிபுணருமான நடராசா ஜெயகுமாரின் வீடு மோசமாகத் தாக்கப்பட்டுள்ளது. இதனை செய்த அடியாட்கள் யார்? என மக்கள் மத்தியில் பலவாராக பேசிக் கொள்ளப்படுகிறது. கடந்த காலங்களில் இவ்வாறான அடிதடிகளுக்கு குண்டர் தாக்குதல்களுக்கு பெயர் போன கும்பலே இதனையும் செய்திருக்கும் என்றே நம்பப் படுகிறது.

இவை மட்டுமல்ல பவானி பசுபதிராஜா மீது பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. ஆண்மையில் யாழ் போதனா வைத்தியசாலைக்கான நரம்பியல், சிறுநீரக, இருதய மற்றும் மகப்பேற்று நிபுணர்களை சுகாதார அமைச்சு அனுப்பிய போது இதே பணிப்பாளர் இடமில்லை, வசதிகள் இல்லையெனக் கூறி அவர்களது நியமனங்களை ஏற்கவில்லை. அதனால் அவர்கள் வேறு மாவட்டங்களுக்கு நியமனம் பெற்றுச் சென்றனர். இதனால் சுகாதார சிகிச்சை நிபுணர்களை நியமிப்பதிலும் இழுபறி ஏற்பட்டுள்ளது. இத்தகைய குற்றச்சாட்டுகளை சுமத்தியவர்கள் போதனா வைத்தியசாலையின் வைத்தியர்கள் நிர்வாகத்தினர் மட்டுமல்ல. அரச மருத்துவ அதிகாரிகள் சங்கமும் அதன் செயலாளர் வைத்திய கலாநிதி சந்திக்கஎப்பிட்டகவேயும் தெரிவித்துள்ளனர். அதேவேளை பணிப்பாளரும் அவருக்கு ஆதரவான சிலரும் ஒரு குழுவாகவும் இவர்களது அடாவடித்தன செயற்பாடுகளை எதிர்த்து கூடுதலான வைத்தியர்களும் நிர்வாகிகளும் மற்றுமொரு குழவாகவும் நின்றவாறு உள்ளக மோதலில் ஈடுபட்டு வருகிறார்கள். இதனால் பாதிக்கப்படுவது தனியார் வைத்தியசாலைகளில் சிகிச்சைப்பெற வசதி இல்லாத நோயளிகளாகவே உள்ளனர்.

சிங்கள ஆதிக்கம் சிங்கள ஊடுருவல் பற்றி உச்சக் குரல் வைத்து நம்மை நாமே ஆளவேண்டும் எனக் கூறிவரும் தமிழ்த் தலைவர்கள் இது பற்றி என்னக் கூறுகிறார்கள்? தமிழர்கள் மத்தியில் மேட்டுக்குடி ஆதிக்க மனப்பான்மையுடன் இன்று வரை சகல அரசாங்கங்களிலும் உயர்நிர்வாகிகளாக இருந்து வருவோரின் அதிகார மமதை பற்றி தமிழ் ஆதிக்க அரசியல் தலைமைகள் மௌனம் சாதிப்பது விந்தையல்ல. இவை ஒவ்வொன்றின் பின்னாலும் அரசியல் இருந்து வரவே செய்கின்றன. யாழ். போதனா வைத்தியசாலை யாருடையதும் தனிச் சொத்தல்ல. அதில் அதிகாரமும் ஆதிக்கமும் செய்ய தனிநபர்களுக்கோ பதவி வழி வந்தவர்களுக்கோ உரிமை இல்லை. தவறைத் தட்டிக் கோட்கும் உரிமை ஒவ்வொரு பொது மனிதனுக்கும் உண்டு. எனவே பொது மக்கள் அணித்திரண்டு நியாயத்தை நிலை நிறுத்த முன்வரல் வேண்டும். நேர்மையும் சேவை மனப்பான்மையும் கொண்ட நிர்வாகம் யாழ். போனா வைத்தியசாலையை வழிநடத்த வேண்டும். இதுவே மக்களின் விருப்பமாகும்.

# தூதரகங்களா அந்நிய முகவர்களின் தலைமையகங்களா?

எந்த இரண்டு நாடுகளுக்கிடையிலும் ராஜதந்திர உறவுகள் உள்ள போது தான் அந்த நாடுகளில் தூதரகங்கள் நிறுவப்படுகின்றன. ஒவ்வாரு தூதரகமும் தனது நாட்டின் நலன் பேணும் நோக்கில் மற்ற நாட்டில் தனது செல்வாக்கை உயர்த்தவும் அரசாங்க மட்டத்தில் நல்லுறவை வலுப்படுத்தவுமே நிறுவப்படுகிறது. எனினும் சில கட்டுப்பாடுகட்கு உட்பட்டே அவை இயங்க முடியும். குறிப்பாக, ஒரு நாட்டின் உள் நாட்டு அலுவல்களில் இன்னுமொரு நாடு குறுக்கிடுவதற்கான கருவியாக ஒரு தூதரகம் செயற்படுவது ஏற்கப்படாத நடத்தையாகவே கொள்ளப்படும்.

ஒரு நாட்டில் இன்னொரு நாட்டின் தூதரகம் நேரடியாகவே தனது முகவர்களைக் கொண்டு இந்நாட்டின் உள் அலுவல்களில் குறுக்கிடுமாயின் அது நாடுகளுக்கிடையிலான நல்லுறவுக்குக் கேடானது. ஆனால் இலங்கையில் நடப்பதென்ன? ஒவ்வொரு தூதரகமும் தனது நாட்டிற்கு நட்பான சக்திகளை உருவாக்க விருந்து வைபவங்கள் முதல் அயல் நாட்டு பயணங்கள் வரையான உபசரிப்புகளை செய்கின்றன. ஆனாலும் இரண்டு நாடுகள் நேரடியாகவே அரசியல் கட்சிகளுக்குள் தமது கையாட்களை வைத்துள்ளன என்பது பலரும் அறிந்ததே.

இந்த இரண்டு நாடுகளின் தூதரகங்களும் இந்த நாட்டின் ஜனாதிபதியைக் கூட மிரட்டி தாம் அழைத்த போது அழைத்த இடத்திற்கு வரவழைக்கக் கூடியனவாக இருந்து வந்துள்ளன. ஏழு ஆண்டுகட்கு முன்பு அமைச்சராக இருந்த மிலிந்த மொறகொட ஒரு குறிப்பிட்ட நாட்டின் தூதர் தன்னை உடனே வருமாறு நள்ளிரவில் அழைத்தாலும் போய் ஆக வேண்டும் என்று வெட்கமோ மன வருத்மோ இல்லாமற் கூறினார். அதேவேளை ஜனாதிபதியே மற்றொரு நாட்டின் தூதுவரது இல்லத்திற்கு சென்று மலையக அமைச்சர்கள் பற்றிப் பேசிக் கொண்டமையும் சில வருடங்களுக்கு முன்பு நடைபெற்றது. குறிப்பாக இரண்டு தூதரகங்கள் இந்த நாட்டின் ஆளுநர்கள் போலவே நடந்து கொள்வதை ஏன் இந்த நாட்டின் ஆட்சியாளர்களால் தடுக்க இயலவில்லை?

1983ற்கு பிறகு தான் இப்போக்கு வலுப்பட்டுள்ளது என்பதும் நம் கவனத்திற்குரியது. தேசிய இனப்பிரச்சினையைப் பாவித்து இந்நாட்டின் இறைமைக்கு அந்நிய வல்லரசுகள் குழிபறிக்கின்றன என்ற உண்மையை நாம் உணர்ந்து செயற்படுவது நல்லது. அந்நிய முகவர்களாக உள்ள அரசியல் தலைவர்களையும் மக்கள் அறிந்து அம்பலப்படுத்தி நிராகரிப்பது அவசியமானது.

# வெட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை

18

வெகுஜனன்

I994 முதல் 1999 வரையிலான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் நாடும் மக்களும் எதிர்பார்த்த சாதகமான விடயங்கள் எதனையும் முன்னெடுக்கவில்லை. ஆனால் ஆட்சி அதிகாரத்தைத் தொடர்ந்தும் வைத்திருப்பதில் அதிக அக்கறையாக இருந்து வந்தனர். அதன் காரணமாக, ஜனாதிபதி பதவிக் காலம் முடிவடைய ஒரு வருடம் இருக்கும் போது ஜனாதிபதித் தேர்தலை நடத்த முடிவெடுக்கப்பட்டு அதற்கான திகதியிடப்பட்டது. 1999 டிசம்பர் 21ம் திகதி நான்காவது ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேட்பு மனுக்கள் கோரப்பட்டன. அதில் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் ரணில் விக்கிரமசிங்ஹ, ஜனநாயக இடதுசாரி முன்னணியின் வாசுதேவ நாணயக்கார, ஜே.வி.பி.யின் நந்தன குணதிலக்க ஆகியோர் முக்கிய வேட்பாளர்களாகப் போட்டியிட்டனர். அதிற் காணப்பட்ட முரண்நகை என்னவெனில் நாட்டில் ஒரு புறத்தில் "சமாதானத்திற்கான யுத்தம்" நடந்து கொண்டிருந்தது. அங்கே இரத்தமும் கண்ணீரும் பெருக்கெடுத்தவாறு இருந்தன. அதேவேளை, மறுபுறத்தில் "ஜனநாயகத்திற்கான" ஜனதிபதித் தேர்தல் நடத்தப்பட இருந்தது. தேர்தல் பிரசாரங்கள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வந்தன.

வடக்கு கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளும் இருந்தன. ராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் புலிகள் சென்று தாக்குவதும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் இராணுவம் ஆழ ஊடுருவிச் சென்று தாக்குவதும் மாறிமாறி இடம்பெற்று வந்தன. எற்கனவே ராணுவம் குடாநாட்டை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்ததையடுத்து புலிகள் வன்னிப் பெருநிலப்பரப்பில் தம்மை நிலைப்படுத்தி வலுப்படுத்தினர். அதேபோன்று, கிழக்கின் முக்கிய பிரதேசங்களையும் தமது கட்டுபாட்டில் வைத்திருந்தனர். கிழக்கின் நிலமும் நீர்நிலைகளும் காடுகளும் புலிகளுக்குச் சாதகமாக இருந்த அதேவேளை, மூவின மக்களின் பரம்பல் நிலையின் கீழ், வன்னி நிலப்பரப்பிற் போன்று முழுக் கட்டுப்பாடு செலுத்த முடியவில்லை. அதேவேளை, சிங்கள மக்கள் முஸ்லிம் மக்கள் மீது அடிக்கடி கொலைத் தாக்குதல்கள் புரிவதை இன~மத வக்கிரத்தோடு புலிகள் இயக்கம் முன்னெடுத்து வந்தது. அவற்றின் பின் விளைவுகள் எவ்வளவு மோசமாய் இருக்கும் என்பதைப் புலிகள் தூரநோக்கில் கவனத்திற்கு எடுக்கவே இல்லை.

இவ்வாறான 99ம் ஆண்டுச் சூழலில், ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின் கூட்டம் ஒன்றின் போது ஜனாதிபதி வேட்பாளர் சந்திரிகா மீது தற்கொலைக் குண்டுதாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. அதில் அவர் சில காயங்களுடன் உயிர் தப்பினாலும் கண் ஒன்றை இழந்தார். வேறு சிலர் கொல்லப்பட்டனர். சிலர் படுகாயமடைந்தனர். 1994ன் ஜனாதிபதித் தேர்தல் பிரசார மேடையில் வைத்து ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் காமினி திசாநாயக்க கொல்லப்பட்டமை இவ்விடத்து நினைவிற்குரியது. இத்தகைய தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களும் பிற வகைத் தாக்குதல்களும் தெற்கிலே தொடர்ந்து இடம்பெற்று வந்தன. புலிகளின் இலக்கு அரசாங்கத் தலைவர்கள், முப்படைத் தலைவர்கள், மற்றும் தமக்கு வேண்டாதவர்களைப் பட்டியலிட்டுக் கொலை செய்வதாக இருந்தது. இவ்வாறான தனிநபர் அழித்தொழிப்பு மூலம் புலிகள் எதனையும் சாதிக்கவில்லை. அரசும் அரச இயந்திரமும் ஒருவரின் இடத்திற்கு இன்னொருவரை நிரப்பியவாறு தனது பேரினவாத ஒடுக்குமுறையினைத் தொடர்ந்தது. சிறு முதலாளித்துவ அதி தீவிர ஆயுதப் போராட்டச் சக்தியான புலிகள் இயக்கத்தால் இதனை இறுதிவரை புரிந்துகொள்ள இயலவில்லை. குறுந் தேசியவாதத்தையும் இன வெறியையும் அடிப்படையாக கொண்டிருந்த அவர்களால் மக்கள் விடுதலைப் போராட்ட வழிமுறைகள் பற்றி சிந்திக்க முடியவில்லை.

1994ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் பெற்ற வாக்குவிகிதத்தை விடப் பதினொரு சதவீத குறைந்த நிலையில் 51.1வீத வாக்குகளை மட்டுமே பெற்ற சந்திரிகா 1999ல் மீண்டும் ஜனாதிபதியானார். அதன் மூலம் தனது அடுத்த பதவிக் காலத்திற்கான தொடர் திட்டங்களை முன்னெடுத்தார். யுத்தத்தை முன்னெடுப்பதிலும் புலிகளைக் கையாள்வதிலும் சந்திரிகா தலைமையிலான பொதுசன முன்னணி எற்கனவே தீர்மானித்திருந்தவாறு நோர்வே நாட்டின் அனுசரனைக்குப் பச்சைக் கொடி காட்டியது. இதில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தனது ஆற்றல் அனைத்தையும் பயன்படுத்தி இராஜதந்திர வழியில் செயற்பட்டார். குறிப்பாகப் புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாத இயக்க முத்திரையுடன் மேற்குலக நாடுகளில் தடை செய்வதற்கு கதிர்காமர் ஆற்றிய பணி பாரியது. அதே வேளை, அவர் அமெரிக்காவின் நம்பிக்கைக்குரிய மனிதராகவும் விளங்கினார்.

இந் நிலையில், அமெரிக்கா இலங்கையிற் புதிதாகத் தோன்றியிருந்த சூழலைப் பயன்படுத்தி நோர்வேயின் பின்னால் இருந்து செயற்பட ஆரம்பித்தது. ஏற்கனவே இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையில் கையைச் சுட்டுக்கொண்ட இந்தியா தனது தந்திரோபாய நடவடிக்கைகளில் பின்னடைந்த நிலையில், அமெரிக்கா அவ்விடத்திற்கு வர சகலதையும் செய்து கொண்டது. நேரடியாக அன்றி நோர்வேயை அனுசரனையாளராகச் செயற்பட வைத்துத் தனது நோக்கங்களை நிறைவேற்ற அது முற்பட்டது. சந்திரிகாவும் பொதுசன ஐக்கிய முன்னணியும் அமெரிக்காவிற்கு பிடித்தமான அரசாங்கங்கள் அல்ல. ஏனெனில், சந்திரிகா தனது தந்தையும் தாயும் பின்பற்றி வந்த "நடுவழிப்பாதை" "அணிசேராக் கொள்கை" போன்றவற்றைப் பின்பற்றுவதாகத் தோற்றம் காட்டி வந்தார். ஆனால் ஏகாதிபத்தியத்தால் உலகின் பிரதான அலையாக முன்தள்ளப்பட்ட நவதாராளமயப் பொருளாதாரக் கொள்கைக்கும் உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலுக்கும் சந்திரிகாவும் அவரது அரசாங்கமும் அடிபணிந்தே போயின. எவ்வளவிற்கு வாய்வீரம் பேசினாலும், இருந்துவந்த உலகப் பொருளாதார ஒழுங்கின் கீழ், உலக வங்கிக்கும் சர்வதேச நாணய நிதியத்திற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் அவர்களது திட்டங்கட்கும் ஆலோசனைகட்கும் வழிகாட்டல்கட்கும் இணங்கியாக வேண்டும். இது தட்டிக்கழிக்க இயலாத ஒரு நிர்ப்பந்த நிபந்தனையாகும். எனவே,இவற்றின் மூலம் ஒரு புறமாக நோர்வே மூலம் இன்னொரு புறமாக அமெரிக்கா இலங்கையைக் கையாளப் புதிய வியூகம் அமைத்துக் கொண்டது.

அமெரிக்கத் தலைமையிலான ஏகாதிபத்திய உலகமயமாதலுக்குப் புலிகள் இயக்கமும் தன்னை இசைவாக்கிக் கொண்டது. அதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று, அவர்களிடம் ஏகாதிபத்திய எதிர்ப்போ அமெரிக்க மேற்குலக முதலாளித்துவ சக்திகளிடம் வெறுப்போ என்றும் இருந்ததில்லை. பழைமைவாதத் தமிழ்த் தேசியத்தின் தொடர்ச்சியையே அவர்களும் கொண்டிருந்தார்கள். ஆரம்ப காலத்தில் தமிழீழத்தின் பொருளாதார வளங்களை பேணுவதும் விருத்தி செய்வதும் எனக் கூறி பொருண்மியத் திட்டங்களுக்கான தனி அமைப்பையும் கொண்டிருந்தனர். உள்நாட்டு உற்பத்திகளை ஊக்குவித்துத் தாமும் அதில் ஈடுபட்டனர். இரண்டாவதாக எங்கும் எதிலும் பணத்தை முதன்மைப்படுத்தியதால் எப்படியாகிலும் பணம் வந்தால் சரி என்ற நிலைக்குச் சென்றனர். அதாவது மக்களது மொழியில் கூறுவதானால் "பணம் கறக்கும்" சகல வழிகளையும் புலிகள் பயன்படுத்தினர். இதனால் பல்தேசிய கம்பனிகளின் நேரடி முகவர்களாகவும் ஆகிக் கொண்டனர். வணிகமும் வர்த்தகமும் அவற்றுக்கான விளம்பரங்கள் மூலம் அதிக பண வருவாயும் வளங்களும் கொண்ட இயக்கமாகப் புலிகள் இயக்கம் காணப்பட்டது.

**ரணில் தலைமையிலான அரசாங்கத்தின் கீழும் பேச்சுவார்த்தை இருதரப்பிலும் இடம்பெற்றது. ஆனால், குறைந்தபட்ச இடைக்காலத் தீர்வுக்கான ஒரு நிர்வாக அமைப்பை உருவாக்கும் நோக்கில் தத்தம் நிலைப்பாட்டில் இருந்து கீழிறங்க இரு தரப்பினரும் மறுத்து வந்தனர். அதேவேளை பாராளுமன்ற அதிகாரத்தை பெற்றிருந்த ரணிலுக்கும் நிறைவேற்று அதிகாரத்தைப் பெற்றிருந்த சந்திரிகாவுக்கும் இணக்கமான வழியிற் செல்ல முடியவில்லை. ரணில் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை எதிர்கட்சியான பொதுசன ஐக்கிய முன்னணியும் தீவிர பேரினவாதிகளும் எதிர்த்து வந்தனர். அதேவேளை புலிகள் இயக்கம் இச்சமாதான காலத்தைப் பயன்படுத்தி தமக்குரியவற்றைச் செய்தும் பெற்றும் கொண்டது.**



இத்தகைய பொருளாதார வளமும் ஆயுத பலமும் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களின் நிர்வாகச் செயற்பாடும் இணைந்து இலங்கை அரசாங்கத்துடன் சமபலமாகப் புலிகள் இயக்கம் உள்ளது என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தியிருந்தன. அதற்கேற்ப இராணுவத் தாக்குதல்களையும் புலிகள் வெற்றிகரமாக நிகழ்த்தியிருந்தனர். ஒன்று, வன்னி நிலப்பரப்பையும் குடா நாட்டையும் இணைக்கும் கழுத்துப் போன்ற முக்கிய பகுதியாக விளங்கிய ஆனையிறவில் அமைந்திருந்த பிரதான படைத்தளத்தை தாக்கி அழிப்பதில் புலிகள் வெற்றி பெற்றனர். அடுத்து, கொழும்பின் கட்டுநாயக்க விமானப் படைத் தளத்தின் அருகே அமைந்திருந்த சிவில் விமானத் தளத்தையும் தாக்கிப் பல விமானங்களை அழித்தனர். இவை இலங்கை அரசாங்கத்திற்குக் கடுந் தாக்கத்தை ஏற்படுத்தின. எனவே அரசாங்கத்திற்குப் பேச்சுவார்த்தைக்கான நிர்ப்பந்தம் ஏற்பட்டது. தாம் சமபலத்தில் பேச்சுவார்தைக்குச் செல்வதனால் புலிகளும் தயங்கவில்லை. இந்நிலையில் நோர்வே தனது அனுசரணைப் பாத்திரத்தை ஏற்க முன்வந்தது.

இவற்றிடையே 11.09.2001 அன்று அமெரிக்க இரட்டைக் கோபுரத் தகர்ப்பு இடம்பெற்றது. அதனால் அமெரிக்கா உலகம் முழுவதும் பயங்கரவாத எதிர்ப்பை முன்னெடுக்கத் தயாராகியது. எனவே புலிகள் மீது தனது பிடியை வலுப்படுத்தவும் மிரட்டவும் முற்பட்டது. புலிகள் பேச்சுவார்த்தைக்குச் செல்ல வேண்டுமென வெவ்வேறு வழிகளில் சமிக்ஞை காட்டிவந்தது. அதனாற் போலும், 2001ம் ஆண்டின் நவம்பர் மாத மாவீரர் தின உரையில் 'உள்ளக சுயநிர்ணயம்' பற்றிப் பிரபாகரன் கூறியிருந்தார்.

இலங்கை அரசாங்கம் ~ புலிகள் இயக்கப் பேச்சுவார்த்தைகள் வெளிநாடு ஒன்றில் இடம்பெற வேண்டும் எனப் புலிகள் விரும்பியதால் இரு தரப்புக்கட்குமிடையிலான முதலாவது சந்திப்பு ஜெனிவாவில் நடைபெற்றது. இலங்கை அரசாங்கத்திற்கு அமைச்சர் நிமல் சிரிபால டி சில்வாவும் புலிகள் இயக்கத்திற்கு அன்ரன் பாலசிங்கமும் தலைமை தாங்கினர். ஆரம்பம் முதலே பேச்சுவார்தை கடுமையானதாக இருந்தது. புரிந்துணர்வும் விட்டுக்கொடுப்பும் காணப்படவேயில்லை. இருதரப்பினரும் பேச்சுவார்த்தை மேசையில் இருந்து விலகாது பார்த்துக்கொள்வதில் நோர்வேயின் அனுசரனையாளர் எரிக் சோல்ஹைம் தனது பங்கிற்கு கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது. இலங்கை அரசாங்கம் தனது பேரினவாத நிலைப்பாட்டை விட்டுக் கீழிறங்கத் தயாராக இல்லை. அதே போன்று புலிகள் இயக்கம் தனது குறுந்தேசிய நிலைப்பாட்டில் இறுக்கமானதாகவே இருந்து வந்தது. இதனால் பேச்சுவார்த்தை இழுபட்டு நீண்டு சென்றது.

அதேவேளை, ஆனையிறவு வீழ்ச்சியைத் தொடர்ந்து புலிகள் இயக்கம் பலாலி படைத்தளத்தை கைப்பற்றும் தயாரிப்பிலும் முயற்சிகளிலும் ஈடுபட்டனர். அதன் மூலம் தமக்கு ராணுவ வெற்றி கிட்டும் எனவும் நம்பினர். கடல் ஆகாய வழிகளைத் தவிர இலங்கை இராணுவத்திற்கு தரைவழியாகப் பலாலித் தளத்தைப் பாதுகாப்பது இயலாது என்ற நிலையே இருந்தது. எனவே இலங்கை அரசாங்கம் இந்தியாவிடம் முறையிட்டுத் தமது படைகளை பாதுகாக்க முன்வந்தது. அதனை இந்தியாவும் ஏற்றுக் கொண்டது. தமிழ் நாட்டின் தென் கரைகளிலும் கேரளத்தின் கரையோரங்களிலும் இந்தியக் கடல், தரை, விமானப் படைகள் தயார்படுத்தப்பட்டன. இதனை அவதானித்த புலிகள் இயக்கம் தமது பலாலித் தளத் தாக்குதலைக் கைவிட்டனர். அத்துடன் பேச்சுவார்தைக்கு நோர்வேயின் மீதான நம்பிக்கையுடன் சென்றனர்.

தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க

# திறந்த பொருளாதார கொள்கையின் சீரழிவே நாட்டு மக்களை நாசப்படுத்தி வருகிறது

சிறீ



2011ம் ஆண்டிற்கான மத்திய வங்கி அறிக்கையை ஜனாதிபதி பெரிய ஆரவாரத்துடனும், பெருமிதத்துடனும் வெளியிட்டார். நாட்டின் பொருளாதாரம் 8.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்ததாகக் கூறப்பட்டதுடன் தனிநபர் வருமானம் 2836 அமெரிக்க டொலர்களாக உயர்வடைந்துள்ளது எனவும் கூறப்பட்டது. எனினும் இவை யாவும் உண்மையான பொருளாதார நிலவரங்களுக்கு முற்றும் புறம்பானதாகவே காணப்படுகின்றன. பொருளாதாரம் ரொக்கெட் வேகத்தில் மகிந்த சிந்தனையின் வழிகாட்டலில் வளர்வதாக நம்பச் சொல்லப்படுகின்றது. 2011ல் டொலருக்கான மாற்றுவீதத்தின்படி, மத்திய வங்கியின் அறிக்கை கூறும் தனிநபர் ஒருவருக்கான வருமானம், வருடமொன்றிற்கு 313,511 ரூபா. இது மாதமொன்றிற்கு 26,125 ரூபா ஆகும். தனிநபர் வருமானம் என்பது நாட்டின் மொத்த வருமானத்தை மொத்த சனத்தொகையால் வகுத்தால் வரும் தொகையாகும். வருடமொன்றிற்கு 313,511 ரூபாவை அனைவரும் பெறுகிறார்கள் என்ற தோற்றத்தையே இந்த புள்ளிவிபரம் காட்டுகிறது.

வருமானப் பங்கீட்டு இடைவெளியைக் காட்டும் கினி சுட்டெண் (Gini index) 2009ம் ஆண்டு இலங்கையை 49வது இடத்தில் வைத்தது. 1995ல் இத் தரப்படுத்தலில் இலங்கை 46வது இடத்தில் இருந்தது. நாடு முன்னேறும் போது செல்வந்தர்களுக்கும் சாதாரண மக்களுக்குமிடையிலான இடைவெளி அதிகரிப்பையே இது காட்டுகிறது. 1995ல் இருந்ததைவிட 2009ல் இடைவெளி அதிகரித்துள்ளது. குறித்த அளவுகோளானது உலக நாடுகள் ஒவ்வொன்றிலும் அந்தந்த நாடுகளில் செல்வம் எவ்வாறு மக்களிடையே பகிர்ந்தளிக்கப்படுகிறது என்பதை கணிப்பிடும் முறையாகும். நாட்டின் முன்னேற்றத்தில் யார் யார் பயன்பெறுகின்றனர் என்பதை அடுத்த புள்ளிவிபரம் காட்டுகிறது.

இலங்கையில் 10 சதவீதமான செல்வந்தர்கள் நாட்டின் செல்வத்தில் 45 சதவீதத்தைக் கொண்டுள்ளனர் அல்லது அனுபவிக்கின்றனர். அதே சமயம் 40 சதவீதமான மக்கள் நாட்டின் செல்வத்தில் 5 சதவீதத்தையே அனுபவிக்கின்றனர். அது மட்டுமல்ல. 40 சதவீதமான மக்கள் நாளொன்றிற்கு 2 டொலருக்கும் (இலங்கை ரூபாவின் பெறுமதியில் அண்ணளவாக 250ற்கும்)குறைவான ஊதியத்தையே பெறுகின்றனர். இதன்படி மாதமொன்றிற்கு 6,600 ரூபா அல்லது வருடமொன்றிற்கு 79,200 ரூபாவினையே சாதாரண உழைக்கும் மக்கள் பெறுகின்றனர். இந்தத் தொகையுடன் ஜனாதிபதி கூறிய தலா வருமானமான 313,511 ரூபா என்ற தொகையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் செல்வந்தர்களுக்கும் சாதாரண மக்களுக்குமிடையே உள்ள இடைவெளியை ஓரளவு புரிந்து கொள்ளலாம். இந்த 40 சதவீத மக்கள் நாளொன்றிற்கு 220 ரூபா பெறுகின்றனர் என்பதல்ல. அதினும் குறைவாகப் பெறும் மக்களும் உள்ளனர் என்பதுவும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியதாகும்.

விவசாயத் துறையானது மீன்பிடித் துறையையும் உள்ளடக்கும். இலங்கை கடலாற் சூழப்பட்ட நிலையில் 64 வருட சுதந்தரத்திற்குப் பின்னரும் கடலுணவுப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டே வருவதுடன் பெறுமதியான கடலுணவுப் பொருட்கள் எவருக்கும் கிடைக்காமல் வணிக நிறுவனங்களால் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. 2011ல் 8.3 சதவீத வளர்ச்சியையிட்டு பெருமிதம் அடையும் அரசின் தகவலின்படி விவசாயம் 1.5 சதவீத வளர்ச்சியையே கண்டுள்ளது. நெல் உற்பத்தி 2011ல் முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 10 சதவீதத்தால் குறைந்து 38 இலட்சத்து 70 ஆயிரம் மெற்றிக் தொன்னாகியுள்ளது.

கைத்தொழில் 10.3 சதவீத வளர்ச்சியையும் சேவைத்துறை 8.6 சதவீத வளர்ச்சியையும் கண்டுள்ளதாகக் கூறப்படுகிறது. 2011ம் ஆண்டில் தேங்காய் எண்ணெய் உற்பத்தி 18.5 சதவீதத்தினால் குறைந்தது. 53,093 மெற்றிக் தொன் தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்யப்பட்டது. இதன் விளைவாக பாம் எண்ணெய் தேங்காய் எண்ணெய் என்பவற்றின் இறக்குமதி 79 சதவீதத்தால் அதிகரித்தது. 138,939 மெற்றிக் தொன் எண்ணெய் இறக்குமதியானது. மேல் மாகாணம் இன்று நாட்டின் உற்பத்தியில் 51.9 சதவீதத்தை கொண்டுள்ளது. ஏனைய மாகாணங்களின் பங்களிப்பு 48.1 சதவீதமே. வடக்கு, கிழக்கு, மத்திய மாகாணங்களின் வளர்ச்சி எத்தகையது என்பது யாவரும் அறியக்கூடியது. முதலாளித்துவத்தின் உற்பத்தி முறை சமமற்ற பொருளாதார வளர்ச்சியை வெளிக்காட்டும் என்பதற்கு இதுவொரு உதாரணமாகும்.

அரசாங்கத்தின் கடன் பளு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 78.5 சதவீதமாகவுள்ளது. வர்த்தகப் பற்றாக்குறை அதாவது ஏற்றுமதி வருமானத்திற்கும் இறக்குமதிச் செலவுக்குமிடையேயான வித்தியாசம், 2011ல், ஆயிரம் கோடி டொலர்களாக உயருமெனக் கணிக்கப்பட்டுள்ளது. இலங்கைப் பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்திற்கு 6360 கோடி ரூபாய் கடன் நிலுவையுள்ளது. இதற்கான பொறுப்பை அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும். முப்படையினர், அரசாங்க நிறுவனங்கள் என்பன கடனுக்கு எரிபொருளைப் பெற்றுப், பின்னர் அதைச் செலுத்துவதில்லை. அதன் காரணமாகப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தன் பணத்தேவைக்கு

> *இலங்கையில் 10 சதவீதமான செல்வந்தர்கள் நாட்டின் செல்வத்தில் 45 சதவீதத்தைக் கொண்டுள்ளனர் அல்லது அனுபவிக்கின்றனர். அதே சமயம் 40 சதவீதமான மக்கள் நாட்டின் செல்வத்தில் 5 சதவீதத்தையே அனுபவிக்கின்றனர். அது மட்டுமல்ல 40 சதவீதமான மக்கள் நாளொன்றிற்கு 2 டொலருக்கும் (இலங்கை ரூபாவின் பெறுமதியல் அண்ணளவாக 250ற்கும் குறைவான)குறைவான ஊதியத்தையே பெறுகின்றனர். இதன்படி மாதமொன்றிற்கு 6,600 ரூபா அல்லது வருடமொன்றிற்கு 79,200 ரூபாவினையே சாதாரண உழைக்கும் மக்கள் பெறுகின்றனர். இந்தத் தொகையுடன் ஜனாதிபதி கூறிய தலா வருமானமான 313,511 ரூபா என்ற தொகையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் செல்வந்தர்களுக்கும் சாதாரண மக்களுக்குமிடையே உள்ள இடைவெளியை*

## மத்திய வங்கி ஆண்டறிக்கை -2011

வங்கிகளிடமிருந்து கடன் பெற்று அதற்கான வட்டியையும் கொடுக்கிறது. இதன் காரணமாகவே, தனது நட்டத்தை ஈடுசெய்யப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அவ்வப்போது எரிபொருள் விலையை அதிகரித்து நட்டத்தினை சாதாராண உழைக்கும் மக்களின் மீது சுமத்துகின்றது. மேலும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வங்கிகளிடமிருந்து பெற்ற கடனை உரிய நேரத்தில் செலுத்தாதலால் வங்கிகளும் நெருக்கடிக்கு உள்ளாகின்றன.

அரச பொது நிறுவனங்கள், முப்படையினர், பொலிஸார், அமைச்சுக்கள் போன்றவற்றிடம் இலங்கை மின்சார சபைக்கும் கோடிக்கணக்கான கடன் நிலுவையுண்டு. சிறி லங்கன் எயர்லைன்ஸ் 1500 கோடி நட்டத்திற்குள்ளானது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தையும் இலங்கை மின்சார சபையையும் சீரமைப்போம் என சர்வதேச நாணய நிதியத்திற்கு பிரதி நிதியமைச்சர் கீதாஞ்சன குணவர்தன கடிதம் எழுதி உத்தரவாதம் அளித்துள்ளார்.

2011இல் அந்நியச் செலவாணி 110 கோடி டொலர்களாயிருந்தது. வெளிநாடுகளில் வேலை செய்யும் இலங்கையர்கள் இங்கு அனுப்பும் அந்நியச் செலவாணியில் 60 சதவீதத்தை மத்திய கிழக்கில் வேலை செய்பவர்கள் (பெரும்பாலும் பெண்கள்) எந்த வகையான சூழலில் வேலை செய்கின்றார்கள் என்பதைப்பற்றித் தினமும் செய்திகள் வந்தவண்ணமுள்ளன. அங்கு வேலை செய்பவர்களின் நலன்களைப்பற்றி உதாசீனப் போக்கே கடைப்பிடிக்கப்படுகிறது. துன்புறுத்தல்கள் காரணமாகத் தூதரகங்களில் தஞ்சம் புகுபவர்களை வேறு வேலை கொள்வோருடன் அனுப்பும் கைங்கரியங்களையே அந்நாடுகளில் உள்ள தூதரகங்கள் செய்கின்றன. உற்பத்தி செய்த பண்டங்களை ஏற்றுமதி செய்வதில் அக்கறை காட்டாமல் நாட்டு மக்களை ஏற்றுமதி செய்வதிலேயே அக்கறை செலுத்தப்படுகிறது. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் வேலைசெய்பவர்கள் 25 சதவீதமான அந்நியச் செலவாணியை 2010ல் அனுப்பியுள்ளார்கள். இத்தனைக்கும் வெளிநாடுகளில் 'குறிப்பாக மேற்கு நாடுகளில்' உள்ள இலங்கையர் அரசுக்கு எதிரான பிரசாரங்களில் ஈடுபட்டு வருவாதாகக் கூறும் அரசு அவர்கள் அனுப்பும் பணத்திலே பொருளாதார சீரழிவுகளையும் சீர்செய்யப் பயன்படுத்துகின்றது.

அமெரிக்காவுடனான ஏற்றுமதி இறக்குமதி உறவுகளை நோக்கும் போது ஏற்றுமதி 170 கோடி டொலர்களாகவும் இறக்குமதி 16 கோடி 80 இலட்சம் டொலர்களாகவும் இருந்தது. இதில் தைக்கப்பட்ட ஆடைகளின் ஏற்றுமதி 21 சதவீதமமாகயிருந்தது. அமெரிக்காவுக்கான ஏற்றுமதியில் பாரிய அந்நியச் செலாவணி கிடைக்கும் நிலையில் அமெரிக்காவுடனான உறவைத் துண்டிப்போமெனக் கூச்சலிடுவது வெறும் மேடைப்பேச்சுக்கு மட்டுமே. 2011ல் இலங்கையின் ஏற்றுமதி வர்த்தகத்திற் பெரும் பகுதி மேற்குலக நாடுகளுடனே இருந்துள்ளது. ஐக்கிய இராச்சியத்திற்கு 11 சதவீதமும் பெல்ஜியத்திற்கு 5 சதவீதமும், ஜேர்மனிக்கு 5 சதவீதமும், ஐரோப்பிய சமூகத்துடனும் அதனுடன் தொடர்புடைய நாடுகட்கும் 13 சதவீதமும் அமெரிக்காவிற்கு 20 சதவீதமுமாக இருந்தது. ஏனவே 54 சதவீத ஏற்றுமதி மேற்குலகுக்கு அனுப்பப்பட்டது என்பதைக் கவனத்திற்கொள்ள வேண்டும்.

இறக்குமதி வர்த்தகத்தில் 8 சதவீதம் சுத்திகரிக்கப்படாத எண்ணெய்க்கும், சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய்க்கு 16 சதவீதமாயுமுள்ளது. ஏமது எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலைகள் விஸ்தரிக்கப்படாததால் கூடிய விலையில் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் இறக்குமதியாகிறதை விட சுத்திகரிக்கப்படலின் போது பெறப்படும் உப பொருட்களையும் பெற முடியாது. எனவே அவற்றையும் இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது. இலங்கையின் சென்மதி நிலுவையை ஸ்திரமாக்கும் நோக்கிலேயே அமெரிக்காவின் கட்டுப்பாட்டிலுள்ள சர்வதேச நாணய நிதியம் (IMF) 80 கோடி டொலர்களை அண்மையிற் கடனாக வழங்கியது.

சர்வதேச நாணய நிதியத்தின் வதிவிடப் பிரதிநிதி கலாநிதி கோசி மத்தாய் இலங்கை அரசின் அண்மைய பொருளாதார செயற்பாடுகள் தொடர்பில் கருத்து தெரிவிக்கையில் வாகனங்கள் வாகன உதிரிப்பாகங்களுக்கான இறக்குமதி உயர்த்தப்பட்டமையானது சென்மதி நிலுவைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரும் முயற்சியென்று பாராட்டியுள்ளார். அது மட்டுமல்ல, வங்கிகள் நுகர்வுப் பொருள் இறக்குமதிக்குக் கொடுத்துவரும் கடன்களை மட்டுப்படுத்துமாறு பணித்தமையும், எரிவாயு, மின்சாரம், எரிபொருள் ஆகியவற்றின் விலைகளை அதிகரித்தமையும் ஐ.எம்.எவ்வின் பணிப்புரையின் பேரிலேயே இடம்பெற்றுள்ளமை இங்கு கவனிக்கவேண்டியது.

நாட்டில் வாகனங்கள் அதிகரித்துள்ளதால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது என்றும் அதனாலேயே வாகனங்கட்கும் உதிரிப்பாகங்கட்குமான வரி அதிகரிக்கப்பட்டதாக அரசு அறிவித்துள்ளது. சென்ற வருடம் யாருக்கோ உதவும் வகையில் வரி குறைக்கப்பட்ட போது போக்குவரத்து நெரிசல் ஏற்படவில்லைப் போலும். அண்மைய வரி அதிகரிப்பும் விலை அதிகரிப்பும் நாணய நிதியத்தின் உதவியைப் பெறும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டனவென்பதே உண்மை.

வரி அதிகரிப்பு, விலை அதிகரிப்பு, என்பன ஐ.மெ.எவ்வின் ஆலோசனைப்படி இடம்பெறவில்லையென கூறிய, நிதி திட்டமிடல் அமைச்சின் பேச்சாளர் மகிந்த சாலிய, அதேவேளை, அந்நியச் செலவாணி கீழ் மட்டத்தில் உள்ளதென்றும் அதைக் கட்டுப்பாட்டில் கொண்டுவரும் முயற்சியாகவே இந்த வரி, விலை அதிகரிப்பு என்றும் கூறினார். யூலை 2011ல் 800 கோடி டொலர்களாயிருந்த அந்நியச் செலவாணி 2011 இறுதியில் 590 கோடி டொலர்களாய் குறைந்தமை இங்கு கவனிக்க வேண்டியது. மேடைகளில் அரசியல்வாதிகள் எதைக் கூறினாலும் நடைமுறையில் எமது பொருளாதாரம் மேற்குலகுடன் பின்னிப்பிணைந்துள்ளது. இறக்குமதி வர்த்தகத்தில் 23 சதவீதம் இந்தியாவிடம் இருந்தே வருகிறதையும் இங்கு அவதானிக்கலாம்.

எமது தேசியப் பொருளாதாரம் என்பது முழுமையாக அந்நியரின் கைகளுக்கு சென்று கொண்டிருப்பதுடன் அது திட்டமிட்ட வகையில் சீரழிக்கப்பட்டும் வருகின்றது. ஏகாதிபத்தியங்கள் தமது பொருளாதார நெருக்கடிகளை மூன்றாம் உலக நாடுகளின் மீது போர், பொருளாதார தலையீடுகள் மூலம் சுமத்துவது போன்று முதளாளித்துவ அரசுகள் தமது பொருளாதார நெருக்கடியையும் விரயம் வீண் ஆடம்பர செலவுகளையும் சாதாரண உழைக்கும் மக்கள் மீது சுமத்துகின்றது. அவற்றிட்கு தேசிய வாதமும் காலத்துக்கு காலம் உதவி வருகின்றது. இச்செயற்பாடு என்பது மீள மீளத் தொடரத்தான் போகின்றது. இதற்கு இலங்கை ஒரு சிறந்த உதாரணமாக நம் கண்முன்னே நிற்கின்றது. நாம் என்ன செய்யப் போகின்றோம்?

# இலங்கையின் இருபதாம் நூற்றாண்டு 37

இமயவரம்பன்

சமஷ்டி ஆட்சிமுறை, தமிழுக்கும் அரச கரும மொழித் தகுதி, மலையகத் தமிழருக்குக் குடியுரிமை, திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களுக்கு தடை என்ற நான்கு அடிப்படைகளில் தமிழரசுக் கட்சி அரசியற் கோரிகைகளை முன்வைத்த போதும் நடைமுறையில் மொழிப் பிரச்சினையைத் தவிர வேறேதுவும் பேசப்படவில்லை. எதற்காகவும் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுமில்லை.

பண்டாரநாயக்க-செல்வநாயகம் உடன்படிக்கைப்படி குடியேற்றத் திட்டங்கள் மீதான அதிகாரம் உடைய மாவட்ட சபைகள் நிறுவப்படும் என ஏற்கப்பட்டது. ஏறத்தாழ அதே எதிர்ப்பார்ப்புகளுடன் டட்லி செல்வா உடன்படிக்கை உருவானது. ஆயினும் அது கைகூடவில்லை. எனவே பிரதேச அடிப்படையிலான அதிகாரப் பகிர்விற்கோ பங்கீட்டுக்கோ பேரினவாதக் கட்சிகள் ஆயத்தமாக இரா என்பது தெளிவாகிவிட்ட நிலையில், தமிழரசுக் கட்சி தொடர்ந்தும் யூ.என்.பியுடனான நல்லுறவைப் பேணுவதுடன் ஸ்ரீ.ல.சு. கட்சியைப் பகைமையுடன் நோக்கவும் பழகிவிட்டது. அக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்ததைக் காரணமாக்கி சமசமாஜக் கட்சியுடனும், பாராளுமன்ற கம்யூனிச கட்சியுடனும் பகைமை பாராட்டியது. பொதுவாக இடதுசாரிகள் என்றால் தமிழ் இனத்துரோகிகளும், எதிரிகளுமே என்ற கருத்தைத் தமிழரசுக் கட்சியும் பிற்போக்குவாதிகளும் அவர்களுக்கு சார்பான ஊடகங்களும் பரப்பி வந்தன.

1970ஆம் ஆண்டு தேர்தலில் ஐக்கிய முன்னணி மூன்றிலிரண்டிற்கும் மேலான பெரும்பான்மையுடன் ஆட்சியை பிடித்தபோது தமிழரசுக் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் ‘‘தமிழரை இனிமேல் கடவுள் தான் காப்பாற்ற முடியும்’’ என்று சொன்னமை, ஐக்கிய முன்னணி ஆட்சியை அவர் பேரினவாத ஆட்சியாக நோக்கியதை மட்டும் குறிக்கவில்லை. தமிழரசுக்கட்சி எதிர்பார்த்தவாறு 'யார் அரசாங்கத்தை அமைப்பது எனத் தீர்மானிக்கும் ஆற்றல்' கைநழுவிப்போன ஏமாற்றத்தையும் அது குறித்தது. அதைவிட முக்கியமாகப், புதிய அரசாங்கத்தில் தமிழரசுக் கட்சியின் எவ்வித அழுத்தமும் பயன்தராதளவுக்கு அக் கட்சி தன்னை யூ.என்.பியுடன் அடையாளப்படுத்திக்கொண்டது என்பதையும் அது குறிக்கும்.

தமிழரசுக்கட்சியின் அச்சங்களை உறுதிப்படுத்தும் விதமாகவே புதிய அரசாங்கம் தமிழரசுக் கட்சியின் பால் அலட்சியமாக நடந்துக்கொண்டது. முன்பு மக்களால் தெரிவுச்செய்யப்பட்ட முன்னாள் யாழ் மேயர் துரையப்பாவுக்கு அரசாங்கம் முக்கியத்துவம் வழக்கியதையிட்டு வெகுண்ட தமிழரசுக்கட்சியை ஏளனம் செய்கின்ற விதமாக, அரசியலில் யாருக்கும் தெரியாது இருந்த செல்லையா குமாரசூரியர் என்ற பொறியியலாளரை மூதவைக்கு நியமித்து தபால் தொடர்பாடல் அமைச்சராக்கியதன் மூலம் அரசாங்கம் தமிழரசுக் கட்சியைப் புறக்கணித்துத் தம்மால் தமிழரது நலன்களைக் கவனிக்க இயலும் என்று கூறாமற் கூறியது. அவ்வாறே, அரசியல் முக்கியத்துவம் குறைந்த இன்னொரு ஸ்ரீ.ல.சு.க. ஆதரவாளரான பதியூதின் மஹ்மூத்தை கல்வி அமைச்சராக்கியது.

மேற்கூறிய நியமனங்கள் எவ்வகையிலும் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கிலோ சிறுபான்மை இனத்தவரின் தேசிய அபிலாட்சைகளை நிறைவு செய்யும் நோக்கிலோ செய்யப்பட்டவையல்ல. அரசாங்கம் புதிய குடியரசு அரசியல் யாப்பைப் பற்றிச் செயலில் இறங்க முன்பாகவே, தமிழ் மக்களைப் பாதிக்கக்கூடிய விதமாகப் பல்கலைக்கழக அனுமதிகளில் தரப்படுத்தல் முறை அறிமுகமாகியது. அப்போது இலங்கையின் பல்கலைக்கழங்களில் ஒரேயொரு பொறியியற் பீடமே இருந்தது. அதற்கு வருடாந்தம் 150 மாணவர்களே அனுமதிக்கப்படுவர். வழமையாக அனுமதிக்கப்படும் தமிழ் மாணவர்களின் தொகை 30 சதவீதத்திற்கும் 50 சதவீததிற்கும் இடைப்பட்டதாகவே இருந்து வந்தது. 1970இல் நடந்த பரீட்சைப் பெறுபேறுகளின் படி, அனுமதிக்கப்பட்டோரில் 80 சதவீதமான மாணவர்கள் தமிழ் மொழி மூல மாணவர்களாக இருந்தனர். அதற்கு முக்கிய காரணம், பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சைக்கு டியூசன் வகுப்புக்கள் பெரிய அளவில் நடாத்தப்பட்டமையாகும். எனினும் சிங்கள மக்கள் நடுவே நியாயமான ஐயங்கள் எழுந்தன. பேரினவாதிகள் விஷமத்தனமாக அவற்றைத் திசைதிருப்பித் தமிழ் பரீட்சகர்கள் வேண்டுமென்றே தமிழ் மாணவர்களுக்கு அதிகளவு புள்ளிகளை வழங்கியுள்ளதாகப் புரளியைப் பரப்பினர். இதில் யூ.என்.பிக்கும் ஒரு முக்கிய பங்கு இருந்தது.

எனவே மொழிவாரித் தரப்படுத்தல் முறையொன்று புகுத்தப்பட்டது. அதன் பயனாக தமிழ் மாணவர்களின் தொகை 30 சதவீத அளவிற்குக் குறைக்கப்பட்டது. இது மிகவும் அநீதியானது என்ற போதிலும், ஜே.வி.பி. உட்பட அனைத்துத் தென்னிலங்கைக் கட்சிகளும் அதை எதிர்க்கவில்லை. ல.ச.ச.க., கம்யூனிஸ்ற் கட்சி என்பனவும் மௌனம் சாதித்தன. வடக்கில் இது உண்மையில் ஒரு சிறுத்தொகையினரது, குறிப்பாகப் படித்த நடுந்தர வர்க்கத்தினரின், பிரச்சினையாக மட்டும் இருந்த போதிலும் மாணவர்களது கொதிப்புணர்வு முழுச் சமுதாயத்திலும் எதிர்ரொலித்தது. நேர்மையான

1970ஆம் ஆண்டு தேர்தலில் ஐக்கிய முன்னணி ஆட்சியை பிடித்தபோது தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் ‘‘தமிழரை இனிமேல் கடவுள் தான் காப்பாற்ற முடியும்’’ என்று சொன்னமை, ஐக்கிய முன்னணி ஆட்சியை அவர் பேரினவாத ஆட்சியாக நோக்கியதை மட்டும் குறிக்கவில்லை. தமிழரசுக்கட்சி எதிர்பார்த்தவாறு 'யார் அரசாங்கத்தை அமைப்பது எனத் தீர்மானிக்கும் ஆற்றல்' கைநழுவிப்போன ஏமாற்றத்தையும் அது குறித்தது.







## தேசிய இனப் பிரச்சினையின் புதிய பரிமாணங்கள்

இடதுசாரிகள் குறிப்பாக மாக்சிச லெனினிசவாதிகள் இனவாத அடிப்படையிலன்றி நியாய அடிப்படையில் எதிர்ப்பை முன்னெடுக்க முயன்றனர். தமிழரசுக் கட்சியும் பிற தமிழ் தேசியவாதிகளும் அதற்கு ஒரு தமிழின உணர்வுப் பரிமாணத்தை வழங்கியதோடு நில்லாது, கல்வி அமைச்சராக இருந்தவர் ஒரு முஸ்லிம் என்பதை பயன்படுத்தி அதற்கு முஸ்லிம் விரோதப் பரிமாணத்தையும் வழங்க முற்பட்டனர். அந்த முயற்சி வெற்றி அளிக்கவிடினும் அது ஏற்படுத்தி கசப்புணர்வு புறக்கணிக்கத்தக்கதல்ல.

தரப்படுத்தல் ஏற்படுத்திய சிக்கலிலிருந்து மீளுவதவற்குத், தரப்படுத்தலின் இடத்தில் தரப்படுத்தலோடு இணைந்த மாவட்ட அடிப்படையிலான அனுமதி முறை புகுத்தப்பட்ட போது, யாழ் மாவட்டத்திற்கு வெளியில் வடக்கு-கிழக்கில் இருந்த மாணவர்களுக்கு அது நன்மையளித்ததால், தரப்படுத்தலுக்குகெதிராகத் தமிழ் மாணவர்களது ஏகோபித்த போராட்டம் ஒன்றை முன்னெடுப்பது இயலாது போயிற்று. எனினும் தரப்படுத்தல் பற்றிய கசப்புணர்வு தொடர்ந்தது. இச் சூழலிலேயே தமிழரசுக் கட்சியின் நிழலில் உருவான மாணவர் பேரவை என்ற அமைப்பு தீவிரமான நிலைப்பாடுகளை நோக்கி நகரத் தொடங்கியது. பாராளுமன்ற ஆசனத்தை இழந்த முக்கிய தமிழரசுக் கட்சிப் பிரமுகரான அமிர்தலிங்கம் இளைஞர்களிடையே தனக்கு ஒரு ஆதரவுத் தளத்தை கட்டியொழுப்பும் நோக்கில் மாணவர்களின் எழுச்சியைத் தனக்குத் சாதகமாகப் பயன்படுத்த முற்பட்டார்.

இப் பின்னணியிலேயே, அரசாங்கக் கட்சி புதிய அரசியல் யாப்பை வரையும் முயற்சியில் இறங்கியது. அது கருத்திற் கொள்ளப்பட வேண்டியனவையென்று தமிழரசுக் கட்சி முன்வைத்த பிரேரணைகளை அரசாங்கம் முற்றாகவே நிராகரித்ததைக் காரணங்காட்டித் தமிழரசுக் கட்சி புதிய அரசியல் யாப்பு வரையும் குழுவைப் புறக்கணிக்கத் தீர்மானித்தது. இது ஒரு புறம் அரசாங்கத்தின் தீர்மானத்தின் விளைவு என்றாலும், தமிழரசுக் கட்சி தனது பிரேரணைகள் நிராகரிக்கப்பட்டதைக் காரணங்காட்டி யாப்பு வரைவு உரையாடல்களிற் பங்குபற்ற மறுத்தமை அதன் வழமையான அரசியற் சிறுபிள்ளைத்தனத்தின் வெளிப்பாடாகவே தெரிந்தது. ஏனெனில் பங்குபற்றுதலின் மூலம் யாப்பில் சிறுபான்மையினருக்குப் பாதகமாக இருந்த பகுதியினைப் பற்றிய தமது விமர்சனங்களை ஆவணப்படுத்தியாவது இருக்க இயலும்.

யாப்பில் பௌத்ததிற்கு சிறப்பிடம் வழங்கியதன் மூலம், பௌத்த பேரினவாத்திற்குப் பணிந்து போவதை அரசாங்கம் மேலும் உறுதிப்படுத்தியது. அதேவேளை, இலங்கை குடியரசாக பிரகடனப்படுத்தப்பட்டது. நாட்டின் பெயர் சிலோன் என்பதிலிருந்து மாற்றப்பட்டது வரவேற்கத்தக்கதாயினும், தனது ஆட்சிக் காலத்தை நீடித்துக் கொள்ள வேண்டி, அரசாங்கம் தனது ஆட்சிக்காலத்தை யாப்பு நிறைவேற்றப்பட்ட நாளிலிருந்து 6 ஆண்டுகளாக்கியது. இது, சில ஆண்டுகளின் பின்னர் ஜே.ஆர். ஜயவர்தன தனது ஆட்சிக்காலத்தை நீடிக்கப் பாவித்த உபாயங்களை நியாயப்படுத்தும் ஒரு செயலாகியது.

தமிழரசுக் கட்சி இந்த யாப்பை நிராகரிப்பதாகக் கூறிக் கடுமையாக எதிர்ப் பிரசாரங்களை மேற்கொண்டபோதும் அவை பெரிதும் எடுபட்டதாகக் கூற முடியாது. தமிழரசுக் கட்சியை மேலும் பலவீனப்படுத்துகின்ற நோக்கில் அரசாங்கம் எடுத்த சில நடவடிக்கைகள் தமிழ்த் தேசிய வாதத்தை மட்டுமல்லாமல் இளைஞர்களிடையே தீவிரவாதப் போக்குகளையும் தூண்டிவிட்டன. இவ்வகையில், 1973ம் ஆண்டில் நீதிமன்ற மொழிச்சட்டம் புகுத்தப்பட்டது. அடுத்து இலங்கையில் நடத்தப்படவிருந்த 4வது உலகத் தமிழாராச்சி மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடாத்துவதா என்ற விவாதம் மாநாட்டு ஏற்பாட்டாளர்களிடையே நிகழ்ந்தது. தமிழரசுக் கட்சியின் அழுத்தத்தால் அதை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு முடிவு எடுக்கப்பட்டது. அமைச்சர் செல்லையா குமாரசூரியர் கொழும்பில் நடத்துவதன் மூலம் தனக்கு முக்கியத்துவம் பெறும் நோக்கில் மாநாட்டைக் கொழும்பில் நடாத்த மட்டுமே அனுமதி உண்டு என்று அரசாங்கத்தை அறிவிக்கச் செய்தார். இந்த அரசியலின் இழுபறிக்கு நடுவே தமிழாராச்சி மாநாட்டுக்கு வரவிருந்த பல தமிழறிஞர்கள் விசாக் கெடுபிடிகளுக்குள்ளாகினர். தமிழ்த் தீவிரவாதிகள் என்று கருதப்பட்ட சில தமிழக அறிஞர்கட்கு அனுமதி மறுக்கப்பட்டது. அவர்களுள் ஒருவரான ஜனாத்தனம் என்பவரைக் களவாக இலங்கைக்கு கொண்டு வந்ததன் மூலம் தமிழரசுக் கட்சிப் பிரமுகர்கள் சிலர் மாநாட்டை அரசாங்கத்திற்கு எதிரான ஒரு சவாலாக்கினர். இதன் பயனாகப், பொலிஸ் அடாவடித்தனமும் தமிழரசுக் கட்சியின் அமிர்தலிங்கம் குழுவின் விஷமத்தனங்களும் சேர்ந்து மாநாட்டின் இறுதி நாளில் அப்பாவிச் சனங்கள் ஒன்பது பேரின் சாவுக்கு வழி செய்தன.

அதன் எதிர்வினையாக தமிழ் இளைஞர்களிடையே வன்முறைக் போக்குகள் வலுப்பெற்றன. தமிழாராச்சி மாநாட்டின் அவலச் சாவுகளுக்கு முன்னைய மேயர் துரையப்பாவைக் குற்றஞ்சாட்டித் தமிழ்த் தேசியவாதத் தீவிரவாதிகளை அமிர்தலிங்கத்தின் வட்டத்தை சேர்ந்தோர் ஊக்குவித்தனர். அதன் பயனாக அவர் மீது மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சிகள் இறுதியில் 1975இல் அவரது படுகொலையில் முடிந்தன. இவ் வன்செயலைத் தமிழரசுக் கட்சியோ அதன் காந்தியவாதத் தலைவர் செல்வநாயகமோ கண்டிக்கவில்லை. தமிழரசுக் கட்சி தனது இருப்பை தக்கவைப்பதற்குத் தமிழ்க் காங்கிரஸ், இ.தொ.கா, சி. சுந்தரலிங்கம் ஆகியோரை மட்டுமின்றி யூ.என்.பி. பிரமுகர் தேவநாயகத்தையும் உள்ளடக்கி ஒரு தமிழ்த் தேசிய முன்னணியினை 1972இல் உருவாக்கியது.

துரையப்பாவின் படுகொலையின் பின்னணியில் அரசாங்கத்தின் கெடுபிடிகள் விரிந்தன. பொலிஸ் படையினர் தனது சந்தேகத்திற்கு உட்பட்ட இளைஞர்களைத் தேடுவதிலும், கைது செய்வதிலும் கைதானோரை மோசமாக நடத்துவதிலும் காட்டிய தீவிரம் இளைஞர்களிடையே கொதிப்பை வளரச் செய்தது. எனினும் தமிழரசுக்கட்சியிடமோ த.தே.முன்னணியிடமோ எந்த உருப்படியான வேலைத்திட்டமும் இல்லாத நிலையில், இளைஞர் இயக்கம் அமிர்தலிங்கத்திற்கு ஆதரவானோரின் அனுசரணையுடனும் அதேவேளை அவரது கட்டுப்பாட்டுக்கு உட்பட மறுத்தும் இயங்கத் தொடங்கினர். இப் பின்னணியில் அரசாங்கத்தில் ஏற்பட்ட விரிசல்கள் விரைவில் ஒரு தேர்தல் வரக்கூடிய வாய்ப்பைச் சுட்டிக்காட்டிது. இப் பின்னணியிலேயே தமிழரசுக் கட்சி கடந்த தேர்தலை மனதில் கொண்டும் இளைஞர்களின் ஆதரவை தக்கவைக்கும் நோக்கிலும் தனித் தமிழீழக் கோரிக்கையை முன்வைக்கத் துணிந்தது. அது தமிழீழ ஐக்கிய விடுதலைக் கூட்டணி என்ற பெயரில் ஒரு அமைப்பை உருவாக்கிய போது, தமிழ் காங்கிரசின் ஒரு பகுதியினர் அதினின்று ஒதுங்கினராயினும் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை விமர்சிக்கத் தயங்கினர்.

தொண்டமானுடைய தலைமையிலான இ.தொ.கா, யூ.என்.பி.யின் கூட்டணியாக அடுத்த தேர்தலில் பங்கு பற்றும் நோக்கத்தால் த.வி.கூட்டணி என அறியப்படுவதான த.ஐ.வி. கூட்டணியில் இருந்து ஒதுங்கியது. தேவநாயகம் தனது கட்சியின் நலன் கருதி ஒதுங்கிகொண்டார். எனவே த.ஐ.வி கூட்டணியானது தமிழரசுக் கட்சியையும், தமிழ்க் காங்கிரசின் தலைவர்களுள் ஒருவரும் 1970 தேர்தலில் தோற்றவருமான மு. சிவசிதம்பரத்துடன் சேர்ந்த சிலரையும் கொண்ட ஒரு அமைப்பாக உருவெடுத்தது. இச் சூழலில் வடக்கில் பொலிஸ் அடக்குமுறை மேலும் வலுப்படத் தொடங்கியதும் செல்வநாயகத்தின் சாவையொட்டித் தமிழரசுக்கட்சி அதை ஒரு பிரசார இயக்கமாக்கும் நோக்கில் அவருடைய சாம்பலை ஊர் ஊராக ஊர்வலம் கொண்டு போன போது திருகோணமலையில் ஏற்பட்ட சிங்களப் பேரினவாதத் தாக்குதலும் அடுத்த சில ஆண்டுகளில் நிகழ இருந்தவற்றுக்கு கட்டியங் கூறின.

தமிழ்த் தேசியவாதத்தின் மீளெழுச்சியைப் பற்றித் தனியாக நோக்குதல் தகும் என்பதால், அதற்கு முன்பாக அடுத்த பகுதியில் மலையக தமிழருக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப் பற்றிக் கவனிப்போம். அதன் பின்பு ஐ.மு. ஆட்சியின் ‘‘சோஷலிச’’ நடவடிக்கைகளையும் விசாரித்த பின்பு தமிழ்த் தேசிய அரசியலுக்கு மீளுவோம்.

•••

# பு.ஜ.மா.லெ.கட்சியின் மேதினமும் ஊடகங்களும்

யாழ்ப்பாணத்தில் புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினசக் கட்சி நடத்திய மேதினப் பேரணி வரலாற்று முக்கியத்துவம் கொண்டது என்பதில் ஐயமில்லை. குறுந்தேசியவாதமும் பேரினவாதமும் வெறுமனே தொழிலாளர் வர்க்கத்தை இன அடிப்படையில் பிளவுபடுத்துவதோடு நின்று விடவில்லை. அவை தொழிலாளர் வர்க்க உணர்வை மழுங்கடித்து வர்க்கப் போராட்டத்தை மழுங்கடிக்கும் நோக்கில் வர்க்க அடையாளமற்ற மே தினங்களை நடத்தி வருகின்றன. இடது சாரிக் கட்சிகள் என்று தம்மை சொல்லிக் கொள்ளுகின்ற பாராளுமன்ற இடதுசாரிக் கட்சிகள் முடிவில் முதலாளியக் கட்சிகளின் நிழலிலேயே தங்கியிருக்கும் அவலத்துக்கு உள்ளாகின் றார்கள். அவர்கள் போராட்ட உணர்வுடைய ஒரு மே தினத்தை நடத்தி இப்போது ஏறத்தாழ அரை நூற்றாண்டாகிறது. அவர்கள் விட்ட இடைவெளியில் ஜே.வி.பி நுழைந்து தொழிற் சங்கம் நடத்தினாலும் ஜே.வி.பியால் ஒரு தொழிலாளி வர்க்க இயக்கமாக தம்மை வளர்க்க இயலவில்லை. அதன் பேரினவா தமும் இளைஞர்களை ஒரு வர்க்கம் என்று நோக்கிய தவறான அணுகுமுறையும் இது வரை சரியாக விமர்சிக்கப்படவுமில்லை. அதன் அடிப்படையில் உள்ள தவறுகள் திருத்தப்படவு மில்லை.

எனவே இடதுசாரி இயக்கங்கள் மிகவும் பலவீனப்பட்டுப் போன நிலையில் இன முரண்பாடுகள் கட்டுக் கடங்காது வளர்க்கப்பட்டு பகை முரண்பாடாக்கப்பட்ட சூழலில் வர்க்க உணர்வுடைய ஒரு மே தினத்தை நடத்துவது எளிதான காரியமல்ல. எனினும் புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சி யாழ்ப்பாணத்தில் அரசியற் செயற்பாடுகட்கு கிடைத்த ஒவ்வொரு இடைவெளியையும் தொழிலாளி வர்க்க அரசியலை வலியுறுத்தப் பயன்படுத்தியது. புலிகளின் அடாவடித்தனம் அமைதிப் பேச்சு வார்த்தைகளின் தொடக்கத்துடன் கொஞ்சம் தணியும் வரை வேறு யாருமே வடக்கில் மே தினம் கொண்டாட அனுமதிக்க வில்லை என்பது முக்கியமாக கவனிக்க வேண்டிய விடய மாகும்.

இடதுசாரிகள் எனப்படுகிற கட்சிகளில் ஒரு பகுதியினர் பேரினவாதக் கட்சிகளுடன் சமரசத்தில் இறங்கியது போல் மற்றுமொரு பகுதியினர் விடுதலைப்புலிகளுடன் சமரசம் பேணிய வேளையில் புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சி மட்டுமே தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்து கொள்கையில் விட்டுக் கொடுப்பின்றி செயற்பட்டு வந்ததை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். எனவே விடுலைப்புலிகளும் அரசாங்கத்தின் எடுபிடிகளும் கொடுத்த தொல்லைகட்கிடையே கட்சி தனது அரசியல் வேலைகளை முன்னெடுக்க இயலுமாயிற்று.

கடந்த சில ஆண்டுகளாகப் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி வடக்கிலும் மலையகத்திலும் தனது மே தினக் கூட்டங்களை நடத்தியதுடன் ஊர்வலம் நடத்துவதற்கு எதிரான விடுதலைப் புலிகளின் மிரட்டல்களை மீறுமளவுக்கு மக்கள் கட்சிக்கு ஊக்கமளித்ததை விடுதலைப் புலிகளின் வீழ்ச்சிக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன் கண்டோம். அதன் தொடர்ச்சியாகவே கட்சியின் மேதினக் கூட்டங்கள் மெல்ல மெல்ல வலுப்படத் தொடங்கின. அவை யாழ்ப்பாணம் மலையகம் மட்டுமன்றி கொழும்பிலும் வவுனியாவிலும் தொடர்ந்து அண்மைய வருடங்களில் வெற்றிகரமாக நடத்தப்பட்டு வருகின்றன.

வாக்குப் பெட்டி அரசியல் கட்சியால் தமிழ்த் தேசியவாதிகட்கும் அரசாங்க ஆதரவுக் குழுக்களுக்கும் ஈடுகொடுக்க இயலாததை முன்னிட்டு கட்சியின் வலிமையை பிற்போக்குவாதிகள் குறைவாகவே எடை போட்டனர். எனினும் இவ்வாண்டு மேதினத்திற்கு மக்கள் காட்டிய அக்கறை அவர்களுக்கு கொஞ்சம் அதிர்ச்சியூட்டியது. அதைவிடவும் பேரினவாத யூ.என்.பியுடன் சேர்ந்த த.தே.கூட்டணி மட்டுமன்றி பாராளுமன்ற சந்தர்ப்பவாத இடதுவாரிக் கட்சி ஒன்றுமாக ஒன்பது கட்சிகள் இணைந்து மே தினத்திற்குச் செய்யப்பட்ட பெரும் ஆரவாரமான முயற்சிகள் உழைக்கும் மக்களை கவரத் தவறிவிட்டது. அதேவேளை புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் முயற்சிகள் உழைக்கும் மக்களிடையே புதிய ஆர்வத்தை கிளறியது த.தே.கூட்டமைப்பினருக்கு கவலையளித்துள்ளது. எனவே ஊடகங்கள் செய்தி இருட்டடிப்பில் தீவிரம் காட்டின.

புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் செயற்பாடுகளையும் அறிக்கைகளையும் இடையிடையே வெளியிட்டு வந்த யாழ் குடா நாட்டின் செய்தி ஏடுகள் உட்பட நாட்டின் தமிழ்ச் செய்தி ஏடுகள் கட்சியின் மேதின ஊர்வலத்திற்கு முன்னோ பின்னோ செய்தியை வெளியிடத் தவறிவிட்டமை தற்செயலானதல்ல. ஒரு வாரம் கழித்தே தினக்குரல் நாளிதழில் படங்களுடன் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. அதேவேளை புலம்பெயர்ந்த மக்களிடையேயான இணையத்தளங்களில் கட்சியின் மேதினக் கூட்டங்கள் ஊர்வலம் பற்றி வெளிவந்திருந்தமை குறிப்பிடத்தக்தாகும். மேற்படி குடா நாட்டு ஊடகங்களின் இருட்டடிப்பிற்கு மக்கள் மத்தியில் கடும் அதிருப்பதியும் எதிர்ப்பும் வெளிப்பட்டிருந்தது. ஊடகங்களில் கூறப்படுவது போன்று சுதந்திரமான கருத்து, நடுநிலைமை, உண்மைத்தன்மை என்பதெல்லாம் வெறும் புனைவுகளே. பெருமுதலாளிகளின் நோக்கும் போக்கும் லாபத்திற்கு முக்கியமளிப்பதாகும். எனவேதான் அங்கு நேர்மையான



இடதுசாரி முற்போக்கு கருத்துக்களுக்கு இடம் வழங்கப்படாமை ஆச்சரியப்படத்தக்க விடயமல்ல.

இடதுசாரி இயக்கம் பெருமுதலாளிகளின் ஊடக ஆதரவை நம்பி இயங்க முடியாது என்பது முக்கால் நூற்றாண்டு அனுபவம். எனினும் பத்திரிகைச் சுதந்திரமும் கருத்து சுதந்திரமும் உண்மைகளை அறிய மக்களுக்கு உள்ள உரிமையும் முக்கியமானவை. அவற்றை அரசு பறிக்கும் போது கூக்குரலிடுகிற ஊடகங்களே அந்தச் சுதந்திரங்களை மீறவும் மறுக்கவும் செய்வது கண்டனத்திற்குரியதாகும்.

இம்முறை மலையகத்தில் அட்டன் நகரில் புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் கூட்டத்தை சக்தி மண்டபத்தில் ஏற்பாடு செய்து அதற்கான முற்பணமும் செலுத்தப்பட்டிருந்தது. ஆனால் இரண்டு நாட்களுக்கு முன்பதாக மண்டப அனுமதியை அதன் நிர்வாகிகள் மறுத்து பணத்தை திருப்பிக் கொடுத்து விட்டனர். இது நகர சபை நிர்வாகத்தினதும் அதன் பின்னால் இருந்த மலையக ஆதிக்க அரசியல் தொழிற்சங்க சக்திகளினதும் சதி முயற்சியேயாகும். கடந்த வருடமும் அதற்கு முன்பும் அதே சக்தி மண்டபத்தில் கட்சியின் மேதினக் கூட்டம் இடம்பெற்று வந்தன. எவ்வாறாயினும் அட்டன் நகரில் மற்றுமொரு மண்டபத்தில் மே தினக் கூட்டம் வெற்றிகரமாக நடைபெற்றது. பெருந்தொகையான தொழிலாளர்கள் இளைஞர்கள் மக்கள் கலந்துக் கொண்டமை உற்சாகம் தருவதாக அமைந்திருந்தது. அதேபோன்று கொழும்பில் வெள்ளவத்தையிலும் வவுனியாவில் பூந்தோட்டத்திலும் வர்க்க உணர்வோடும் மேதினக் கூட்டங்கள் மேதினத்திறக்குரிய அர்த்தததோடும் இடம்பெற்றன.

வட்டுக்கோட்டை.....(8ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுவந்த 2000ம் ஆண்டின் இறுதிப் பகுதியில் பாராளுமன்றப் பொதுத்தேர்தல் நடைபெற்றது. அத் தேர்தலில் பொதுசன ஐக்கிய முன்னணி வென்ற போதிலும், அறுதிப் பெரும்பான்மையைப் பெற, சிறி லங்கா முஸ்லிம் காங்கிரசையும் மலையக மக்கள் முன்னணியையும் ஈ.பி.டி.பி.யையும் இணைத்து ரத்னசிரி விக்கிரமநாயக்கவைப் பிரதமராகக் கொண்ட அரசாங்கத்தை அமைத்தது. இத் தேர்தல் முடிவடைந்து இரண்டு வாரங்களில் 25.10.2000 அன்று பண்டாரவளையில் அமைந்திருந்த பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமினுட் புகுந்த சிங்கள இனவெறிக் காடையர்கள் 31 தமிழ் இளைஞர்களைக் குதறிக் கொன்றழித்தனர். இச் சம்பவம் தமிழ் மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியதுடன், மலையகத் தமிழ் மக்களும் கொதித்தெழுந்து தமது எதிர்ப்பைக் காட்டினர். தலவாக்கலை நகரில் மலையக மக்கள் முன்னணி ஏற்பாடு செய்து புதிய ஜனநாயக கட்சி உட்படப் பிற அமைப்புகளும் கலந்துகொண்ட மிகப் பெரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டக் கூட்டத்தின் மீது காடையர்களும் பொலிசும் தாக்கித் துப்பாக்கிப் பிரயோகமும் செய்தனர். அதன் போது ஒருவர் இறந்ததுடன் பலர் காயங்கட்குட்பட்டனர். இது 1983ன் இனப் படுகொலைகளுக்குப் பின்னருமான பேரினவாத கொலை வெறிப் பேயாட்டத்தை எடுத்துக் காட்டியது.

2001ம் ஆண்டிலும் அடுத்த கட்டப் பேச்சுவார்தை இரண்டாம் கட்டமாக நடைபெற்றது. இப் பேச்சுவார்தைக்கு பக்கபலமாக இருக்கவென அமெரிக்கா பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்திருப்பதாகக் கூறிச் செயற்பட்டது. புலிகள் இயக்கம் தாமே தமிழரின் ஏகப் பிரதிநிதிகள் என்ற நிலையில் பேச்சுவார்தையில் ஈடுபட்டு வந்தது. இவற்றின் மத்தியில் 2001ம் ஆண்டு யூலை மாதத்தில் அரசின் அமைச்சராக இருந்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரஃப் உலங்கு வானூர்தி விபத்தில் கொல்லப்பட்டர். அதனைத் தொடர்ந்து வேறு பிரச்சினைகளினாலும் முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்க முறுகல் முற்றி முஸ்லிம் காங்கிரஸ் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் இருந்து வெளியேறியது. அதனால் மீண்டும் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. எதிர்க்கட்சியாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சி அத் தேர்தலில் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெற்றுக் கொண்டது. அதனை அறுதிப் பெரும்பான்மையாக ஆக்கும் நோக்கில் ஐக்கிய தேசியக் கட்சி முழு முயற்சி செய்து சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸ், இ.தொ.கா. போன்ற கட்சிகளை கூட்டாக இணைத்து 2002 ஜனவரியில் அரசாங்கத்தை நிறுவியது. ரணில் விக்ரமசிங்ஹ பிரதமராகினார். இதனால் நிறைவேற்று அதிகாரம் சந்திரிகா மூலம் பொது சன ஐக்கிய முன்னணியிடமும் பாராளுமன்ற அதிகாரம் ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியிடமும் இருந்தன. இதனால் ஜனாதிபதியும் பிரதமரும் நீயா நானா என்றவாறு எதிரும் புதிருமான அரசியல் சூழல் ஒன்று எழுந்து கொண்டது. இதனை அமெரிக்கா தமது நோக்கத்திற்கு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ள உற்சாகமடைந்தது. அதற்கான காரணம், பதவிக்கு வந்துள்ள ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் மூலம் அமெரிக்கா தான் விரும்பியதைச் செய்வதுடன் அந்த அரசாங்கத்தை பலப்படுத்துவதையும் நோக்கமாக கொண்டிருந்து.

நோர்வேயின் அனுரசணையுடன் எரிக் சோல்ஹைமின் முன்முயற்சியுடன் 2002 பெப்ரவரி 23ம் திகதி அரசாங்கத்திற்கும் புலிகள் இயக்கத்திற்குமிடையில் யுத்த நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டது. அரசாங்கத்தின் சார்பில் ரணில் விக்ரமசிங்ஹவும் புலிகள் இயக்கத்தின் சார்பில் வேலுப்பிள்ளை பிரபாகரனும் ஒப்பமிட்டனர். இதிற் கவனிக்க வேண்டியது யாதெனில், இவ்விருவரும் ஒரே இடத்தில் இருந்து ஒப்பந்தத்திற் கையொப்பமிடவில்லை என்பதாகும். ரணில் வவுனியாவில் வைத்தும் பிரபாகரன் கிளிநொச்சியில் வைத்துமே ஒப்பமிட்டனர். பிரதமர் ஒப்பமிடும் போது நோர்வேயின் பிரதிநிதியும் வேறு சிலரும் உடனிருந்தனர். ஆனால், பிரபாகரன் ஒப்பமிடுகையில் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் மட்டுமே கூட இருந்தார். இது, யுத்த நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் இரு தரப்பினரினதும் உணர்வுபூர்வமான நிலைப்பாட்டில் இருந்து முன்னெடுக்கப்படவில்லை என்பதையே பிரதிபலித்தது. அரசாங்கத் தரப்பிற்கு உள்நோக்கம் இருந்தது போலவே புலிகளுக்கும் உள்நோக்கம் தாராளமாக இருந்தது. இவ்வொப்பந்தத்தைத் தொடர்ந்து புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரன் 15 ஆண்டுகளுக்குப் பின்பு கிளிநொச்சியில் உள்நாட்டு வெளிநாட்டு ஊடகவியலாளர் மாநாட்டில் தோன்றி தன்னை வெளி உலகிற்குக் காட்டிக் கொண்டனர்.

மேற்படி புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் மக்களுக்கு நீண்ட காலத்திற்கு பின்பு ஒரு வகையாக நிம்மதிப் பெருமூச்சு விட வாய்ப்பு ஏற்பட்டது. யுத்த நிறுத்தம் நடைமுறைக்கு வந்தது. வரைமுறையற்ற ராணுவக் கெடுபிடிகளும் அடாவடித்தனங்களும் கட்டுப்படுத்தப்பட்டுப் படையினர் சாதாரணமாக நடமாடினர். புலிகள் இயக்கத்தினரும் ஆயுதங்கள் எடுத்துச் செல்லவோ சீருடையில் செல்லவோ முடியாத நிலை ஏற்பட்ட அதேவேளை, புலிகள் அரசியல் வேலைகள் செய்வது அனுமதிக்கப்பட்டதுடன் அவர்களது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் ராணுவம் செல்வதும் ஒப்பந்தத்தில் தடுக்கப்பட்டிருந்து. புலிகள் அரசியல் வேலைகளுக்காகப் பணிமனைகள் திறந்து செயல்பட்டு வந்தனர். ஆனால் அவர்களது செயற்பாடுகள் யாவுமே பழைய மாதிரியான அணுகுமுறைகளையே கொண்டிருந்தன. மேலும், ஏ~9 பாதையிலான போக்குவரத்து, ஓமந்தைக்கு அப்பால் புளியங்குளம் முதல் பளை வரை புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு ஊடாக நடைபெற்றது. அதுவரை தடைசெய்யப்பட்டிருந்த பொருட்களில் சில பொருட்கள் தவிர்ந்த அனைத்தும் வடக்கே எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டது. அவ்வாறு அனுமதிக்கப்பட்டு எடுத்துச் செல்லப்பட்ட பொருட்கள் புலிகளின் ஆயப் பகுதியின் (சுங்கப் பிரிவின்) பரிசோதனைக்கும் வரி விதிப்புக்கும் உள்ளாக்கப்பட்டன. அத்துடன் சகல பொருட்களும் ஓமந்தையிலும் புளியங்குளத்திம் புலிகளாலும் இறக்கி ஏற்பட்டன. அத்துடன், பயணிகள் பதிவுகளுக்கும் சில சந்தர்ப்பங்களில் கேள்விகட்கும் விசாரணைக்கும் உள்ளாக்கப்பட்டனர். அதே போன்று ராணுவமும் ஓமந்தையிலும் முகமாலையிலும் பொருட்களை இறக்கி ஏற்றினர்.

இவ்வாறு இருந்த போதிலும், இவ்வொப்பந்தத்தின் மூலம் மக்களுக்கு ஓரளவாயினும் ஆறுதல் கிடைத்தது. அதேபோன்று புலிகள் இயக்கத்தினர் மத்தியில் போராளிகள் விடுப்பில் தம் வீடுகளுக்குச் செல்லவும் அங்கு தங்கியிருக்கவும் தலைமையால் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. இதனால் பலர் நீண்டகாலத்திற்குப் பின் தாய் தந்தையர் உறவுகளுடன் ஊடாட முடிந்ததையும் காண முடிந்தது. மேலும் யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்தத்தினால் தெற்கிலும் மக்கள் நிம்மதிப் பெற்றனர். அதுவரை தெற்கின் மக்களும் வடக்குக் கிழக்குடன் எல்லையோரச் சிங்கள மக்களும் புலிகளின் தாக்குதலை எதிர்கொண்டு வந்தனர். இந்நிலையில் அவர்கட்கு ஒரு ஆறுதல் இடைவெளி ஏற்பட்டது என்றே கூற வேண்டும். மேற்படி யுத்த நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் யுத்தக் கண்காணிப்புக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அதில் உள்நாட்டு அதிகாரிகளும் வெளிநாடுகளின் பிரதிநிதிகளும் இடம்பெற்றிருந்தனர். மேற்படி யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு இருந்த போதிலும் யுத்த நிறுத்தம் இரு தரப்பிலும் மீறப்பட்டே வந்தது. அவற்றை பதிவு செய்வதற்கு அப்பால் அவ்வாறான தொடர் நிகழ்வுகளை விசாரிக்கவோ தடுத்தது நிறுத்தவோ மேற்படி யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு முடியவில்லை.

ரணில் தலைமையிலான அரசாங்கத்தின் கீழும் பேச்சுவார்தை இருதரப்பிலும் இடம்பெற்றது. ஆனால், குறைந்தபட்ச இடைக்காலத் தீர்வுக்கான ஒரு நிர்வாக அமைப்பை உருவாக்கும் நோக்கில் தத்தம் நிலைப்பாட்டில் இருந்து கீழிறங்க இரு தரப்பினரும் மறுத்து வந்தனர். அதேவேளை பாராளுமன்ற அதிகாரத்தை பெற்றிருந்த ரணிலுக்கும் நிறைவேற்று அதிகாரத்தைப் பெற்றிருந்த சந்திரிகாவுக்கும் இணக்கமான வழியிற் செல்ல முடியவில்லை. ரணில் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை எதிர்க் கட்சியான பொதுசன ஐக்கிய முன்னணியும் தீவிர பேரினவாதிகளும் எதிர்த்து வந்தனர். அதேவேளை புலிகள் இயக்கம் இச்சமாதான காலத்தைப் பயன்படுத்தி தமக்குரியவற்றைச் செய்தும் பெற்றும் கொண்டது.


2000ம் ஆண்டிலிருந்து முன்னெடுக்கப்பட்டுவந்த அரசாங்க புலிகள் சமாதானப் பேச்சுவார்தைகள், இணங்கவைக்கப்பட்ட நகல் தீர்மானங்கள், பிரகடனங்கள் போன்றவற்றின் தன்மை பற்றி அடுத்த பகுதியில் காண்போம்.

# ஐரோப்பிய நிதி நெருக்கடி: மீள வழியில்லை

ஐரோப்பாவின் நிதி நெருக்கடி கிரேக்கத்தைப் ''பிணையெடுத்ததுடன்'' முடிந்து விட்டதாகவும் இனி ஐரோப்பா பழைய பலமான பொருளாதார நிலைக்குத் திரும்பிவிடும் என்றும் சொல்லப்பட்டது. ஆனால், ஸ்பெயினின் இன்றைய நிலை ஐரோப்பிய நிதி நெருக்கடி முடிவற்ற சுழல் போலத் தொடர்வதை மீள உறுதிப்படுத்துகிறது. ஐரோப்பிய நாடுகளிலேயே நான்காவது மிகப் பெரிய பொருளாதார வல்லமை கொண்ட நாடு ஸ்பெயின். ஜேர்மனிக்கும் பிரான்ஸுக்கும் இத்தாலிக்கும் அடுத்தபடியான பொருளாதார வலிமையைக் கொண்டுள்ளது. சமீபத்தில் இந்நாடு சந்தித்த பணப் புழக்கக் குறைவு, மோசமான முதலீடுகள், வேலை வாய்ப்புக்களின்மை ஆகியன ஸ்பெயினை மிகப் பெரிய பொருளாதார நெருக்கடிக்கு கொண்டு சென்றுள்ளன. இன்று 25% ஆகவுள்ள ஸ்பெயினின் வேலையின்மை வீதம், இளையோரிடையே 50% ஆக உள்ளது.

இதன் பின்னணியில் ஸ்பெயினிற்கு வழங்கப்பட்ட 100 பில்லியன் பிணையெடுப்பு யூரோப் பிரதேசத்தின் நெருக்கடியைத் தீர்க்க எதையும் செய்யயாததோடு அதை மேலும் மோசமடையச் செய்திருக்கிறது என்பதைப் பங்குப்பத்திரச் சந்தைகளின் உயரும் வட்டி வீதங்கள் கோடிட்டுக் காட்டுகின்றன. ''எழுச்சி பெறும் சந்தைகள்'' என அழைக்கப்படுபவை ஐரோப்பிய நெருக்கடியின் பயனாக உயர் அபாயங்களை எதிர்கொள்ளும் என்று உலக வங்கி எச்சரித்திருக்கிறது. வளர்ச்சி பெறும் நாடுகள், நீண்டகால ஸ்திரமின்மைக்குத் தயாராக இருக்க வேண்டும் எனவும், மேலும் கிழக்கு ஐரோப்பாவினதும் மத்திய ஆசியாவினதும் வணிக, நிதிய உறவுகள் ஐரோப்பிய பொருளாதாரங்களுடன் தங்கியிருப்பதால், அவையிரண்டும் குறிப்பிடத்தக்க ஆபத்திற்கு உட்படலாம் எனவும் உலக வங்கி கூறுகிறது. இதற்கிடையில், கடும் பொருளாதார நெருக்கடியிற் சிக்கியுள்ள

> *ஐரோப்பாவின் வங்கி நெருக்கடி மிக மோசமாகியுள்ளது. மக்கள் வீதிகளில் இறங்குகிறார்கள். தன்னுடைய பங்கிற்கு ஆளும் வர்க்கம் தொழிலாள வர்க்கத்தின் பெருகும் எதிர்ப்பை அடக்குவதற்கும் போருக்குமான தயாரிப்புக்களை மேற்கொள்கின்றது. அதே நேரத்தில், சிரியாவிலும் ஈரானிலும் போர் குறித்த வாதப் பிரதிவாதங்கள் தெளிவாக்குவதைப்போல், ஐரோப்பிய, அமெரிக்க சக்திகள் மத்திய கிழக்கிலும் ஏனைய இடங்களிலும் புதிய போர்களுக்கான களங்களைத் தயார் செய்கின்றன.*




ஐரோப்பிய நாடுகளுக்கு உதவ 50,000 கோடி இந்திய ரூபாயை வழங்க இந்தியா முன் வந்துள்ளதாக இந்தியப் பிரதமர் பிரதமர் மன்மோகன் சிங் அறிவித்துள்ளார். மேலும், ஐரோப்பிய நிதி நெருக்கடிக்குத் தீர்வு காணச் சர்வதேச நாணய நிதியம் எடுக்கவுள்ள நடவடிக்கைகளுக்கு உதவுவது அனைத்து நாடுகளினதும் கடமையாகும் என்ற கோரிக்கையையும் அவர் முன்வைக்கிறார். இந்தியாவில் 50%க்கு மேலானவர்கள் ஒரு வேளை உணவுக்கே கஷ்டப்படுகிறார்கள் என்பதெல்லாம் அவருக்கு மறந்து விடுகிறது.

பிணையெடுப்புக்கள் பிரச்சனைகளைத் தீர்ப்பதில்லை என்பதற்கு கிரேக்கம் நல்லதொரு சான்று. ஸ்பெயின் மீண்டும் அதை உறுதிப்படுத்துகிறது. அண்மையில் இடம்பெற்ற ஸ்பெயின் பிணையெடுப்பு, நெருக்கடியைக் குறைப்பதற்கு முற்றிலும் மாறாக, சர்வதேச நிதியச் சந்தைகளின் கவனத்தை அடுத்த இலக்கான இத்தாலி மீது திருப்பியுள்ளது. இவை ஐரோப்பிய நிதி நெருக்கடியை மேலும் ஆழமாக்குகின்றன. இதற்கிடையில் கிரேக்கம் யூரோப் பிரதேசத்தில் இருந்து வெளியேறுவது பற்றிய பேச்சுத் தொடங்குகிறது. அத்தோடு ஐரோப்பாவின் வங்கி நெருக்கடி மிக மோசமாகியுள்ளது. மக்கள் வீதிகளில் இறங்குகிறார்கள். தன்னுடைய பங்கிற்கு ஆளும் வர்க்கம் தொழிலாள வர்க்கத்தின் பெருகும் எதிர்ப்பை அடக்குவதற்கும் போருக்குமான தயாரிப்புக்களை மேற்கொள்கின்றது. அதே நேரத்தில், சிரியாவிலும் ஈரானிலும் போர் குறித்த வாதப் பிரதிவாதங்கள் தெளிவாக்குவதைப்போல், ஐரோப்பிய, அமெரிக்க சக்திகள் மத்திய கிழக்கிலும் ஏனைய இடங்களிலும் புதிய போர்களுக்கான களங்களைத் தயார் செய்கின்றன.

•••

# றியோ புவி மாநாடு

## இருபது ஆண்டுகளில் எதுவும் மாறவில்லை



நீங்கள் இதை வாசிக்கும் போது பிரேசிலின் றியோ டி ஜெனரோவில் றியோ–20 புவி மாநாடு குளுகுளு அறைகளில் எந்த முடிவுமற்ற முடிந்து உலகத் தலைவர்கள் தங்கள் அடுத்த வேலைகளைப் பார்ப்பதற்காகக் கிளம்பியிருப்பார்கள் என்பதை நிச்சயமாகச் சொல்லலாம். சரியாக 20 ஆண்டுகளுக்கு முன்னர், 1992 இல் றியோ டி ஜெனிரோவில் நடைபெற்ற ஐ.நா. சர்வதேசப் பூமி மாநாட்டின் தொடர்ச்சியாக, றியோ+20 என்ற நிலையான அபிவிருத்திக்கான தற்போதைய மாநாடு நடைபெற்றது. மாநாட்டின் இரு முக்கிய நோக்கங்களில் ஒன்று பசுமைப் பொருளாதாரத்தை உருவாக்கி நிலையான வளங்குன்றா வாழ்வாதாரத்தை தந்து மக்களை வறுமையிலிருந்து மீட்பது. மற்றொன்று எவ்வாறு உலக நாடுகளிடையே கட்டமைப்பை ஏற்படுத்தி வளங்குன்றா வளர்ச்சியை நிலைநிறுத்துவது. ஆனால் இது மனிதகுலத்தின் மீதான அக்கறையினால் நடத்தப்பட்ட மாநாடு என்பதை மட்டும் நம்புவதற்கு எந்த நியாயமும் இல்லை. ஆனால் அவ்வாறுதான் நமக்குச் சொல்லப்படுகிறது.

புவி வெப்பமடைதல் முதலாக சூழலியற் பிரச்சனைகளை முன்னிறுத்தி 1992–ல் கூடிய றியோ மாநாடு தொடங்கி 2009–ல் நடந்து முடிந்த கோபன்ஹேகன் மாநாடு வரை எடுக்கப்பட்ட முடிவுகளையும், விவாதிக்கப்பட்ட விடயங்களையும் பார்க்கும்போது உலகைப் பேரழிவிலிருந்து காப்பதற்கான உண்மையான செயற்பாட்டுடன் கூடிய ஆக்கபூர்வமான முடிவுகள் உலகத் தலைவர்களால் இதுவரை எடுக்கப்படவில்லை என விளங்கும். கடந்த 15 வருடங்களாய் உலகத் தலைவர்கள் எடுத்துவந்துள்ள முயற்சிகள் உண்மையிற் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு மாறாய்ப் பிரச்சனையின் தீவிரத்தை அதிகரித்தே உள்ளன. காபனீரொக்சைட் வெளியீட்டைக் கட்டுப்படுத்துவதற்கான கியோட்டோ ஒப்பந்தம் அதன் மூல வடிவிற் செயற்படுத்தப்படாமல் நெகிழ்வுத் தொழில்நுட்பங்கள் என்ற பெயரில் கரிம வர்த்தகம் என்ற பெயரில் காற்றை விற்கும் ஒரு வியாபாரமாக மாற்றப்பட்டுள்ளது. தீப்பற்றி எரியும் வீட்டில் கொள்ளி திருடுபவனை போலப், பேரழிவை நோக்கி போய்க்கொண்டிருக்கும் உலகின் பிரச்சனைகளை காசாக்குவதும் ஏழை நாடுகளின் வளங்களை கரிம வர்த்தகம், வனங்களை கையகப்படுத்தும் திட்டங்கள் போன்ற புதுப்புது பெயர்களில் சாதாரண மக்களின் வளங்களைப் பன்னாட்டு கம்பெனிகளுக்கு தாரைவார்ப்பதும் போன்ற பணிகளிலேயே உலகத் தலைவர்கள் ஈடுபடுகின்றனர். அதற்காகத் தான் இந்த றியோ+20–ம் நடத்தப்பட்டது.

இன்று உலக சனத்தொகை 7 பில்லியன். இதில் ஐந்தில் ஒருவர், அதாவது 1.4 பில்லியன் மக்கள், ஒரு நாளைக்கு ஒரு அமெரிக்க டொலருக்குக் குறைவாகவே வருமானமாகப் பெறுகிறார்கள். 1.5 பில்லியன் மக்கள் மின்சார பெற வழியின்றி இருக்கிறார்கள். 2.5 பில்லியன் மக்கள் கழிப்பறை வசதியின்றி வாழ்கிறார்கள். ஏறத்தாழ 1 பில்லியன் மக்கள் தினமும் பட்டினியாய்ப் படுக்கைக்குச் செல்கிறார்கள். இப் பின்னணியிலே தான், பசுமைப் பொருளாதாரத்தை உருவாக்கி நிலையான வளங்குன்றா வாழ்வாதாரத்தை நிலைநிறுத்தும் நோக்கத்துடன் நடந்து முடிந்த மாநாட்டை நோக்க வேண்டியுள்ளது. சந்தையை மையப்படுத்தி, லாபத்தையே குறிக்கோளாக கொண்டு, பன்னாட்டுக் கம்பெனிகளால் இயக்கப்படும் இன்றைய பொருளாதாரமும், வளர்ச்சி என்ற போதையுமே உலகம் இன்று பேரழிவின் விளிம்பில் இருப்பதற்கு காரணங்களாகும்.

கொலனிய ஆதிக்கக் காலத்திலிருந்து விருத்திபெற்ற மேற்கத்திய முதலாளியப் பாணியிலான உற்பத்தி, இன்று உலகமயமாக்கலினூடு உலகம் முழுவதும் ஆதிக்கம் செலுத்துகிறது. திறந்த பொருளாதாரம், கட்டற்ற வணிகம் என்ற கோட்பாடுகளின் அடிப்படையில், பன்னாட்டுக் கம்பெனிகளின் பிடியில், இலாபத்தையே குறிக்கோளாகக் கொண்டு அறநெறியற்ற முறையில் இன்றைய பொருளாதார போக்கு கட்டமைக்கப்பட்டுள்ளது. அதற்காகவே எல்லாமும் செய்யப்படுகின்றன. அதற்காகத்தான் போர்கள் தொடுக்கப்பட்டுத் தொடரப்படுகின்றன. அத்தகையோரா மக்கள் நலன்களை முன்னிறுத்தி சூழலைப் பாதுகாக்கப் போகிறார்கள்?

1992–ல் எந்தப் பிரச்சனைகள் தீர்க்கப்படவேண்டும் என்று பேசப்பட்டதோ அதே பிரச்சனைகள் இன்று மேலும் பாரியவையாக்கப்பட்டுள்ளன, தீர்வு எதுவுமே எட்டப்படவில்லை. இன்று, உலகில் வரலாறு காணாதளவிற்கு வறுமை, ஏற்றத்தாழ்வு, கிராமப்புற மக்களின் வாழ்வாதாரங்களின் சுரண்டல் போன்றவை தொடர்கதையாய் நிகழ்கின்றன. இப் பொருளாதாரப் போக்கினால் உருவான இடப்பெயர்வின் மூலம் புதிதாய் உருவாக்கப்பட்டுள்ள சூழலில் உலகெங்கும் அகதிகளின் எண்ணிக்கை அதிகமாகியுள்ளது. உலகின் பல்லுயிர்த் தன்மை மேலும் கேள்விக்குள்ளாகி வருகின்றது. இப் பொருளாதாரப் போக்கிற்கெதிரான மக்கள் அமைப்புகளின் குரல்களை ஒடுக்கும் விதமாய், உலகெங்கும் ராணுவமயமாகும் போக்கு வலுப்பட்டு வருகிறது. இதுதான் இன்று நாம் வாழும் உலகம். நமது குழந்தைகட்கும், பேரக் குழந்தைகட்கும் வருங்காலங்களில் அமைதியான வாழ்வைத் தரமுடியாத மேலும் பயங்கரமான ஒரு உலகை நாம் அவர்களுக்கு விட்டுச்செல்லப் போகிறோம்.

உலகப் பருவநிலையின் அரசியல் என்பது பொருளாதாரக் காரணிகளின் மீது கட்டமைக்கப்படுவது. அது இலாபத்தை மையப்படுத்தியே தன் எல்லாச் செயற்பாடுகளையும் தீர்மானிக்கும். அதிகளவில் காபனீரொக்சைட் வெளிப்படுத்திப் பெருமளவில் சூழலியல் மாசை உருவாக்குகின்ற பல்தேசிய கம்பனிகளே இம் மாநாட்டுக்கு அனுசரணை வழங்கியதில் முரண்நகை எதுவும் இல்லை.

# மனிதனின் சரியான கருத்துக்கள் எங்கிருந்து வருகின்றன?

மா ஓ சேதுங்



மனிதனின் சரியான கருத்துக்கள் எங்கிருந்து வருகின்றன? அவை வானத்தில் இருந்து விழுகின்றனவா? அல்லது மூளையில் இயல்பாக உள்ளனவா? இல்லை. அவை சமூக நடைமுயைில் இருந்து மட்டுமே தோன்றுகின்றன. உற்பத்திப் போராட்டம், வர்க்கப் போராட்டம், விஞ்ஞானப் பரிசோதனை என்ற மூவகை சமூக நடைமுறைகளிலிருந்து வருகின்றன. மனிதனின் சமுதாய வாழ்வே அவனது சிந்தனையை நிர்ணயிக்கிறது. முன்னேறிய (அதாவது பாட்டாளி) வர்க்கத்தின் குணாம்சமாக விளங்கும் சரியான கருத்துக்கள் பொது மக்களால் கிரகித்துக் கொள்ளப்பட்டதும், அக் கருத்துக்கள் சமுதாயத்தை மாற்றுகின்ற, உலகை மாற்றுகின்ற ஒரு பொருளாயத சக்தியாக வடிவெடுக்கின்றன.

மக்கள் தமது சமூக நடைமுறையில், பல்வேறு வகையான போராட்டங்களிலும் ஈடுபட்டுத் தமது வெற்றிகள், தோல்விகள், இரண்டிலுமிருந்து செழுமையான அனுபவத்தைப் பெறுகின்றனர். புறநிலை உலகத்தின் எண்ணற்ற தோற்றப்பாடுகள் மனிதனின் மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புலன்களினூடாக அவனுடைய மூளையில் பிரதிபலிக்கின்றன. ஆரம்பத்தில் அறிவு புலக்காட்சியாக இருக்கின்றது. போதியளவு புலக்காட்சி அறிவு தொகுக்கப்பட்டதும், அதில் ஒரு பாய்ச்சல் நிகழ்ந்து அது பகுத்தறிவாக மாறுகிறது. அவ்வாறானவை கருத்துக்கள் என்று அழைக்கப்படுகின்றன. இது அறிகையின் ஒரு வளர்ச்சிப் போக்கு. இது அறிகையின் முழு வளர்ச்சிப் போக்கின் முதலாவது கட்டம், அதாவது புறநிலையான சடப்பொருளில் இருந்து அகநிலை உணர்வுக்குச் செல்கின்ற கட்டம் ஆகும். (தத்துவங்கள், கொள்கைகள், திட்டங்கள், வழிமுறைகள் உட்பட) ஒருவரின் உணர்வுகளோ கருத்துக்களோ எல்லாமும் புறநிலை யதார்த்த உலகைச் சரிவரப் பிரதிபலிக்கின்றனவா இல்லையா என்பது இக் கட்டத்தில் இன்னும் நிரூபிக்கப்படவில்லை. அவை சரியானவையா, இல்லையா என்று நிச்சயிப்பது இக் கட்டத்தில் இயலாதது.

பின்னர் அறிகை வளர்ச்சிப் போக்கின் இரண்டாவது கட்டம் வருகிறது. அதாவது உணர்விலிருந்து மீண்டும் சடப்பொருளுக்கு, கருத்துக்களில் இருந்து மீண்டும் வாழ்கைக்குச் செல்லும் கட்டம் வருகிறது. இந்தக் கட்டத்தில் தத்துவங்கள், கொள்கைகள், திட்டங்கள், அல்லது வழிமுறைகள் எல்லாம் எதிர்பார்த்த வெற்றியைத் தருகின்றனவா என்பதை நிச்சயிக்க, முதற் கட்டத்தில் பெறப்பட்ட அறிவு சமுதாய நடைமுறையில் பிரயோகிக்கப்படுகின்றது. பொதுவாகச் சொன்னால், எவை வெற்றி பெறுகின்றனவோ அவை சரியானவை, எவை தோல்வியடைகின்றனவோ அவை தவறானவை. விசேடமாக இயற்கையுடன் மனிதன் நடத்தும் போராட்டத்தில் இது உண்மையாகும். சமுதாயப் போராட்டத்தில் முன்னேறிய வர்க்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சக்திகள் சில சமயங்களில் தோல்வியடைகின்றன் காரணம் அவர்களின் கருத்துக்கள் தவறானவை என்பதலல்ல. மாறாக, போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சக்திகளின் சமநிலையில் தற்காலிகமாக முற்போக்கு சக்திகள் பிற்போக்கு சக்திகளைப் போல் அவ்வளவு பலம் பெற்றிருக்கவில்லை. எனவே அவை தற்காலிகத் தோல்வியடைகின்றன: ஆனால் இன்றோ நாளையோ அவை வாகை சூடுவது நிச்சயம்.

அடுத்து, நடைமுறைப் பரீட்சை மூலம் மனிதனுடைய அறிவியல் இன்னொரு பாய்ச்சல் நிகழ்கின்றது. இப் பாய்ச்சல் முன்னைய பாய்ச்சலிலும் முக்கியமானது. ஏனெனில், இப் பாய்ச்சல் மூலம் மட்டுமே முதலாவது பாய்ச்சலில், அதாவது புறநிலை யதார்த்த உலகைப் பிரதிபலிக்கும் போக்கில், வகுக்கப்பட்ட கருத்துக்கள், தத்துவங்கள், கொள்கைகள், திட்டங்கள், வழிமுறைகள் ஆகிவற்றின் சரிபிழையை நிரூபிக்க முடியும். இவை விட, உண்மையைப் பரீட்சிக்கும் வழி வேறு கிடையாது, பாட்டாளி வர்க்கம் உலகை அறிந்து கொள்வதற்கான ஒரே நோக்கம், அதை மாற்றுவதேயாகும்.

சடப்பொருள்களில் இருந்து உணர்வுக்கும், பின்னர் உணர்வில் இருந்து சடப்பொருளுக்கும், அதாவது, நடைமுறையில் இருந்து அறிவுக்கும், பின்னர் அறிவிலிருந்து நடைமுறைக்கும் செல்லும் போக்குத் திரும்பத் திரும்பப் பல தடவைகள் நிகழ்ந்த பின்னர் மாத்திரமே ஒரு சரியான அறிவுக்கு வரக்கூடிய நிலை ஏற்படுவது வழக்கம். இத்தகையது தான் அறிவு பற்றிய மாக்சியத் தத்துவம் அறிவு பற்றிய இயங்கியல் பொருள்முதல்வாதத் தத்துவம். எம்மிற் பலர் இந்த அறிவுத் தத்துவத்தை இன்னும் புரிந்து கொள்ளவில்லை. அவர்களுடைய சிந்தனைகள், கருத்துக்கள், கொள்கைகள், வழிமுறைகளகள், திட்டங்கள், முடிபுகள், நாவன்மை மிக்க சொற்பொழிவுகள், நீண்ட கட்டுரைகள் ஆகியன எங்கிருந்து வருகின்றன என்று கேட்டால் அவர்கள் அக் கேள்வியை விசித்திரமாகக் கருதுவதோடு, பதிலளிக்க முடியாமலும் இருக்கின்றார்கள். சடப்பொருள் உணர்வு நிலைக்கும் உணர்வு நிலை சடப்பொருளுக்கும் மாற்றப்பட முடியும் என்ற உண்மை நாளாந்த வாழ்வு நிகழ்ச்சிகளூடு பாய்ச்சல் நிலைமையையுங் கூட அவர்கள் புரிந்து கொள்ள முடியாமல் இருக்கின்றார்கள்.

ஆகையால், தமது சிந்தனையைச் சரியாக்கி, பரீசீலனை செய்து படிப்பதிலும் தேர்ச்சி பெற்று, கஷ்டங்களைக் கடந்து, தவறுகளைக் குறைத்து, வேலையை நன்கு செய்து, இயன்றளவு போராடி ஒரு மகத்தான பலம் வாய்ந்த சோசலிச நாட்டைக் கட்டியெழுப்பவும், உலகிலுள்ள பரந்துபட்ட அடக்கியொடுக்கப்பட்டுச் சுரண்டப்படும் மக்களுக்கு உதவி, நாம் தோள் கொடுக்க வேண்டிய மாபெரும் சர்வதேசியக் கடமையை நிறைவேற்றவும், நமது தோழர்களுக்கு அறிவு பற்றிய இயங்கியல்~பொருள்முதல்வாதத் தத்துவப் போதனை அளிக்க வேண்டும்.

•••

# மாற்றி அமைக்கப்பட வேண்டிய உலகம்

செம்பரிதி



அமெரிக்காவிற்கு உலக மேலாதிக்கம் வேண்டும். உலக நாடுகள் முழுவதற்கும் தானே ஏகச் சக்கரவர்த்தியாகத் திகழ வேண்டும். அதனது அர்த்தம் முதலாளித்துவ அடிப்படையும் அதன் வளர்ச்சியான ஏகாதிபத்தியமும் கேள்வி நியாயத்திற்கு அப்பால் எவ்வித எதிர்ப்பும் இன்றி உலக நாடுகளாலும் மக்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளான மேற்குலக நாடுகளும் விதிக்கும் முதலாளித்துவ பொருளாதார, அரசியல், சமூக, பண்பாட்டு வரையறைகளுக்குள் அவற்றை ஏற்று நடந்துக் கொள்ள வேண்டும். இந்த உலகம் யாருக்கானது என்றால் அது எழுநூறு கோடியாக உள்ள உலக சனத்தொகையின் ஏகப் பெரும்பான்மையினரான உழைக்கும் மக்களுக்கானதல்ல என்றே முதலாளித்துவம் கூறுகிறது. அது மிகப்பெரும் முதலாலளிகள், நிலம் படைத்தோர், சொத்து சுகம் பெற்றிருப்போர், சுரண்டளாளர்கள், அவர்களைப் பாதுகாக்கும் ஆட்சி அதிகாரம் பெற்றோர் போன்றவர்களுக்கானது என்றே முதலாளித்துவ நடைமுறை எடுத்துக்காட்டுகிறது.

உடலாலும் மூளையாலும் உழைக்கின்ற மக்களுக்குரியதாக அமைப்பு அவர்களது உணவு உடை இருப்பிடம் சுகாதாரம் கல்வி உள்ளிட்ட அடிப்படை மனித வாழ்வுக்குரியவற்றைப் பெறுவதை முதலாளித்துவ ஏகாதிபத்தியமும் தடுக்கிறது மறுக்கிறது. உலகம் இந்த உலகின் மிகச் சிறுபான்மையினரான உயர்ந்தோர் குழாமினருக்கு மட்டுமே உரியது. ஏனைய எகப்பெரும்பான்மையோர் இந்த உயர் வர்க்கத்தினருக்காக உழைத்துக் கொடுப்போராக வாழ்வில் எவ்வித சுக நலன்களும் பெற்றுக் கொள்ளாதவர்களாக வாழ்ந்து விட்டுப் போகட்டும் என்றே முதலாளித்துவம் விதிக்கிறது.

முதலாளித்துவம் உழைப்பிற்கு ஏற்ற ஊதியத்தை மறுக்கிறது. ஆகக் குறைந்த ஊதியத்தை வழங்கி மிகுதியைத் தனதாக்கிக் கொள்கிறது. ஆகக் கூடிய நேரத்தில் உழைப்பை வற்புறுத்தி ஆக குறைந்த ஊதியத்தை வழங்கி உபரி லாபத்தை கொள்ளை லாபமாக குவிக்கிறது. தனது மூலதனத்திற்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை உழைப்பில் ஈடுபட்டு பெரு லாபமாக மாற்றும் உழைப்போருக்குக் கொடுப்பதில்லை. முதலாளித்துவம் உள்ளோர் இல்லாதோர் என்ற மிகப் பெரும் ஏற்றத்தாழ்வை உருவாக்கி அதனை நிலைப்படுத்தி வைத்திருக்கிறது. இல்லாதோர் என்போர் பணம் பொருள் சொத்து சுகம் அற்றவராவர். ஆனால் இவ்வாறு இல்லாதோர் என்று கூறப்படும் ஏகப் பெரும்பான்மையான மக்களிடம் இரண்டு கைகள், இரண்டு கால்கள், மூக்கு வாய் காது கண்கள் நல்ல உடல் என்பனவும் அவற்றை இயக்கி நிற்கும் மூளையும் உள்ளன. அவற்றைக் கொண்டே அவர்கள் உழைப்பில் ஈடுபடுகிறார்கள். ஆனால் அவர்கள் உழைப்பினால் வரும் அனைத்துப் பலாபலன்களையும் முதலாளித்துவம் உறிஞ்சிக் கொள்ளையிட்டுக் கொள்கிறது. அதனால் உழைக்கும் வர்க்க மக்கள் வறுமை பட்டினி கொடு நோய்கள் மற்றும் தமது அடிப்படை வாழ்வுக்குரியவற்றைப் பெறமுடியாமையால் பல்வேறுபட்ட துன்பச் சுமைகளுடன் வாழ்ந்து வருகின்றனர். முதலாளித்துவச் சுரண்டலையும் அதன் விளைவான பல்வேறு கொடூரங்களையும் கண்டுகொள்ளாதாவாறு பல்வேறுபட்ட மத பண்பாட்டுத் திரைகள் போட்டு மறைக்கப்படுகின்றன. இந்த மறைப்புகளை நீக்கி யாராவது உள்ளே உள்ள முதலாளித்துவத்தின் கொடூரக் கோலத்தை அம்பலமாக்க முற்பட்டால் அத்தகையோர் சமூக விரேதிகளாக, மத விரோதிகளாக, பண்பாட்டு எதிரிகளாக பழைமை அனைத்தையும் நிராகரிப்பர்களாக, மரபையும் பழக்க வழக்கங்களையும் மீறுவோராக, நற்பண்பை மறுப்போராக மக்களிடையே அவர்களுக்கு அவப்பெயரை சூட்டவே முதலாளித்துவம் முன்னிற்கும்.

நேரடியாக முதலாளித்துவம் இதனைச் செய்யாது பல்வேறு நிலைகளிலும் உள்ள நிலவுடைமையின் பழைமைவாத மத பண்பாட்டு சக்திகளுடன் மூலமும், ஊடகங்கள் உட்பட வெவ்வேறு வகையான பரப்புரைகள் வதந்திகள் கட்டுக்கதைகள் ஏமாற்றுகள் மூலமும் அவை முன்னெடுக்கப்படுகின்றன. மக்கள் இவற்றால் திசை திருப்பப்படுகின்றனர். உண்மையை கண்டறிவேண்டிய மக்கள் அத்தகைய குறுகிய வக்கிரம் மிக்க ஏமாற்றுக் கருத்துக்களால் ஏமாற்றப்படுகின்றனர். அதேவேளை முதலாளித்துவம் இன்றைய உலகச் சூழலில் நவீன தொழில் நுட்பத்தைக் கொண்டு மென் மேலும் லாபம் குவிப்பதுடன் மக்களின் கவனங்களைத் திசை திருப்பிவைத்து வருகிறது. அதனால் மற்றொரு உலகமாக இருந்து வரும் உழைப்போரின் சாதாரண மக்களது நெருக்கடிகளும் பிரச்சினைகளும் மலிந்து காணப்படும் ஒடுக்கப்படும் அடக்கப்படும் உலகம் மறைக்கப்படுகிறது. இவற்றையெல்லாம் அறிவியல் பூர்வமாக அணுகி ஆராய்து சமூக விஞ்ஞானமாக முன்வைக்கப்பட்டதே மாக்சியமாகும்.

முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பே உலகில் முதலாளித்துவம் தோற்றம் பெற்று பெருவளர்ச்சி காண ஆரம்பித்தது. அதன் மத்தியில் இருந்தே உடல் உழைப்பைப் பேரம் பேசி விற்று குறைந்த கூலி பெறும் தொழிலாளர் வர்க்கம் உருவாகியது. இவ்வாறான வரலாற்றுச் சூழலில் முதலாளித்துவத்தையும் அதன் இயல்பையும் மாக்சியம் விஞ்ஞான நிலை நின்று ஆராய்ந்தது. அவ்வாறே வளர்ந்து வந்த தொழிலாளி வர்க்கம் பற்றியும் அதன் முழுமை பற்றியும் அதன் எதிர்காலம் பற்றியும் மாக்சியம் நுணுகி ஆராய்ந்து கொண்டது. இத்தகைய ஆய்வுகளும் முடிவுகளும் கம்யுனிஸ்ட் அறிக்கை வடிவில் முதலாளவது சர்வதேச பிரகடனமாக வெளிவந்தது. அதேவேளை நூற்றுக்கு மேற்பட்ட கட்டுரைகள் கடிதங்கள் உரைகள் என்பனவற்றை மாக்ஸ் ஏங்கல்ஸ் ஆகிய மாபெரும் மேதைகள் வெளியிட்டு வந்தனர். அதுவே மாக்சிய உலகமாக உருவெடுத்தது. அதனைக் கண்டு உலக முதலாளித்துவம் மிரண்டது. அஞ்சி நடுங்கியது. மாக்சியம் எனும் பூதம் ஐரோப்பாவில் இருந்து புறப்பட்டு விட்டதாகக் கூக்குரலிட்டது. அன்று மாக்சைப் பின்தொடர்ந்து வேவு பார்த்து அவர் சென்ற நாடுகளில் நம்தியாக இருக்கவிடாது துரத்தி வந்த முதலாளித்துவம் இன்று வரை அதில் இருந்து ஓவ்வடையவில்லை. இப்போது முதலாளித்துவத்தின் வளர்ச்சியான அதே இழிசெயல்களைத்தான் ஒவ்வொரு நாட்டிலும் செய்து வருகின்றது.

மாக்சியம் உலகத்திற்கு பிரகடப்படுத்தியது யாதெனில் “இது வரை தத்துவஞானிகள் உலகை வியாக்கியானம் செய்து மட்டுமே வந்திருக்கின்றார்கள். ஆனால் நாமோ இந்த உலகை மற்றியமைக்க முன்னிற்கின்றோம்’’. இது தான் மாக்சியவாதத்தின் அடிப்படை நிலைப்பாடு. இத்தகைய உலகை மாற்றுதல் என்ற கடமையை கம்யுனிஸ்ட்டுகளும் அவர்களது மாக்சிச லெனினிசக் கட்சிகளும் செய்து வருகின்றார்கள். இது இலகுவானதொன்றல்ல. இல்லாத ஒன்றைப்பற்றிக் கூறப்பட்டு அதனைப் பின் தள்ளிவந்த நடைமுறைகளினூடே வலுப் பெற்ற பழைமைவாதக் கருத்தியல் அனைத்துக்கும் இன்றைய உலகம் மாற்றப்படுவதை ஏற்றுக் கொள்ள இயலவில்லை. பல ஆயிரம் ஆண்டுகளாகப் பின்பற்றப்பட்டு வந்த கருத்தியல்களும் அவற்றினடிப்படையான நம்பிக்கைகளும் இலகுவில் விட்டுவிடக் கூடியவை அல்ல. அல்லது மறு பரிசீலனைக்கு உட்படுத்தக் கூடியதும் அல்ல என்றவாறே மக்கள் வழிவழியாக பின்பற்றி வருகின்றனர்.

பொருள் உள்ளவர்களும் இல்லாதவர்களும் உயர்ந்தோரும் தாழ்ந்தோரும் வலிமை உடையோரும் வலிமை குறைந்தோரும் சாதியால் ‘‘உயர்ந்தவர்களும்’’ சாதியால் தாழ்த்தப்பட்டவர்களும் ஆண்கள் மேலானவர்கள் பெண்கள் கீழானவர்கள் இவ்வாரான சமூக ஏற்றத்தாழ்வுகள் யாவும் தவிர்க்க முடியாதவை. இவை இயல்பானவை.. விதியோடும் முற்பிறப்போடும் இணைந்தவை. எனவே இவற்றில் மாற்றம் என்ற பேச்சுக்கே இடமில்லை. எல்லாம் அவன் எழுதி வைத்த தலையெழுத்தின்படி நடக்கும் என்றே நமது சமூகச் சூழல் மக்களுக்குச் சதா போதித்த வண்ணம் இருந்து வருகிறது. இவற்றில் இருந்து மக்களின் சிந்தனையை, வாழ்வை மீட்டெடுத்து வென்றெடுக்கப்பட வேண்டிய புதிய உலகை நோக்கி மக்களை அழைத்துச் செய்வதையே மாக்சியம் வற்புறுத்துகிறது.

# தலைகளை மாற்றிப் பயனேதும் விளையாது

உலகோன்

மத்திய கிழக்கிலும் வட ஆபிரிக்காவிலும் இடம் பெற்ற 'அரபு வசந்தம்' என அழைக்கப்பட்ட மக்கள் எழுச்சி இன்று எந்தக் கட்டத்தை அடைந்திருக்கிறது என்பதை சீர்தூக்கிப் பார்க்க வேண்டியுள்ளது. ஊடகங்களாலும் சமூக வலைத் தளங்களாலும் சிலாகித்துப் பேசப்பட்டுப் பல தருணங்களில் உரிமை கொண்டாடப்பட்ட இந்த எழுச்சி இன்று எங்கே நிற்கிறது? துனீசியா, எகிப்து, லிபியா, யெமன் என்பன முதலான பல நாடுகளில் மக்களின் தன்னெழுச்சியால் அவர்களது உரிமைகளுக்காகவும் சுதந்திரத்திற்காகவும் நடந்த போராட்டங்கள் எவ்வகையான பலன்களை தந்திருக்கின்றன எனப் பார்ப்பது, அவை அடிப்படையில் யாருடைய நலன்களைப் பேணுகின்றன என அறிய உதவும். மேலும் மக்கள் எழுச்சிகளின் திசைவழிகளைத் தீர்மானிக்கும் அம்சங்களைத் தெரிந்து கொள்ளவும் பாடங்களைக் கற்கவும் இது அவசியமானது.

இன்று துனீசியாவின் பென் அலி, எகிப்தில் முபாரக், லிபியாவில் கடாபி, யெமனில் சலே என யாரும் பதவியில் இல்லை. மக்கள் எழுச்சியின் விளைவால் தலைகள் மாற்றப்பட்டாயிற்று, நல்லபடியாக எதுவும் மாறவில்லை. துனீசியாவில் வேலையில்லாத் திண்டாட்டம் தொடர்கிறது, எகிப்தை இராணுவம் தான் ஆளுகிறது, அன்றாட அலுவல்களைத் தீர்மானிக்கிறது. லிபியா என்றுமில்லாத அளவு பஞ்சத்தையும் பொருளாதார நெருக்கடியையும் எதிர்நோக்குகிறது. யெமனில் ஊழல் அதிகரித்திருக்கிறது, மக்கள் அல்லற்படுகிறார்கள். இந்த நாடுகளின் மக்கள் பல இன்னுயிர்களை ஈந்து போராடிய எழுச்சிகள் மக்கள் வேண்டி நின்ற எந்தவொரு விளைவையும் தரவில்லை.

மேற்குலகும் அதனுடையதும் அதன் அடிவருடிகளதும் ஊடகங்களும் இந் நாடுகளில் ஜனநாயகம் வந்துவிட்டதாக சொல்கின்றன. மக்கள் எழுச்சிகள் அரபு நாடுகளில் ஜனநாயகத்துக்கான வாயிலைத் திறந்துவிட்டுள்ளதாகவும் சுதந்திரமான ஊடகங்களும் சமூக வலைத்தளங்களுமே அதற்குக் காரணம் என்று தங்களைத் தாங்களே மெச்சிக் கொள்கிறார்கள். எகிப்தின் தாஹிர் சதுக்கத்தில் மக்கள் மீண்டும் கூடுகிறார்கள். இது நல்ல அறிகுறிதான். ஆனால் முன்பு போல மக்கள் மீண்டும் ஏய்க்கப்பட மாட்டார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

வெறுமனே ஊடகங்களாலும் சமூக வலைத்தளங்களாலும் மட்டும் எந்தவொரு பயனுள்ள மாற்றத்தையும் கொண்டுவர முடியாது என்பதை அரபு எழுச்சியின் விளைவுகள் எமக்குக் காட்டியுள்ளன. அதேவேளை, அவையே லிபியாவில் 'ஆட்சி மாற்றத்தை' வேண்டிய மேற்குலக ஏகாதிபத்தியச் செய்நிரலுக்காக வேலை செய்தன என்பதையும் மறத்தலாகாது. சில நாடுகளில் மக்கள் அரசுக்கெதிராக நியாயமான கோரிக்கைகளை முன்னிறுத்திப் போராடின விதமான அதே தோற்றம் லிபியாவிலும் காட்டப்பட்டது. இன்று அதே விதமான நியாயமும் காரணங்களும் சிரியாவுக்கும் காட்டப்படுகின்றன. அதுவே நாளை ஈரான் மீதான தாக்குதலை நியாயப்படுத்த வழங்கப்படவும் கூடும்.

எந்தவொரு மக்கள் எழுச்சியும் உழைக்கும் மக்களை முன்னிறுத்தி உரிமைக்கான மக்கள் போராட்டங்களாக முற்போக்குச் சக்திகளால் தலைமை தாங்கப்படவேண்டும். அதன் அடிப்படையில் குறுங்கால, நீண்டகாலத் திட்டங்களின் அடிப்படையில் இறுதி இலக்கு எட்டப்படும் வரை போராட்டம் தொடரப்படவேண்டும். அப்போதே, போராட்டம் திசை தவறுவதைத் தவிர்க்க முடிவதோடு எதிர்ப்புரட்சிச் சக்திகளை முறியடிக்கவும் முடிகிறது. தன்னெழுச்சியான மக்கள் எழுச்சிகள் திசை தவறுவதும் தொடங்கிய வேகத்தில் முடிந்து போவதும் வழமையானதே. அவ்வாறான மக்கள் எழுச்சிகள் மக்களை அறிவூட்டுவதன் மூலம் தக்கவைத்துக் கொள்ளப்பட வேண்டும். சமூக வலைத்தளங்கள் கட்டமைப்பது போல மக்கள் எழுச்சி ஒரு ஃபஷன் நிகழ்வல்ல. அது தொடர்ச்சியாக பொறுப்புணர்வோடும் நம்பிக்கையோடும் முன்னெடுக்கப்படவேண்டியது. இன்று அரபு நாடுகளில் நடந்துள்ளது போல வெறுமனே தேர்தல் ஜனநாயகத்தை உருவாக்குவது பிரச்சனைகளின் தீர்வாகவோ போராட்டத்தின் குறிக்கோளாகவோ இருக்கமுடியாது. மேற்சொன்ன அத்தனை எழுச்சிகளிலும் உழைக்கும் தொழிலாளர் வர்க்கம் ஒன்றுபடாமலும் தொழிலாளர்கள் தலைமைப் பாத்திரம் ஏற்காத வண்ணமும் கவனமாகப் பார்த்துக் கொள்ளப்பட்டது. குறிப்பாக எகிப்தில், அவ்வாறு ஒன்று உருவாகுவதற்கான சாத்தியங்கள் தெரிந்தபோது, மேற்கத்திய ஊடகங்கள் மதவாத முஸ்லீம் சகோதரத்துவக் கட்சிக்கு முக்கியத்துவம் அளித்து அது நல்ல ஒரு மாற்று என்ற தோற்றத்தைக் கட்டியெழுப்பின. மதவாதமற்ற மக்களை ஒன்றிணைக்க முன்னாள் ஐ.நா. அணுசக்தி முகவராண்மைத் தலைவரான அல் பராடி வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டு ஜனநாயகத் தலைவராக மேற்கத்திய ஊடகங்களால் காட்டப்பட்டார். இவையெல்லாம் மக்கள் போராட்டங்களை முடிவுக்குக் கொண்டுவர உதவின. அல் பராடி தஹிர் சதுக்கம் வெறிச்சோடத் தொடங்கியவுடன் காட்சியிலிருந்து ஒதுங்கி அமெரிக்காவிற்குப் பெயர்ந்துவிட்டார்.

பொருளாதார ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிராகவும் பெருகி வரும் வேலையின்மைக்கு எதிராகவும் ஊழலுக்கெதிராகவுமே யெமெனில் மக்கள் போராட்டங்கள் தொடங்கின. முதற் சில வாரங்கட்கு அவை ஊடகங்களினால் இருட்டடிக்கப்பட்டன. ஏனெனில், மக்கள் எழுச்சியின் காரணங்கள் அடிப்படையானவையாகவும் முக்கியமானவையாக இருந்ததோடு அவை நீண்டகால மக்கள் போராட்டங்கட்கு வழி செய்யும் என மேற்குலகும் ஊடகங்களும் அறிந்திருந்தன. பிரச்சனைகள் இலகுவில் தீர்க்கக்கூடியனவல்லவாயினும், காலப்போக்கில் மக்கள் எழுச்சி போராட்ட அலையாகியபோது, தவிர்க்கவியலாமல், அவை ஊடகங்களால் செய்தியாக்கப்பட்டன. இந்நிலையில், துனிசியாவிலும் எகிப்திலும் நடந்த ஆட்சி மாற்றங்கள் முன்னுதாரணங்களாகக் காட்டப்பட்டன. யெமனில் தேவைப்படுவதும் ஆட்சி மாற்றமே என்ற திசை திருப்பு உத்தி பயன்படுத்தப்பட்டது. ஆட்சி மாறினால் எல்லாப் பிரச்சனையும் தீரும் என நம்பவைக்கப்பட்டது. மேற்குலக நிதி உதவிபெற்ற என்.ஜீ.ஒக்கள் இதைப் பிரச்சாரப்படுத்தி சலே ஆட்சியிலிருந்து அகற்றப்படுவதை முன்னிலைப்படுத்தின. சலே நீதியின் முன் நிறுத்தப்படாதவாறு யெமனியப் பாரளமன்றம் அவரது செயற்பாடுகளைக் குற்றமாகக் கருதமுடியாதவாறான விடுபாட்டுரிமையை அவருக்களித்தன.

அரபு மக்கள் எழுச்சியில் தங்கள் இன்னுயிர்களை நீத்தவர்கள் வெறுமனே ஒரு ஆட்சி மாற்றத்திற்காகத் தங்கள் உயிர்களை தியாகம் செய்யவில்லை. அவர்கள் மக்களது விடுதலையை, சுதந்திரத்தை, உரிமையை, கண்ணியத்தை வேண்டியே போராடி உயிர் துறந்தார்கள். மீண்டும் உரிமைகளுக்கான மக்கள் போராட்டதை உழைக்கும் மக்களின் தலைமையில் தொடங்குவது தான் அவர்களுக்குச் செய்ய வேண்டிய மரியாதையாகும். இருபத்தைந்து வயதில் இறந்த அல்~கஸிம் அல்~ஷமி என்ற துனீசியக் கவிஞன் எழுதிய ஒரு கவிதை, மக்கள் எழுச்சியின் போது துனீசியாவின் வீதிகளில் மட்டுமன்றி எகிப்தின் வீதிகளிலும் பாடப்பட்டது. அதை மக்கள் எழுச்சியின் தீச்சுவாலை என அழைத்தார்கள். இப்போது மீண்டும் அந்தக் கவிதையைப் பாடவேண்டிய நிலையில் மக்கள் இருக்கிறார்கள். அந்தக் கவிதையூடே மக்கள் தங்கள் எதிர்காலத்துகான விதியைத் தாங்களே எழுதலாம். நாங்களும் அந்தக் கவிதையைப் பாடமுடியும் தானே?

*மக்கள் வாழ்வதற்கு உறுதிபூண்டால்*
*ஊழ் சாதகமாக எதிர்வினையாற்ற விதிக்கப்பட்டதாகும்,*
*இரவு கலைவதற்கு விதிக்கப்பட்டதாகும்,*
*விலங்குகள் உடைக்கப்படுவது திண்ணம்.*
*வாழ்வின் மீதான நேசத்தைப் பற்றிக் கொள்ளாதவன்,*
*அதன் வளிமண்டலத்தில் ஆவியாகி இல்லாதுபோவான்.*




**அரபு மக்கள் எழுச்சியில் தங்கள் இன்னுயிர்களை நீத்தவர்கள் வெறுமனே ஒரு ஆட்சி மாற்றத்திற்காகத் தங்கள் உயிர்களைத் தியாகம் செய்யவில்லை. அவர்கள் மக்களது விடுதலையை, சுதந்திரத்தை, உரிமையை, கண்ணியத்தை வேண்டியே போராடி உயிர் துறந்தார்கள். மீண்டும் உரிமைகளுக்கான மக்கள் போராட்டதை உழைக்கும் மக்களின் தலைமையில் தொடங்குவது தான் அவர்களுக்குச் செய்ய வேண்டிய மரியாதையாகும்.**

15ம் பக்கத் தொடர்ச்சி (சீரழிந்த ஒரு...)

இலங்கையில் மட்டுமே பிளவு ஏற்பட்டது என்று பொன்னையர் பிதற்றுகிறார்.

பாராளுமன்றப் பாதையை நிராகரித்து நடந்த போராட்டம், 1957இல் குருஷ்சேவ் தனது இரகசிய உரையில் ஸ்ற்றாலினை நிந்தித்த நாள் தொட்டு வளர்ந்து வந்தது. குருஷ்சேவ் காலம் தொட்டு, சோவியத் யூனியன் தொழிலாளி வர்க்கத்துக்கும் தேசிய இன விருதலை இயக்கங்களுக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் செய்து வந்த துரோகமோ 1963 முதல் இலங்கையின் திரிபுவாதிகள் போரினவாதிகளுடன் ஆடிய சரசமோ பொன்னையர் அறியாதன என்றால், அவரை அரசியல் அறியாதவர் எனலாம். அவர் அறியாதவரல்ல.

அயற் பயணமும் அயல்நாட்டு வாழ்வும் அவருக்குச் சொகுசானவையாகத் தெரிவதால், சீன வானொலியில் ஒலிபரப்பாளராக பணியாற்றுமாறு கட்சி தன்னைக் கேட்டது லஞ்சமாக அவருக்குத் தோன்றலாம். தோழர் சின்னத்தம்பி அப் பணியை அரசியற் கடமையாகவே செய்து வந்தார் என்பதும் மாதகல் கந்தசாமி அதனைக் கட்சியின் ஆணையாகக் கொண்டே செய்தார் என்பதையும் மீறி பொன்னையர் அவர்களை அவமதிக்கிறார். மு.போ.எ.ச. 1975ல் எதையோ சாதித்து விட்டது என்று பிதற்றும் அவரால் அது பேரினவாதத்திடம் மண்டியிட்டதை விட எதைச் சாதித்தது என்று சொல்ல இயலவில்லை.

புதிய ஜனநாயகக் கட்சி மீது அவரது வன்மம், அவர்களை விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்று சொல்லுமளவுக்குப் போகிறது. கட்சியில் எவரையும் புலிகள் கொல்லவில்லை என்பதும் கட்சி வடக்கில் மேதினக் கூட்டம் நடத்தியதும் சிரிப்பிற்குரிய அவரது ஆதாரங்களுள் அடங்கும். எத்தனை கட்சித் தோழர்களைப் புலிகள் கொன்றார்கள் என்று அவருக்கு தெரியாதா? கட்சித் தலைமையகம் ஏன் கொழும்பிற்கு வந்தது என்று தெரியாதா? 2002க்குப் பின்பே, பல நெருக்குவாரங்களுக்கிடையில், மே தினக் கூட்டங்களைக் கட்சி நடத்தியமை தெரியாதா? பொன்னையரைக் கொல்லப் புலிகள் முயன்றதற்கும் ஆதாரம் இல்லை. எனவே, அவரது வாதப்படி ஒருவர் வந்தடையக் கூடிய முடிவு என்ன?

நூலில் தனிநபர் வக்கிரங்களும் அரசியற் காழ்ப்புணர்வுகளும் மிகுந்து காணப்படுகின்றன. 1960களில் நடுப்பகுதியில், தான் மட்டுமே எல்லா இடங்களிலும் எல்லா அரசியல் வேலைகளிலும் ஈடுபட்டதாகக் கூறும் பொன்னையர் அப்போது தொழிற்சங்க வேலைகட்கு மட்டுமே முழுநேர ஊழியராய் இருந்தார். அப்போது தோழர் கே.ஏ. சுப்பிரமணியம் கட்சியின் வாலிபர் இயக்கப் பணிக்குப் பொறுப்பான முழுநேர ஊழியராய் இருந்தமை பற்றிப் பொன்னையர் எங்கும் பேசவில்லை. அத்துடன் 1965ல் கட்சியின் முழு நேர ஊழியராகி வாலிபர் இயக்கத்தில் பணியைத் தொடங்கி 47 வருடங்களாகத் தொடர்ந்தும் முழுநேர ஊழியராகக் கட்சிப் பணியாற்றிவரும் தோழர் சி.கா. செந்திவேல் பற்றியும் பொன்னையர் குறிப்பிடாதது ஏன்?

முடிவாக, நூலை ஒப்புநோக்கிய கலாநிதி ந. ரவீந்திரனிடம் ஒரு சிறு கேள்வி: நூலில் புதிய ஜனநாயக கட்சியையும் தோழர் கே.ஏ. சுப்பிரமணியத்தையும் பற்றிப் பொழியப்பட்டுள்ள அவதூறுகளையிட்டு அவர் என்ன சொல்கிறார்?

•••

## தேசிய கலை இலக்கியப் பேரவையின்

# அனைத்திலங்கை மாநாடு

**பேராசிரியர் தில்லைநாதன் தலைமையில் புதிய மத்திய நிறைவேற்றுக் குழு தெரிவு**

தேசிய கலை இலக்கியப் பேரவையின் அனைத்திலங்கை மாநாடும் 39வது ஆண்டுவிழாவும் கடந்த சனி, ஞாயிறு நாட்களில் (16, 17 ஜூன்) வெகு சிறப்பாக நிறைவெய்தின. அனைத்திலங்கை மாநாட்டில் தேசிய கலை இலக்கியப் பேரவையின் 2012-2015 காலப்பகுதிக்கான புதிய மத்திய நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவராக பேராசிரியர் சி. தில்லைநாதன் அவர்களும் பொதுச் செயலாளராக பேராசிரியர் சி. சிவசேகரம் அவர்களும் பொருளாளராக செ. நந்தமோகன் அவர்களும் உபதலைவர்களாக குழந்தை ம. சண்முகலிங்கம், சிவ. இராஜேந்திரன், க. தணிகாசலம் ஆகியோரும் தெரிவாயினர். இலக்கியக் குழுச் செயலாளராக மு. மயூரன், கல்விக் குழுச் செயலாளராக சி. இதயராஜா நூலகச் செயலாளராக சு. விஜயகுமார் விநியோகச் செயலாளராக இரா. இரஞ்சன் ஆகியோரும் தெரிவாயினர்.

இலங்கை முழுவதும் பரவலாகப் பிரதேசப் பேரவைகளின் ஊடாகச் செயற்பட்டு வரும் தேசிய கலை இலக்கியப் பேரவையின் பிரதேசப் பேரவைச் செயலாளர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். யாழ்ப்பாணப் பிரதேசப் பேரவைச் செயலாளராக த. ஸ்ரீபிரகாஸும் ஹற்றன் பிரதேசப் பேரவைச் செயலாளராக எம். சந்திரலேகாவும் நுவரெலிய பிரதேசப் பேரவைச் செயலாளராக ச. பன்னீர்செல்வமும் மாத்தளைப் பிரதேசப் பேரவைச் செயலாளராக ம. ருத்ராவும் இரத்தினபுரி பிரதேசப் பேரவைச் செயலாளராக பா. மகேந்திரனும் மட்டக்களப்புப் பிரதேசப் பேரவைச் செயலாளராக த. கோபாலகிருஷ்ணனும் வவுனியாப் பிரதேசப் பேரவைச் செயலாளராக நா. பகீரதனும் மன்னார்ப் பிரதேசப் பேரவைச் செயலாளராக ச. தனுஜனும் கொழும்புப் பிரதேசப் பேரவைச் செயலாளராக த.வி. ரிஷாங்கனும் தெரிவாயினர். மத்திய நிறைவேற்றுக் குழுவின் உறுப்பினர்களாக சோ. தேவராஜா, ஜெ. சற்குருநாதன், சு. சுகேசனன், சி. கிருஷ்ணப்பிரியன், தி. அனோஜன், ம. மிதுன்ராகுல், லோ. நிலா சயானி, வி. விமலாதித்தன், சி. கஜேந்திரன், ச. சுதாகர், தெ.ஞா. மீநிலங்கோ ஆகியோர் தெரிவாயினர்.

1973 டிசெம்பர் இறுதியில் நிறுவப்பட்ட தேசிய கலை இலக்கியப் பேரவை கடந்த 39 ஆண்டுகளில் காத்திரமான பல பணிகளை நிறைவேற்றியுள்ளது. இந்த மாநாடு மற்றும் ஆண்டுவிழாவானது பேரவையின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் முன்னின்று உழைத்த அனைவரையும் நினைவுகூர்ந்தது. பேராசிரியர் க. கைலாசபதி, இ. முருகையன், மாவை வரோதயன் ஆகியோரின் பணிகள் சிறப்பாகச் சொல்லப்படவேண்டியன.

இப்போது தேசிய கலை இலக்கியப் பேரவையின் பணிகளைத் தொடர்ந்தும் முன்னெடுக்க வல்ல ஒரு இளந் தலைமுறைப் படைப்பாளிகளும் விமர்சகர்களும் செயற்பாட்டாளர்களும் உருவாகியுள்ளனர். இது தேசிய கலை இலக்கியப் பேரவையின் செயற்பாடுகளுக்கு மேலும் ஊக்குவிப்பு அளித்துள்ளதுடன் நாடுதழுவிய முறையில் இலக்கிய, பண்பாட்டுத் தளங்களில் இளைஞர்கள் கூட்டாகச் செயற்படக்கூடிய ஒரு களத்தைப் பேரவை உருவாக்கியிருக்கிறது என்பதை இங்கு நினைவுகூரல் தகும். தனது 40வது ஆண்டு நிறைவை நோக்கிப் பயணிக்கும் தேசிய கலை இலக்கியப் பேரவை “புதிய ஜனநாயகம், புதிய வாழ்வு, புதிய பண்பாடு” என்ற தனது இலட்சியத்தின் அடிப்படையில் நம்பிக்கையோடு முன் செல்லும் என்பதற்கு கடந்த வாரம் நிறைவுபெற்ற பேரவையின் அனைத்திலங்கை மாநாடும் 39வது ஆண்டு விழாவும் சான்று பகர்ந்தன.

## சீரழிந்த ஒரு முன்னாள் கம்யூனிஸ்ட்டின் ஒப்புதல் வாக்குமூலம்


சிவா

முன்னாள் முற்போக்கு எழுத்தாளர் நீர்வேலி பொன்னையனின் சுய புராணம், சிறுவனாக அவர் கோயிலிற் புராணங் கேட்ட கதையுடன் தொடங்குகிறது. அந்தப் புராணங்கள் புனைவுகள்தான் என்றாலும் அவற்றுக்குள் ஒருமைப்பாடும் பண்பும் இருக்கும். பொன்னையரின் சுயபுராணமோ, கேவலமான நோக்குடைய பொய்க் குவியல். அது சிலரது தூண்டுதலால் எழுதப்பட்டதாயும் நிதி வழங்கிய இருவர் பெயரறியாமல் இருக்க விரும்புவதாயும் நூலிற் சொல்லப்பட்டுள்ளது. பெயர்கள் கூறப்பட்டால், நூலின் பின்னணி, நூலாசிரியரின் வன்மம் மட்டுமன்றிப் (புலம் பெயர்ந்த) அரசாங்க அடிவருடிகள் சிலரது வக்கிரமுமாகும் என வெளிப்படுத்திவிடலாம்.

இந் நூலின் மூலம் யாரும் அறியக்கூடியது ஏதெனில் பொன்னையர் தன் நல்ல முன்னைக்காலச் சிறுகதைகளில் காட்டாத கற்பனைத்திறனை நூலிலுள்ள சுயபுராணத்திலும் இடதுசாரி இயக்க ‘‘வரலாற்றிலும்’’ காண்பித்துள்ளமையாகும். அவருடைய பிரமிக்கத்தக்க சாதனைப் பட்டியலில் சாதியத்திற்கெதிராக அவருடைய தீண்டாமை ஒழிப்புப் போராட்டமும் அடங்கும். அவருடைய ஊரில் சாதி வெறியருக்கு எதிராக 1964ல் கம்யூனிஸ்ட் கட்சி போராட்டத்தை நடத்திய போது அதில் அவர் ஆற்றிய பணி பட்டியலில் இல்லை. ஏனெனில், ஊரில் ‘‘வீண் பிரச்சினைகளைத்’’ தவிர்க்கவேண்டி அவர் எங்கோ நழுவி விட்டார்.

டானியலும் டொமினிக் ஜீவாவும் போகத், தன்னுடன் தனிப்பட முரண்படாத சிலரை விடத், தானறிந்த ஒவ்வொரு நல்ல இடதுசாரிக்கும் சேறடித்துத் தன்னைப் புனிதராகக் காட்ட முயல்கிற பொன்னையரின் முற்போக்கு அரசியற் பணிகள் 1968க்குப் பின்பு குறைந்து, 1970களின் போக்கில் இல்லாமற் போய்விட்டன. 1972ல் தோழர் கார்த்திகேசனுடன் சேர்ந்து சண்முகதாசனைக் கட்சியால் விலக்கியதைப் பற்றிப் பெருமைப்படும் இவர் அவருடன் சேர்ந்து உருப்படியாக எதாவது செய்திருக்கிறாரா? 'போராளி' என்ற ஒரு பத்திரிகையைத் தொடங்கிய அக் குழுவினர் மூன்று இதழ்களைக் கூடக் கொண்டுவரத் தவறினர் என்றால், பொன்னையர் தனது அரசியல் அறிவையும் எழுத்தாற்றலையும் உதவத் தவறிவிட்டாரா? உண்மையில், 1975 அளவில் அவர் ஸ்ரீ.ல.சு.க அரசாங்க அடிவருடியாகிவிட்டார். 1990களில் 'விபவி' எனும் என்.ஜீ.ஓவில் ஒட்டிக்கிடந்த பொன்னையர், விபவிப் பணம் நீராக இறைக்கப்பட்ட காலத்தில் என்.ஜீ.ஓக்கள் மூலம் மட்டுமே கலை இலக்கியப் பணிகளை முன்னெடுக்க இயலும் என்று சொல்லித் திரிந்தவராவர். 'மேடும் பள்ளமும்' தொகுதிக்குப் பின்னான பொன்னையரின் கதைகள் பலவீனமானவை. அவை நீர்த்து விட்டன. அவரின் எழுத்தின் சீரழிவின் காரணம் அவருடைய அரசியற் சீரழிவை விட வேறெதுவுமாகத் தெரியவில்லை.

அவரது கற்பனை அவரது ஞாபகசக்தியைச் சில இடங்களில் மேவிவிடுகிறது. இளமைக் காலத்தில் தனது மைத்துனியை நம்பி ஏமாந்ததைச் சொல்லுகிற அவர், தன் அரசியல் வாழ்வின் பாரிய திருப்புமுனையாயமைந்த ஒரு காதல் சீரழிவைப் பேசாது விட்டுள்ளார். அவரது இடதுசாரி வாழ்விற் படிந்த சாதியக் கறை அவரது பிள்ளைப் பருவச் சாதியத்தை விடக் கேவலமானது என்பதால் அதைத் தவிர்த்திருப்பாரா என்பதை அவரது முன்னாள் வடபுலத்துத் தோழர்கட்கு விளக்க இயலுமாயிருக்கும். அதை மேலும் விரிவாகப் பேசுவது பண்பல்ல. ஆனால் தன்னைப் புனிதரிலும் புனிதர் என்று காட்ட அவர் முயலுகிற நிலையில், அவர் கைநழுவவிட்ட நினைவுகட்குச் சற்று உயிரூட்டுவது தகும் என்று நினைக்கிறேன். நூலில் மீண்டும் மீண்டும் தன்னை வேளாளர் வரிசையில் வைத்து அவர் பேசியுள்ளதால், அந்த மறைப்பும் மறைந்துள்ள ஒரு வேளாளத் திமிரின் வெளிப்பாடா என ஐயுறுகிறேன்.




அன்று கம்யூனிஸ்ட் கட்சி மிகக் கட்டுப்பாடான கட்சியாக இருந்தது. தலைமையின் வழிகாட்டலை மீறி நடப்போர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதை யாரும் அறிவர். தோழர் கே.ஏ. சுப்பிரமணியத்தின் அரசியல் நடத்தை ஒழுங்கீனமானது என்று குற்றஞ்சாட்டும் பொன்னையரால் தோழர் கே.ஏ. மீது கட்சி என் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கூற இயலவில்லை? கட்சியை உடைத்ததில் தோழர்கள் சண், கே.பி.சில்வா, கே.ஏ. போன்றோர் முக்கிய சூத்தரிதாரிகள் எனுமாறு பேசும் அவரால் அந்த உடைவில் தோழர் கார்த்திகேசனின் பங்கை ஏன் கூறவியலவில்லை? எல்லாருடைய அரசியற் சீரழிவுகளையும் சிலாகித்துப் பேசும் அவரால் ஏன் ஈ.பி.ஆர்.எல்.எவ்வில் இணைந்து வி.ஏ. கந்தசாமி சீரழிந்த கதையையும் அவர் பேர் குறிப்பிடும் இயக்கச்சி மணியம் என்பவர் தமிழ்த் தேசிய இயக்க அரசியலின் பின்னால் போய்க் கெட்டலைந்ததையும் பேச இயலவில்லை? அவரது வாயை அடைப்பது தனிப்பட்ட விசுவாசமா? நூலெழுதக் கூலி தந்தோருக்கான செஞ்சோற்றுக் கடனா?

நாகலிங்கம் சண்முகதாசன் என்று சொல்லித் தோழர் சண் ஒரு தமிழர் என்று வலியுறுத்தும் விதமாகத் திரிபுவாதிகள் சிலர் பேசியதைக் கண்டிக்கும் பொன்னையருக்கு அப்படிப் பொது மேடையில் பேசியோரில் பீட்டர் கெனமன் முதன்மையானவர் என்று தெரியாதா? அல்லது அதைச் சொல்வது கெனமனின் திரிபுவாத அரசியலை மழுப்பி அவரைப் புனிதராக்கும் தனது முயற்சிக்குக் கேடாகும் என்று அதைத் தவிர்த்தாரா?

வெட்டிப் பேச்சும் கோள் முடைதலும் அவதூறு பரப்பலும் முற்போக்கு அரசியலல்ல. அவை சராசரியான மனிதனுக்கு எற்ற பண்புகளுமல்ல. நூலில் வரும் அவரது தனிப்பட்ட நிந்தனைகள் அவரைப் பற்றியே நிறையக் கூறகின்றன என்று சொல்வது பொருந்தும். திரிபுவாதம் பற்றி எல்லா நாடுகளிலும் கடும் விவாதம் நடந்தது. பிளவுகளும் நேர்ந்தன. விரிவான விவாதமின்றியே இந்தியாவிற் பிளவு நடந்தது. இலங்கையிலோ ஆழமான விவாதம் நடந்தது. கம்யூனிஸ்ட்டுக்கள் ஆண்ட ஒவ்வொரு நாட்டிலும், கட்சிகள் முடிவில் ஏதோ ஒரு தரப்பில் நின்றன. கியுபாவும் வியட்நாமும் அணிசேராமைக்கான காரணம், இரு நாடுகளும் அன்று அமெரிக்க ஆக்கிரமிப்பிற்கு நேரடியாக முகங்கொடுத்தமையே என மறந்து,

தொடர்ச்சி 14ம் பக்கம்

## வாழ்க்கை அந்தர மாயத்தில்....

மென்பொருள் செய்யும் தொழிலாளி - இவள்
மூளையை விற்கும் தினக்கூலி
மென்பொருள் செய்யும் தொழிலாளி - இவன்
மூளையை விற்கும் தினக்கூலி

ஆறு இலக்கத்தில் கூலிகள் வாங்கிடும்
பேறுகள் பெற்ற பெரும் படிப்பாளி

தொங்குது தோளில் மடிக்கணினி - செவித்
துளையில் வெள்ளை இசைக்கொழுவி
பிந்திவந்த புதுச் செல்பேசி - கையில்
புதுத் தொடுதிரைத் தாள்கணினி

சந்தைக்கு என்றைக்கும் மின்னணுப் பண்டங்கள்
வந்ததும் வாங்கிச் சுமந்திடும் பாவி

வாட்டிடும் வெயில் தெரியாது - சும்மா
குளு குளுக் குளிர்க் காற்றுவரும்
நாட்டின் வறுமை புரியாது - பள
பள பளத்திடும் வேலைத்தலம்

ஆட்குறைப்புப் பற்றி மேலிடம் சொன்னபின்
நாட்களை எண்ணக் குளிரிலும் வேர்க்கும்

கால்களிருப்பது உள்நாட்டில் - அவர்
மூளை வசிப்பது மேல்நாட்டில்
வாழ்வு தினப்படிச் சம்பளத்தில் - முத
லாளி நினைப்படி உள்மனத்தில்

நடப்பு நிலத்தில் நினைப்பு வானத்தில்
கிடக்கு வாழ்க்கை அந்தர மாயத்தில்

தேயிலைத்தோட்டத் தொழிலாளி - அவர்
நீதிக்குப் போரிடச் சங்கம் உண்டு
ஆடைத்தொழிற்றுறை ஊழியரும் - தொழில்
உரிமை கேட்டார் ஒன்றுபட்டு

நாயென மென்பொருட் கூலிகள் கெஞ்சுவர்
ஆண்டையின் காலைத்தொட்டு

நீயும் உழைக்கும் உழைப்பாளி - உண்மை
நினைத்துப் பார்த்தே ஒன்றுபடு
ஓய்வையிழந்த உன் உழைப்பைத் திருடி
உறிஞ்சுவதார் சிந்தித்திடு

உன்னையும் என்னையும் சுரண்டும் அமைப்பை
உடைத்து மாற்றிட வந்துவிடு

மென்பொருள் செய்யும் தொழிலாளி - இவர்
உழைக்கும் மக்களின் கூட்டாளி
மென்பொருள் செய்யும் தொழிலாளி - இவர்
மனசு வைத்தால் போராளி

புதிய பூமியை புதிய நீதியை
படைத்திட வா போராடி..

பாடல் வரிகள் : மு. மயூரன்

## அறியாமை இருள்...

அறியாமை இருள்...
குழவி, குமரி, கிழடென பேதம் பாராது
கொடுமாயுதங்கள் கொண்டு
குருதி தெறிக்க கொன்று குவித்து
வென்று களித்ததுதான் - வெற்றியென
நீ நினைத்தால்,
இன்றின் பொழுதுகளில் - நீ
வாகை சூடியதாய் இன்பங்கொள்!

எனினும்,
மானுடம் ஜெயிக்குமந்த
மாற்று உலகத்தில்
இனமென்றும், குலமென்றும் - இன்னும்
சாதி-மதமென்றும்
மனிதரைப் பிரித்தாள்ந்த குற்றத்திற்காய்
வரலாறுன்னை தண்டிப்பதை
தவிர்த்துவிட இயலாது!

மாக்ஸ் பிரபா

# பு.ஜ.மா.லெ.கயின் புரட்சிகர மேதின நிகழ்வுகள்

**பு.ஜ.மா.லெ.கயின் மேதினக் கூட்டங்கள் இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு, சம்பள உயர்வு, விலையுயர்வினைக் கட்டுப்படுத்தல், தனியார்மயம், தாராளமயம், உலகமயமயத்தை எதிர்த்தல் போன்ற கோசங்களை முன்வைத்து புரட்சிகரமாக மேதினக் கூட்டங்களை நடாத்தியது**













2012 ஜூன் 16, 17ம் திகதிகளில் நடைபெற்ற தேசிய கலை இலக்கியப் பேரவையின் 5வது அனைத்திலங்கை மாநாடு மற்றும் 39வது ஆண்டு விழா நிகழ்வுகளில்...




வெளியிடுபவர்–வெ. மகேந்திரன், இல.15/4, மகிந்தாராம வீதி, கல்கிஸ்சை, அச்சிடுபவர்–கொம் பிரின்ட் சிஸ்ரம், ½, டயஸ் பிலேஸ், கொழும்பு–12